www.tamilarangam.net

# எரிமலை



மே 1996

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அன்புடன் ஆசிரியருக்கு!

www.tamilarangam.net

எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

நான், தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக் ராயவரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவன்: தற்போது புரூணையில் வேலைசெய்கிறேன். தங்கள் எரிமலை இதழை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது..

தமிழ் உணர்வு கொண்ட எவரும் தாங்கமுடியாத அளவுக்கு அட்டூளியங்கள் இலங்கையில் நடக்கின்றன. நவம்பர் 1995 இதழில் தலைவர் அவர்களின் அட்டைப் படத்தைக் கண்டேன். தலைவரைக் கண்டவுடன் தமிழ் உணர்வு தானே வருகின்றது. நானும் நண்பர்களும் பண உதவி செய்ய விரும்புகிறோம். அதற்கான வழிகளை வகுத்துத் தரவும்.

எங்கும் என்றும் நம் தமிழ் வளர்க, நம் தமிழ் இனம் வளர்க:-

எரிமலை இதழைப் பார்க்கும் தோறும், தாயகத்தை வென்றெடுக்க களத்தில் இறங்கும் உணர்வே மேலிடுறது...

என்றும் இவண்
ராம். மதியழகன்
புரூணாய்

தோழமை நிறை எரிமலை
ஆசிரியருக்கு,

தீயில் துடிக்கும் ஈழத்தமிழனை எண்ணித்துடித்து - தீயில் குளித்தவனைத் தாங்கி வந்த எரிமலையும், மண்ணைப் புலிகளும் புலிகளை மண்ணும் காக்கின்ற காட்சியைத் தாங்கி வந்த எரிமலையும், தமது செப்பமிகுச் செய்திகளாய் விடுதலையின் வீரவரலாற்றைக் கண்முன் கொணர்ந்தன! தமிழீழத் தேசிய இனத்தை, இராணுவத் தீர்வின் வழியாகவே பூண்டோடு ஒழிக்கத் துடிக்கும் சந்திரிகாவுக்கு, 'சபுமல்குமரய - வரலாறு' தெரியாது போலும்! ஆளற்ற மண்ணில் கால் பதித்துக் கொடியேற்றிக் கொக்கரிக்கும் பேரினவாதம், வேரற்ற நெடுமரமாய் வீழ்ந்துபடும் காலம்.... விரைந்து வரும்.... அய்யமில்லை! தம்பியின் வழிநடாத்தலில் ஐந்து இலட்சம் மக்களும் வெளியேறி, எதிரியின் முகத்தில் கரிபூசிய நிகழ்வு, இந்நூற்றாண்டின் வரலாற்றில் முகமையான பதிவு! இப் பெருந்திரளான மக்களினின்று முகிழ்த்தெழும் போர்க்கரங்கள், தம்பியின் கரங்களுடன் இணைந்து, கிளர்ந்து பேரினவாதத்தின் குரல்வளை நெரிக்கும்! விலங்குகள் தெறிக்கும்! விடுதலை பிறக்கும்! தமிழீழம் உதிக்கும்! இவ்வரலாற்று பாய்ச்சலை எதுவந்து தடுக்கும்....!

காலச்சூழலின் கடுமைக்கும், கொடுமைக்கும் முகங்காட்டி, எண்ணற்ற




## அக்கறைப் பூக்கள்

ஈகியரின் ஊனையும், உதிரத்தையும் இட்டு எழுப்பப்படும் தமிழீழதேசத்தின் பால் புலம்பெயர்ந்தோரின் நேசக்கரங்கள் மேன்மேலும் நீண்டு வருவதை எரிமலையின் கட்டுரைகள் எடுத்தியம்புகின்றன! இத்தகைய ஒரு வளர்ச்சி நிலையையிட்டு எரிமலை பாடாற்றுதல் கண்டு மிக்க மகிழ்ச்சி! எரிமலையின் ஒவ்வொரு இதழிலும், கலை, பண்பாடு, கல்வி, சீனத்தடை உள்ளிட்டு பலதுறை ஆய்வுப் படைப்புகளும் வருதல் வரவேற்கத்தக்கதாகும்; எரிமலையின் வாசகர்கள் பலரும் சுட்டிக்காட்டுவதுபோல் அச்சாக்க பிழைகள் எழாத வண்ணம் கூடுதல் கவனம் செலுத்துதல் நன்று.

தற்போதைய இந்தியத் துணைக் கண்டத்தின் தேர்தல்கால கூத்துக்களை தாங்களும் அறிந்து கொண்டிருப்பீர்கள் எனக் கருதுகிறேன்; தோழர் கார்முகில் அவர்களை பொதுச்செயலாளராகக் கொண்ட எங்களின் அரசியல் கட்சியான தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சி இத் தேர்தலையொட்டி பின்வரும் முழக்கத்தின் அடிப்படையில் பரப்புரைப் பணிகளைமேற்கொண்டு வருகின்றது:

தமிழக மக்களே!

தமிழ்நாடு விடுதலையையும், தமிழீழ விடுதலையையும் உறுதியாகவும், வெளிப்படையாகவும் ஆதரிக்காத வேட்பாளர்களைப் புறக்கணியுங்கள்!

தோழமை வாழ்த்துக்கள்
பகவதிராஜ்
தூ. நா. பாளையம்
தமிழ்நாடு

அன்புடன் எரிமலை ஆசிரியருக்கு!

இலங்கையில் நடக்கும் கொடுமைகளையும் இனவெறியர்களின் அட்டகாசங்களையும் எமது மக்களின் இன்னல்களையும், எமது வீர வேங்கைகளின் வீரதீரச் செயல்களையும் ஒவ்வொரு மாதமும் நாம் நேரில் காண்பதுபோல் படம் பிடித்தும், அங்கு நடைபெறும் உண்மைச் சம்பவங்களை சிறந்த கட்டுரைகள் மூலம் வெளிக்கொண்டு வந்து இங்கு, அதாவது வெளிநாடுகளில் இருக்கும் தமிழ் மக்களை ஒரு நிமிடம் சிந்திக்க வைக்கும் எரிமலைக்கு எனது சிரந்தாழ்ந்த வணக்கங்கள்.

இன்று எமது மக்கள் சிங்கள அரசினால் மிகவும் கடுமையான இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இது நாம் ஒவ்வொருவரும் அறிந்த உண்மைகளே. ஆனாலும் கூட இன்னும் மேற்கத்தைய நாடுகள் சிறீலங்கா அரசிற்கு பல நிதியுதவிகள் வழங்கிக்கொண்டே இருக்கின்றன. இது சிறீலங்கா ஜனாதிபதியின் கண்துடைப்பு சம்பவங்களில் அடிப்படையிலேயே நடைபெறுகின்றது.

சேயோன் தர்மலிங்கம்.
கனடா.

**அன்பான எரிமலை வாசகர்களே!**

**புலம்பெயர் மண்ணின் அவலங்களைச் சுட்டெரிக்கவேண்டும். இந்த வாழ்வின் அவலத்தை, துயரத்தை வென்றாக வேண்டும். தாய்நிலத்தில் இருந்து வேரறுந்து போய், அன்னியமாகும் நிலை எங்களை வாட்டுகிறது; அலைக்கழிக்கிறது. இந்த வாழ்க்கையின் நிதர்சனத்தை எங்கள் இதயத்துக்குள் மட்டும் வைத்திருக்கப் போகின்றோமா? எங்களைச் சதாகாலில் இடறி விழுத்திட ஆயிரம் கண்ணிகள். வாழ்க்கையைத் தேடி ஓடி நாங்கள் என்னவாய்க் களைத்துப் போக நேர்ந்துள்ளது. உயிர்ப்பில்லை, இனிமையில்லை, அமைதியில்லை, அழகில்லை, .... ஓராயிரம் துயரங்கள். இத்தகைய வேதனைக்குள் மனம் கசங்கி, விதியென வீழ்ந்து போகாமல் துயர் தொலைய எழுவோம். இன்னுமொரு எங்களின் இளைய சகோதரனையாவது இந்த சகதிக்குள் வீழாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற துடிப்பைச் சித்தரிப்போம்; கலையாக்குவோம். தாயகம் நோக்கிய எமது பயணம் தொடரட்டும்.**

**உங்களின் கலையாக்கங்களுக்கு எரிமலை களம் அமைக்க இருக்கிறது.**

**- ஆசிரியர் குழு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு
மே 1996

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# "சூரியக் கதிர்" இராணுவ நடவடிக்கைகளின் பாதக சாதகங்கள்

"சூரியக் கதிர்" இராணுவ நடவடிக்கைகளின் உடனடி நோக்கங்களை அரசாங்கம் நிறைவேற்றிவிட்டது. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதன் நிலப்பகுதியை அது ஆக்கிரமித்துவிட்டது. தப்பி ஓடமுடியாது இருந்த இலட்சக்கணக்கான மக்களை பணயக் கைதிகளாக சிறைப்பிடித்துவிட்டது. குடாநாட்டினுள் விடுதலைப் புலிகளின் அரசை நோக்கிய அரசாங்கத்தையும் சிவில் நிர்வாகக் கட்டுமானங்களையும் சிதைத்துவிட்டது. பெருநிலப்பரப்புக்கான கிளாலிப் பாதையை மூடிவிட்டது. குடாநாட்டினுள் இருந்த விடுதலைப் புலிகளின் நிலகீழ் வைத்தியசாலை, தரைப்படை, வான் எதிர்ப்பு, கடற்படைத் தளங்களையும் கைப்பற்றிவிட்டது. சமாதானத் தீர்வுத்திட்டத்தைக் கருவியாகப் பயன் படுத்தி இராணுவத் தீர்வுகாணும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக இறங்கிவிட்டதையும், இராணுவ ஆக்கிரமிப்பினுள் தமிழர்களின் தேசிய உரிமைகளையும், அபிலாசைகளையும் குழிதோண்டிப் புதைக்கத் துணிந்துவிட்டதையும் இது தெளிவாகக் காட்டுகிறது. எனவே, இத்தகு மரபுரீதியான இராணுவ நடவடிக்கைகளுக்கு, கெரில்லா வகை உத்திகளே பதிலாக அமையும் என்பதையும், விடுதலைப் போர்த் தந்திரோபாய அடிப்படையில் இதுவே வெற்றியைத் தரும் என்பதையும் விடுதலை புலிகள் நிரூபித்து வருகின்றனர். இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான எதிர்ப்பியக்க கெரில்லாப் போர் (Guerrilla war of resistance) என்ற அடிப்படையில் விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் சரியான, திட்டமிட்ட தந்திரோபாய உத்திகளையே கையாண்டு வருகின்றது.

1) நகர்ப்புறத்தின் மீதான எதிரியின் பாரிய இராணுவ நகர்வுகளை தடுக்க முயற்சித்த போதும், இறுதிவரையிலான நேரடி யுத்தம் ஒன்றை அங்கு புரியாது தவிர்த்துக் கொண்டமை. ஆட்பலம் போதாமை, புவியியல் சாதகமின்மை, பொதுமக்கள் இறப்பு ஆகியன இதற்கான காரணங்களாகும். மட்டக்களப்பு, திருகோணமலை நகரங்களின் மீதான முன்னைய இராணுவப் படையெடுப்புக்கள் இதற்கு உதாரணங்களாகும்.

2) நேரடி யுத்தம் ஒன்றின் மூலம், தனது குறைந்த ஆட்பலச் சக்தியை இழந்துவிடாது பாதுகாத்துக் கொண்டமை. போராளிகள், தளபதிகள், தலைமைப்பீடம் ஆகியவற்றை பெரும் சேதம் ஏற்படாது தடுத்துக்கொண்டதன் மூலம், விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டுமானம் உறுதிகுலையாது இருக்கிறது.. சாதகமான சந்தர்ப்பங்களில், எவ்வித இழப்புகளுமின்றியே பாரிய இராணுவ இலக்குகள் விடுதலைப் புலிகளின் வசம் ஆகும் கெரில்லாத் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே உள்ளன.

3) தமிழீழம் போராடி வெல்லப்படவேண்டும். இச்சூழ்நிலையில், சிவில் நிர்வாகம், அரசை நோக்கிய அரசாங்கம் ஆகியவை நிர்வாகப் பயிற்சிக்களமாகவும் ஆயுதப்போராட்டத் துக்கு அனுகூலமாகவுமே இருந்துள்ளன. அரசை நோக்கிய அரசாங்கம் அங்கீகரிக் கப்பட்டு, சமாதான ரீதியில் தேசிய இனப்பிரச்சினை தீரும் வாய்ப்புக்கள் குறைவாகவே இருந்தன. சர்வதேச நிறுவனங்கள் அவ்வங்கீகாரத்தை வழங்க முன்வந்தன. ஆயினும் பலம்பொருந்திய நாடுகள் அதற்கு எதிராகவே இதுவரை செயல்பட்டன. எனவே குடாநாட்டினுள் அரசை நோக்கிய அரசாங்கக் கட்டுமானங்களின் சிதைவைப் பெரிய இழப்பாகக் கருதமுடியாது. உலக சூழ்நிலை எமக்குச் சாதகமாகத் திரும்பும்போது, போராட்டம் வெற்றிபெற அரசுக்குரிய கட்டுமானங்கள் துணையாக அமைவதோடு அவை அரசாங்க கட்டுமானங்கள் அங்கீகாரம் பெறும் சூழலும் அப்போது உருவாகும்.

4) மக்கள் அனைவரையும், வன்னிப் பெருநிலப்பரப்புக்கு கொண்டுசெல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. மேலும், அனைவரையும் குடியமர்த்தக் கூடிய வசதியான நிலைமை வன்னியில் இருக்கவில்லை. எனவே, அரசாங்கம், பொரு ளாதாரத் தடை என்ற ஆயுதத்தை பயன்படுத்திய போதும், அவ்வாயுதத்தால் விடுத லைப் போராட்டம் முறிவடையாது பாதுகாக்கத்தக்கதாக குடிப்பரம்பல் கிளாலியின் இருபக்கத்திலும் இருக்கவேண்டிய நியதி ஏற்பட்டுவிட்டது. இராணுவ ஆக்கிரமிப்பினுள் அகப்பட்ட மக்களை, உணவு, உடை, மின்சாரம் போன்ற அன்றாட வாழ்க்கைச் சலுகைகளால் ஏமாற்றமுடியாது. கொலை, கற்பழிப்பு, கைது, சித்திரவதை இருந்த போதும் மக்கள் விடுதலையை நெஞ்சில் தேக்கி வைத்துக்கொண்டு கிளர்ந்தெழுவார் கள். ஆக்கிரமிப்புக்குட்பட்ட குடாநாட்டில் கெரில்லாத் தாக்குதல்களுக்கு குறைவிராது என்பதை அண்மைக்கால சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

5) சர்வதேச நிலைமைகளில் மாற்றத்திற்கான அறிகுறிகள் துல்லியமாகக் காணப்படுகின் றன. இந்தியத் தேர்தலும், தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியும் இதனைக் கோடிட்டுக்காட்டு கின்றன. உலகச் சூழ்நிலை, சிறீலங்காவின் பிரச்சாரத்தால் மாசு அடைந்திருக்கிறது. மேக மூட்டம் போல், விடுதலைச் சூரியனை மறைத்திருக்கும் இவ்விருள் விலக்கப்பட வேண்டும். தாயகத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் "சூரியக் கதிர்" என்ற இருட் போர்வையை அகற்ற முன்வருவார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எழுபதுகளின் ஆரம்பத்தில், இளம் தலைமுறையினர் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கையிழந்திருந்த காலகட்டத்தில்தான் நான் அரசியலில் நுழைந்தேன். ஆயுதம் தாங்கிய புரட்சிவாதியாகவே நான் அரசியலில் புகுந்தேன். அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் எமது மக்களின் துன்ப, துயரங்களை ஈவிரக்கமின்றி முற்றிலும் புறக்கணித்து வந்த காரணத்தினால் பாராளுமன்ற அரசியலில் எனக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது.

எம் மக்களின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம்தான் ஒரே வழி என்பதில் முழுமையான நம்பிக்கையுடைய புரட்சிகர இளைஞர்களின் துணையுடன்தான் நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

தமிழர்களின் அரசியல் வரலாற்றில் புலிச் சின்னமானது ஆழ்ந்து வேரோடி இருப்பதால்தான் எமது இயக்கத்திற்கு "விடுதலைப் புலிகள்" என்று பெயரிட்டேன். புலிச் சின்னமானது தமிழ்த் தேசியத்தின் புத்தெழுச்சியை உருவகப்படுத்துகிறது. அத்துடன் கெரில்லா யுத்த முறையையும் புலிச்சின்னம் குறித்து நிற்கிறது.

*தேசியத் தலைவர் வே. பிரபாகரன்*
*'எனது மக்களின் விடுதலைக்காக' எனும் நூலிலிருந்து...*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யாழ் குடா:

# ஆக்கிரமிப்பாளனுக்கு மீளமுடியாத மரணப் பொறி

கடந்த ஏப்ரல் 19-ம் திகதி ‘சூரியக்கதிர்-2’ என்னும் இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை சிறீலங்கா அரசு மேற்கொள்ளத் தொடங்கியது. இம்முறை தாக்குதலின் நோக்கம் என்பது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை மீளக்கைப்பற்றுவது என்பதை விட, சூரியக் கதிர் 1 இன்போது வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி - வடமராட்சிப் பிரதேசங்களிற்கு சென்று வாழ்ந்த மக்களை மீண்டும் வலிகாமத்துக்குள் இழுப்பதாகவே அமைந்தது. பெரும் படைபலத்துடன், திட்டமிட்டபடி குறிப்பிட்ட நாட்களுக்கு மேலாக ‘சூரியக் கதிர்-1’ இராணுவ நடவடிக்கையை அரசபடைகள் மேற்கொண்டு, வலிகாமம் பகுதியை கைப்பற்றினாலும் அது ஒரு தோல்வியில் முடிந்த நடவடிக்கையாகவே கருதப்பட்டது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை இறுக்கமான இராணுவப் பாதுகாப்புடன் சென்று யாழ். கோட்டைப் பகுதியில் சிறீலங்காவின் தேசியக் கொடியை பறக்கவிட்டாலும், பலவிதமான சலுகைகளை வாரிவழங்குவதாக அரசு ஆசைவார்த்தைகளைக் கூறினாலும், இடம்பெயர்ந்த மக்கள் அதனை நம்பி மீண்டும் வலிகாமத்துக்குத் திரும்பத் தயாராக இருக்கவில்லை. ஒரு சூனியப் பிரதேசத்தைக் கைப்பற்றி, அந்த பிரதேசங்களை கட்டிக்காப்பாற்ற பெருந்தொகையான படையினரையும் பணத்தையும் செலவு செய்வதனை எதிர்க்கட்சிகள் எதிர்க்கத் தொடங்கினர். அதேவேளை பத்திரிகையாளர்கள், சர்வதேச செய்தியாளர்கள் எவரும் அப்பிரதேசங்களுக்கு செல்ல முடியாதென அரசு அனுமதி மறுத்து வந்ததும், மனித உரிமைகள் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்ததும் தெரிந்தவையே.

இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் உள்ள பிரதேசங்களுக்கு மக்கள் மீண்டும் திரும்பச் செல்ல விரும்பா விடினும், அங்கு எப்படியாவது மக்களை மீண்டும் குடியமர்த்துவதன் மூலம் சர்வதேச அபிப்பிராயத்தை தமக்கு சாதகமாகப் பெறமுடியுமென்பதுடன், அரசைக் குறைகூறும் எதிர்க்கட்சிகள், இனவாத சக்திகளின் வாயையும் அடைக்க முடியுமென அரசு நம்பியது. அதைவிட ஒரு தசாப்தத்திற்கு மேலாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துவந்த யாழ். குடாநாட்டை பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கைப்பற்ற எத்தனித்து முடியாமல் போனது என்பது அரசைப் பொறுத்தவரை ஒரு கௌரவப் பிரச்சினையே. இதனைவிட யாழ் குடாநாட்டை முழுமையாக தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதன் மூலம் விடுதலைப் புலிகளை அழித்தொழித்து விடலாம், அல்லது முற்றாக பலவீனமானதொரு நிலைக்குத் தள்ளிவிடலாம் எனவும் நம்பியது. புலிகளைப் பலவீனப்படுத்தும் எத்தனிப்பை சந்திரிகா தலைமையிலான அரசு பலமுறை எடுத்துள்ளது. “முன்னோக்கிப் பாய்தல் 1, 2, 3”, ‘கைகுலுக்கல்’, ‘இடிமுழக்கம்’, ‘சூரியக்கதிர் - 1’, ‘சூரியக்கதிர் - 2’ என்பவை இத்தொடர் முயற்சிகளுக்குச் சான்றாக இருப்பதுடன், இப்படையெடுப்பிற்கான ஆயத்தங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் - ஜனாதிபதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டி.பி. விஜயதுங்காவின் காலத்திலிருந்தே இப்படையெடுப்பிற்கான திட்டமிடல்கள் நடைபெற்றதாகவும், அதற்கு இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் பூரண ஆசிர்வாதம் இருந்ததாகவும் அண்மையில் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தெரிவித்துள்ளதையும் கவனத்திற்கொள்ளவேண்டியுள்ளது. இதன்படி நோக்கினால், வடபகுதி மீதான படையெடுப்பு ஒரு நீண்டகாலத் திட்டமிட்ட படையெடுப்பு என்பதை நாம் உணர்ந்துகொள்ளலாம்.



'முன்னோக்கிப் பாய்ச்சல்' இராணுவ நடவடிக்கையில் பெருந்தொகையான படைப்பலத்துடன் முன்னேற எதிரி முயற்சித்தபோது, தொகையில் குறைவான விடுதலைப் புலிகளின் போர் அணி தனது மதிநுட்பம் வாய்ந்த தாக்குதல் நடவடிக்கையின் மூலம் எதிரிக்கு பெரும் தேசத்தை விளைவித்து பின்வாங்க வைத்தது. 'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையின் போது அரசபடைகள் பின்வாங்கி தோல்வியைத் தழுவிக்கொண்டாலும், அந்தப் படையெடுப்பின் மூலம், ஒரு கள அனுபவத்தைப் பெற்றுக்கொண்டது எனக் கூறுவது மிகையானதல்ல. ஏனெனில், இப் படையெடுப்பின் அனுபவத்தினூடே அரசு தனது படைபலத்தை வடக்கில் கொண்டுவந்து குவித்தது. கிழக்கில் பல பகுதிகளிலிருந்தும் படையினரை மீளப்பெற்று வடக்கிற்கு கொண்டுவந்து சேர்த்ததுடன் பெருந்தொகையான ஆயுத தளபாடங்களையும் கொண்டுவந்து தனது படைபலத்தை மேலும் பெருக்கத் தொடங்கியது. இந்தப் படைபலப் பெருக்கம் என்பதும் கடந்த பத்து ஆண்டுகளில் அரசு கொள்வனவு செய்த இராணுவ ஆயுத தளபாடங்களை விட கடந்த ஏப்ரல் 95-ன் பிறகு, ஒரு ஆண்டு காலத்துள் பத்து மடங்கு ஆயுத தளபாடங்களை அரசு வாங்கிக் குவித்து தனது படைபலத்தைப் பெருக்கியுள்ளது என்ற இராணுவக் கூற்றும் இங்கு குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

எதிரி மிகப் பெரும் படைபலத்துடன் 'சூரியக்கதிர்-1' தாக்குதலைத் தொடங்கியபோது இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளுக்குச் சென்றனர்.

இருந்தும் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் இருக்கும் மக்களையும் வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடம்பெயருமாறு கடந்த ஒரு மாதத்துக்கு மேலாகவே விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். அதேவேளை போராட்டத்தில் நேரடியான பங்காளிகளாக மாறி பயிற்சிபெறவேண்டிய அவசியம் பற்றியும் மக்களுக்கு எடுத்துக் கூறி விளக்கினர். எதிரியானவன் பெருந்தொகையான படைபலத்துடனும் ஆளணிகளுடனும் மிகப் பெரும் படையெடுப்பொன்றை மேற்கொள்ளும்போது, தொகையில் குறைவான போராளிகளுடன் ஒரு பெரும் மரபுச் சமரை நேரடியாக எதிர்கொள்வதென்பது சாத்தியமற்ற ஒன்றாகவே கருதப்பட்டது. அரசின் நோக்கமும் கூட, விடுதலைப் புலிகளை ஒரு பாரிய மரபுச் சமருக்கு அழைப்பதன் மூலம் அவர்களின் வலிமையை சிதைத்து சின்னாபின்னமாக்கி விடலாம் என்பதுதான்.

இந்நிலையில் இராணுவ தந்திரோபாய ரீதியாகவே பின்வாங்கல் நடவடிக்கை இடம்பெற்றது எனக் கொள்ளலாம். இப் பின்வாங்கல் நடவடிக்கை மூலம் குடாநாடெங்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வரலாம். ஆனால், இதன் மூலம் ஒரு பெரும் பிரதேசத்தை நீண்டகாலத்துக்கு தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதென்பது சிறீலங்கா அரசாங்கத்தின் பொருளாதார நிலைமையைப் பொறுத்தவரை நடைமுறைச் சாத்தியமற்றதாகவே இருக்கும். குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது, இராணுவம் வெளியேறாது தடுக்க, இராணுவ முகாம்களின் முன் குறிப்பிட்ட தொகைப் போராளிகளை முன்னிறுத்தி வைக்க வேண்டிய தேவை இருந்தது. யாழ். குடாநாடு போராளிகளின் தளப்பிரதேசமாக இருந்தவரை, அப் பிரதேசத்தைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டியதுடன் சிவில் நிர்வாகத்தையும் நடாத்தி, ஒரு தற்காப்பு நிலையிலேயே இருக்கவேண்டிய அவசியம் இருந்தது. ஆனால், தற்போது, இராணுவம் அப் பிரதேசங்களைப் பிடித்ததன் மூலம் விடுதலைப் புலிகளின் ஊடுருவலிலிருந்து தாங்கள் அப்பிரதேசங்களைப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தற்காப்பு நிலையில் இருந்த விடுதலைப் புலிகள் இப்போது இராணுவப் பிரதேசங்களுக்குள் ஊடுருவி ஒரு கெரில்லா யுத்தத்தை நடாத்தும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். வலிகாமம் பிரதேசம் தமது பூரண கட்டுப்பாட்டினுள் இருப்பதாகப் படையினர் முன்னர் அறிவித்திருந்த காலத்திலேயே அங்கொன்றும் இங்கொன்றுமாக புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களினால் படையினர் பலியாகிக்கொண்டிருந்த செய்திகளையும் அரசு அறிவித்துக்கொண்டிருந்ததை உதாரணத்துக்குக் குறிப்பிடலாம். 45 ஆயிரம் படையினரை வலிகாமத்துள் வைத்திருந்ததைவிட, அதே தொகையினரை யாழ். குடாநாடெங்கும் பரவலாக நிலைநிறுத்தும் போது படையினரின் செறிவு குறைவடையும் புலிகள் இலகுவாக ஊடுருவி தாக்குதலை நிகழ்த்த இது ஏதுவாக அமையும்.

1987-ல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துடன் வந்த இந்திய இராணுவம் கூட வடக்கு கிழக்கெங்கும் பரவியே இருந்தனர். இலட்சக்கணக்கான படையினருடன் எங்கும் ஊடுருவியிருந்த இந்தியப் படையே, வடக்கு, கிழக்கை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாமல் திணறியது என்பது வரலாறு. இப்போது, சுமார் 45 ஆயிரம் படையினருடன் நிலைகொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தால் இப் பிரதேசங்களை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதென்பதை நிச்சயமாகக் கூறலாம்.

இராணுவம் வடமராட்சி - தென்மராட்சி பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதன் மூலம், அவர்கள் அப்பிரதேசங்களைப் பாதுகாக்கும் தற்காப்பு நிலைக்கு சென்றுள்ளனர். விடுதலைப் புலிகள் இந்தப் படையினர் மீது கெரில்லா யுத்தத்தை தொடரும்போது, வடக்கில் குவிக்கப்பட்ட மொத்தப் படையினரும் மீளமுடியாத ஒரு பொறியினுள் அகப்பட்ட நிலையே உருவாகும்.

**— ஆதிரையன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொழும்பை அதிரவைத்த கடற் கரும்புலிகள்

தமிழீழமக்களை தமது இருப்பிடங்களில், தமது சொந்த பூமியில் தூங்கவிடாது அவர்களை எதுவும் அற்ற அகதிகளாக்கிவிட்டு, விடுதலைப் புலிகளையும் 1996 சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அழித்தொழித்து விடுவோம் என்று கூறிய சிறீலங்காவின் பாதுகாப்பிற்கு 12.04.96 அதிகாலை பிடரியில் விழுந்த அடியானது சிங்கள பேரினவாதத்திற்கு பெருங்கலக்கத்தையே ஏற்படுத்தியிருக்கும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதலானது சிறீலங்காவின் தலைநகரான கொழும்பிற்கும் பரந்துள்ளதானது, தமிழீழ விடுதலைப்புலிகள் எந்த இலக்கையும், எந்த நேரத்திலும் திட்டமிட்டவாறு வெற்றிகரமாக செய்துமுடிக்கக்கூடியவர்கள் என்பதை முழு உலகிற்கும் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. கொழும்பில், தரைவழித் தாக்குதல்கள் மாத்திரமல்ல கடல் வழித் தாக்குதல்களையும் புலிகளால் நடாத்த முடியும் என்பதையும் இந்தத் துறைமுகத் தாக்குதலானது எடுத்துக்காட்டியுள்ளது.

'கொழும்பில் பலத்த பாதுகாப்பு', 'பாதுகாப்புப் படையினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் குவிக்கப்பட்டுள்ளனர்' போன்ற செய்திகள் தினமும் செய்தித்தாள்களில் வந்து கொண்டிருந்தன. இத்தனை பாதுகப்புக்கள் இருந்தும் கொழும்பு துறைமுகத்தினுள் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலானது கொழும்பின் பாதுகாப்பின் மீதும் அதன் பொருளாதாரம் மீதும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

கொழும்புத்துறை முகமானது விடுதலைப்புலிகளால் தாக்கப்படலாம் என சிறீலங்கா இராணுவத்தால் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும். ஆகையால் அங்கு அதிகூடிய பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இவற்றை எல்லாம் ஊடறுத்துக்கொண்டு விடுதலைப்புலிகள் எவ்வாறு தாக்குதல் நடாத்தினர்?

12.04.96 வியாழன் இரவு 9.30 மணியளவில் கொழும்புத் துறைமுகத்திலிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள முகத்துவாரத்தில் இருந்து 'சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவைச்' சேர்ந்த கடற்கரும்புலிகள் துறைமுகத்தை நோக்கிப் புறப்பட்டனர். நள்ளிரவு 12.00 மணியளவில் துறைமுக வாசலை அடைந்த இவ் அணி முதலில் எரிபொருள் கப்பலிற்கும், அதிலிருந்து 700 மீற்றர் தொலைவில் தரித்து நின்ற கப்பல்களிற்கும் நேரக் கணிப்புக் குண்டுகளைப் பொருத்திய பின் விக்கி, பொய்யாமொழி, ஜனார்த்தனன் ஆகியோர் துறைமுகத்திலிருந்து வெளியேறினர். 2700 மீற்றர் தொலைவில் நங்கூரமிட்டிருந்த சிறீலங்கா கடற்படையினரின் அதிபலம் வாய்ந்த 6 கப்பல்களை நோக்கிச் சென்ற சுபாஸ், கரன், மதனி ஆகியோர் தம்முடன் கொண்டு சென்ற குண்டுகள் மூலம் மூன்று கப்பல்களை அதிகாலை 1.30 மணியளவில் தகர்த்தனர். நேரக்கணிப்பு குண்டுகளைப் பொருத்திவிட்டு துறைமுகப் பகுதியை விட்டு வெளியேறிய விக்கி, பொய்யாமொழி, ஜனார்த்தனன் ஆகியோர் ஏற்கனவே தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்த வெடிமருந்து ஏற்றிய கடற்புலிகளின் அதிவேகப்படகில் ஏறிக்கொண்டனர்.



தாக்குதல் தளபதி லெப். கேணல் ரதீஸ், உபதளபதி மேஜர் சுதன், மேஜர் ரவாஸ் ஆகியோர் இப்படகில் இருந்தனர். அதிகாலை 5.30 மணியளவில் துறைமுகத்தில் நுழைந்த இவ் அணி தம்வசம் இருந்த RPG, AK LMG போன்ற ஆயுதங்களால் தரித்து நின்ற ஏனைய கடற்படைக் கப்பல்கள் மீதும், துறைமுகக் கட்டடங்கள் மீதும் தாக்குதல் நடாத்தியது. நீண்ட நேரம் நடந்த இத்தாக்குதலில் 65 இற்கும் மேற்பட்ட குண்டுகள் வெடிக்கவைக்கப்பட்டன. எதிரியுடன் கடலில் இறுதிவரை சமர்புரிந்த இந்த ஆறு கடற் கரும்புலிகளும் கொழும்புக்கடலில் காவியமானார்கள்.

கடற்புலிகளின் இந்த தாக்குதலானது சிறீலங்காவின் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட சவால் மாத்திரமல்ல சிறீலங்காவின் பொருளாதாரத்தின் மீதும் விழுந்த பலமான அடியுமாகும். இன்று இந்தச் செய்தியை சந்திரிகா அரசு மறைத்தாலும் கூட எதிர்காலத்தில் ஏற்படும் பொருளாதாரத் தாக்கத்தினால் இந்தச்செய்தியும் வெளிவரும். சிறீலங்காவின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணிகள் வரிசையில் கடற்கரும்புலிகளின் இந்தத் துறைமுகத்தாக்குதலானது ஒரு முக்கிய பங்கை வகிக்கும்.

கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் தற்போது ஏற்பட்டதல்ல,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரித்தானியரின் காலனியாக இலங்கை இருந்தபோதே துறைமுகம் முக்கியம் பெறத்தொடங்கியது. இலங்கையின் பொருளாதாரம் சுய தேவைப் பொருளாதாரத்திலிருந்து வர்த்தகப் பொருளாதாரமாக மாறி வர கொழும்புத் துறைமுகமானது வளர்ச்சிகண்டு தென் ஆசியாவில், முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக ஆனது.

சிறீலங்கா திறந்த பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடிக்கத் தொடங்கியதோடு துறைமுகத்தின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. கொழும்புத் துறைமுகமானது வளர்ச்சியடைந்து கொண்டுவந்த வேளையில் அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அதிகரித்துக் கொண்டு வந்தன.

அண்மைக்காலத்தில் கொழும்பில் பொருளாதார இலக்குகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து கொழும்பில் என்றுமில்லாதவாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. கொலன்னாவ, அபுகஸ்கந்த, எரிபொருள் களஞ்சியங்கள் மீதும் மத்திய வங்கி மீதும் நடாத்தப்பட்ட தாக்குதலானது சிறீலங்கா பொருளாதாரத்தை கணிசமான அளவு பாதித்துள்ளது. அதிலிருந்து விடுபடுமுன்னரே கொழும்புத்துறைமுகம் மீது நடாத்தப்பட்ட தாக்குதலானது சிறீலங்காவின் கேந்திர நிலையங்களை அதன் ஆயுதப்படைகளால் பாதுகாக்க முடியுமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

கொழும்புத் துறைமுகம் எவ்வேளையும் தாக்குதலிற்கு உள்ளாகும் என்ற அச்சத்தினால் வெளிநாடுகளில் இருந்து வரும் கப்பல்களின் வருகை குறைவதோடு, கப்பல்களின் கூலி, காப்புறுதி என்பவையும் அதிகரிப்பது தவிர்க்க முடியாத என்றாகவரும் இதே சமயம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது பொருட்களை பாதுகாப்பற்ற துறைமுகத்தினுள் ஏற்றுமதி இறக்குமதி செய்து தமது முதலீட்டை பரிசோதனைக்கு உட்படுத்த துணிய மாட்டார்கள்.

மொத்தத்தில் கடல்புலிகளின் கொழும்புத் துறைமுகம் மீதான துணிகரத்தாக்குதலானது சிறீலங்கா அரசாங்கத்தை தற்போதைய சிந்தனையிலிருந்து விடுவிப்பதற்கு பெரும் உதவியாக அமைந்திருக்கும்.

- தருமு

www.tamilarangam.net

# முழு நிலாவுடன் மூச்சுக் காற்றுமாய்...



முற்றும் தேடி வந்ததென்கிறாய்
முழு நிலா
குழுமையும்
பால் வெளிப்பும்
மாசு மறுவற்றும் இருந்ததென்றாய்

பின்னே;
முழி பிதுங்க
முழுதாய் நிலாவை விழுங்கியதார்?

எப்போதும் போலவே
மூச்சுக் காற்றோ கனன்றது
இயல்பின் கலப்பிலும் மேலாய் -
மூச்சே பொசுங்கிடும் படியாய்?

உள்ளிழுக்கும் காற்றிலோ
பிணங்களின் வாடை -
பச்சைக் குருதியின் காந்தல்!
கபாலத்துள் அதிர்ந்தது
கந்தகம்!

வாய்வு முட்டிய வயிறுகளில்
இரப்பை நிறைய
இரைச்சல் மட்டும்!

உலாத்தலை ஓய்க்கவில்லை
உன் கடற் பேய்கள்
வலையோடு போவோரோ
வெறுங்கையராய் வருகின்றார்.

இடிந்த வாழ்வில்
கட்டடக் குறியிடுகள் தன்னும்
நிமிர்ந்தனவா உன் சொல்லால்?

பள்ளிக் குஞ்சுகள்
பாடம் படிக்க
மல்லுக் கட்டுவது
கூசு விளக்குடன்!

பாலுக்குப் பாலகரோ
வேண்டி அழுதபடி -
பாலாய் நிலவு மட்டும்
பொழிகிற கதை பறைந்தாய்.

ஏதேனும் நல்ல மொழி
உதிர்ப்பாய் என்றால்
பேச்சுப் பெட்டகத்தை
மூடிக்கொண்டாய்
பற்றுகிற வயிறுகளில்
பால் தான் வேண்டாம்
நீரேனும் வாரேன் என்றால்
தலை சிலுப்பி காளியானய்!

இவ்வளவுக்குள்ளிருந்தா
நிலாக் காட்டும் உனது
பேய்க்காட்டை நம்பியிருக்க?

சொல்,
முழி பிதுங்க
முழு நிலாவை விழுங்கியதார்?

– செ. பொ. சிவனேசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏவுகணை இராஜதந்திரம்

'கொம்யூனிசத்தின்' வீழ்ச்சியுடன் 'பனிப்போர்' முடிவுக்கு வந்து விட்டது என்று உலகம் கணித்தது. ஆனால், 'மஞ்சள் ட்ரகனின்' எழுச்சியுடன் அது புதிய வடிவம் எடுத்துள்ளதா என, இப்போது உலகம் சந்தேகிக்கின்றது. சோம்பிக் கிடக்கும் ஒரு பூதமாகவே, சீன நாட்டை மாவீரன் நெப்போலியன் நோக்கினான். அதனாலே தான், "துயில் கொள்ளும் இராட்சதனைத் தட்டி யெழுப்பி விடாதீர்கள்" என்று சீனா தொடர்பாக தனது தளபதிகளுக்கு அறிவுரை வழங்கியிருந்தான். துயில் கலைந்து எழுந்தால், அந்த இராட்சதன் அனைவரையும் விழுங்கி விடுவான் என்ற அச்சம் நெப்போலியனிடம் இருந்ததையே, அவனது கூற்று காட்டுகின்றது. ஆனால் இன்று, சீனா தானாகவே எழுந்து நிற்கத் தொடங்கிவிட்டது; ஒரு வல்லரசு வனப்பு அதற்கு வந்து விட்டது. அமெரிக்காவிற்குப் போட்டியான ஒரு இராணுவ - பொருளாதார வல்லரசாகச் சீனா வளர்ந்து வருகின்றது என்பது பலரது அபிப்பிராயம். அதனது பாரிய ஆட்பலமும், பொருளாதாரத்தில் இன்று அது அடைந்து வரும் அபிவிருத்தியும், இராணுவத்துறையில் அது கண்டு வரும் முன்னேற்றமும் சீனாவை உலக வல்லரசாகக் கணிக்கவைக்கின்றன. ஆனால், தாய்வான் என்கின்ற ஒரு சிறு தீவு 'கண்ணுக்குள் விழுந்த தூசியாக' சீனாவை உறுத்தத் தொடங்கியுள்ளது.

சீனாவின் ஒரு பகுதிதான் தாய்வான். சீனப் புரட்சிக் காலத்தில் மாஓ-சே-துங்கின் கொம்யூனிச மக்கள் இராணுவம், அன்றைய சீன ஆட்சியாளரான சியாங்கை ஷேக்கின் தேசிய இராணுவத்திடமிருந்து சீனாவை மீட்கத் தொடங்கியதும், தோல்வியுற்ற சியாங்கை ஷேக்கின் படை தாய்வான் தீவிற்குள் புகுந்து, அதனைத் தனது இறுதிக் கோட்டையாக மாற்றியது. சீன நிலப்பரப்பில் இருந்து 130 மைல் தொலைவில் - கடல் நடுவே - தாய்வான் இருக்கின்றது. மாஓ-சே-துங்கிடம் அன்று, பலமான கடற்படை இருக்கவில்லை; அத்துடன் சியாங்கை ஷேக்கின் படைகளுக்கு அமெரிக்க வல்லரசு ஆதரவுமளித்தது. இவை காரணமாக, தாய்வான் தீவை கொம்யூனிச மக்கள் இராணுவத்தால் வெற்றிகொள்ள முடியவில்லை. இதனால் சீனாவை கொம்யூனிச அரசும், தாய்வானை முதலாளித்துவ அரசும் ஆளத் தொடங்கின. பிளவுபட்டிருந்த நாடுகள் மீண்டும் ஒன்று சேரும் இந்த உலக சூழலைத் தனக்குச் சாதகமாக எடுக்கும் சீனா, தாய்வான் தன்னுடன் இணைந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. சீனாவுடன் இணைவதை தாய்வான் அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கின்றது; ஆனால், அது அமைதி வழியில் நடைபெற வேண்டும் என்று தாய்வான் கூறுகின்றது. இந்தக் கூற்றில் சீனா சந்தேகமடைகின்றது. தாய்வானை ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தவே தாய்வானிய அரசு முயல்கின்றது என்று சீனா எண்ணுகின்றது. மிக விரைவில் தாய்வானில் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரப் பிரகடனத்திற்கான முதற்படியாகத் தாய்வானிய அரசு பயன்படுத்தும் என்று, சீனா அஞ்சுகின்றது. தாய்வானின் இந்த எண்ணத்தில் மண்ணைப் போடும் நோக்குடன், சீன - தாய்வானிய கடலில், தொடர்ச்சியான இராணுவ ஒத்திகைகளையும் ஏவுகணைப் பரிசோதனைகளையும் சீன அரசு நடாத்தி, தாய்வான் அரசை மிரட்டிவருகின்றது.

தாய்வானிய அரசிற்குப் பக்கபலமாக அன்றிலிருந்து அமெரிக்கக் கடற்படை செயற்பட்டு வருகின்றது. சக்திமிக்க விமானந்தாங்கிக் கப்பல் ஒன்றின் தலைமையில் ஒரு அமெரிக்கக் கப்பற்படை தாய்வானுக்கு அருகே சர்வதேசக் கடலில் நிலைகொண்டிருந்தது. ஆனால் சீனாவின் இந்த இராணுவ முஸ்தீபுகளைத் தொடர்ந்து, மேலும் ஒரு விமானந்தாங்கிக் கப்பலின் தலைமையில் ஒரு கப்பற்படையை அமெரிக்கா அனுப்பி உள்ளது. இதனால் பசுபிக் சமுத்திரத்தில் ஒரு இராணுவக் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. 140 போர் விமானங்களுடன் இரண்டு விமானந்தாங்கிக் கப்பல்கள், மற்றும் நாசகாரிகள் - சண்டைக் கப்பல்கள் உட்பட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அமெரிக்கக் கடற்படையினர் தாய்வானுக்கு அருகே நிலைகொண்டுள்ளனர்.

தாய்வான் கடல் எல்லைக்குள் அமெரிக்கக் கடற்படை நுழைந்தால் அதன்மீது தாக்குதல் நிகழ்த்தப்படும் என்று, சீன அரசு எச்சரித்துள்ளது. சீனப் படை தாய்வானைத் தாக்கினால் அமெரிக்கக் கடற்படை தாய்வான் இராணுவத்திற்கு உதவி வழங்கும் என்று, அமெரிக்கா கூறியுள்ளது. விமானந்தாங்கிக் கப்பல்கள் தொடர்பாக ஒரு செய்தியாளர் வினவியபோது, "தேவை ஏற்படும் போது பயன்படுத்தவே" என, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் வாரன் கிறிஸ்தோபர் கூறியிருக்கிறார்.

இரண்டு கோடியே பத்து இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட தாய்வானிடம் நான்கு இலட்சத்து அறுபத்து எட்டாயிரம் (4,68,000) படையினர் உண்டு. அமெரிக்காவின் சக்திவாய்ந்த எவ் 16 சண்டை விமானங்களைத் தயாரிக்கும் நிறுவனத்திடமிருந்து 150 விமானங்களைக் கொள்வனவுசெய்ய, தாய்வானிய அரசு முயன்றுள்ளது. இதற்கு அமெரிக்க செனேற்றும் பச்சைக்கொடி காட்டியுள்ளது. இந்த நிலையில், முப்பது இலட்சம் ஆட்தொகையைக் கொண்ட சீனப்படையைத் தாய்வான் மீது சீன அரசு ஏவி விடுமா? சீன- அமெரிக்க சண்டை நிகழுமா என்பனவே இன்றைய வினாக்களாகும்.

சம பலம் கொண்ட இரண்டு உலக வல்லரசுகள் நேரடியான மோதலைத் தவிர்த்துவிட்டு, மறைமுமான வழிகளில் இராணுவ மிரட்டல்களையும் புலனாய்வுச் சதிகளையும், பொருளாதாரப் பயமுறுத்தல்களையும் மற்றும் அரசியல் பிரச்சாரங்களையும் செய்து ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்வது, பனிப்போரின் ஒரு முக்கிய அம்சமாகும்.

தாய்வான் விவகாரம் தொடர்பாக சீனாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையை இப்போது நடைபெறும் சொற்போர், முன்னைய பனிப்போர்க் காலத்து உதாரணங்களை நினைவூட்டுவதைத் தடுக்க முடியாதுள்ளது.

பழைய பனிப்போரின் சமாதி சோவியத் யூனியனில் உள்ளது என்றால், புதிய பனிப்போரின் கருவறை தாய்வானில் உள்ளதா என்ற கேள்வியும் எழுகின்றது.! ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழினத்தின் மேல் விழுந்த அடி தெற்கிலும் வலிக்கத் தொடங்குகிறது

யுத்தம் வடக்கு கிழக்கு எல்லைகளைத் தாண்டி, தெற்கிற்குக்குச் சென்றுவிட்டது. வடக்கு கிழக்கு எல்லைக்குள் யுத்தத்தை குறுக்கி இறுக்கி, முழு இராணுவ பலத்தையும் பயன்படுத்தி, தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான - குரூரமான - நீதி நியாமற்ற பயங்கர இனவெறியாட்டத்தை சிறீலங்கா அரசு மேற்கொண்டது. ஆனால், நிகழ்கால யதார்த்தம் யுத்தத்தின் எல்லையை அகலப்படுத்தி ஆழப்படுத்தியுள்ளது. சிறீலங்கா அரசினால் சமாளிக்க முடியாத பெரும் பிரச்சினையாக இவ் யுத்தகள விஸ்தரிப்பு உருவெடுத்துள்ளது.

ஒரு தேசிய இனத்தின் மீது பிரயோகிக்கப்பட்ட நீதிக்குப் புறம்பான கொள்கையின் பிரதிபலிப்புக்கள் தெற்கிலே கேட்கத் தொடங்கியுள்ளன. பாதுகாப்பாக இருந்தபடி, தமது தேசிய இனத்தின் நலன்களை பேணியபடி, தீவின் ஒரு பகுதியில் பாதுகாப்பற்ற ஒரு இனத்தின் மீது விழுந்த அடிகள், இன்று தெற்கிலே வலிக்கத் தொடங்கியுள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் தாக்குதலாக வர்ணிப்பது பொருத்தமானதே. சிறீலங்காவில் இராணுவப் பொருளாதார இலக்குகள், தமிழீழப் பகுதிகளுக்கு வெளியிலும் வெற்றிகரமாகத் தாக்குதலுக்கு உள்ளாகும் என்பதை விடுதலைப் புலிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் குறிக்கு, சிறீலங்காப் பாதுகாப்புப் படையினரின் தடைகள், தடுப்புகள், பாதுகாப்புக் கெடிபிடிகள் என்பன குறுக்கே நிற்கமுடியாது என்பதை விடுதலைப் புலிகள் நிரூபித்துக்காட்டியுள்ளனர். தடை முகாம்களை ஏற்படுத்தி சோதனை செய்வதும், கைதுசெய்து விசாரணைகளை மேற்கொள்வதும், போக்குவரத்துத் தடைகளை விதிப்பதும் வெறுமனே தமிழ் மக்களை வதைக்கின்ற நடவடிக்கைகளேயன்றி விடுதலைப் புலிகளின் நகர்வைக் கட்டுப்படுத்துவதாய் இருந்ததில்லை என்பது வெளிப்படையானது.

விடுதலைப் போராட்டம் புதிய பரிமாணத்தை எடுத்திருப்பதைச் சுட்டும் இந்நிகழ்வுகள், சிறீலங்கா அரசு மீளமுடியாத ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுக்க ஆரம்பித்துள்ளது என்பதையும் சுட்டுகிறது.

பெரும் படை பலத்துடன் வலிகாமத்தைக் கைப்பற்றி, யாழ்ப்பாணத்தில் கொடியேற்றிய போது, விடுதலைப் புலிகளின் அஸ்தமனம் ஆரம்பித்துவிட்டதாக வெற்றிகொண்டாடிய சிங்கள ஆட்சியாளர்கள், விடுதலைப் புலிகள் கொழும்பை நோக்கி ஆவேசமாகவும் வேகமாகவும் வருவார்களென எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

இத்தகைய இலக்குகள் தொடரும் என்றே எதிர்பார்க்கலாம். வடக்கில் பெரும் படைபலத்தைக் குவித்து வெறும் நிலப்பரப்பை - மரணபீதியுடன் - பிரயோசனமற்ற விதமாக இராணுவத்தினர் காத்துவருகின்றனர். கிழக்கில் பெரும் பகுதி விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ளும் அளவிற்கு கிழக்கில் படையினர் இல்லையென சிறீலங்கா அரசே ஒத்துக்கொள்ளுகிறது. இந்நிலையில் கொழும்பின் நிலை என்ன? தெற்கிலுள்ள அதன் இராணுவ, பொருளாதார மையங்களின் பாதுகாப்பு நிலை என்ன? என்ற வலிந்த கேள்விகள் எழுந்து நிற்கின்றன.




சமாதானத்தின் பேரால் ஆட்சியை ஏற்படுத்திக்கொண்ட சந்திரிகா, யுத்தத்தின் பெயரால் அதனைக் காப்பாற்ற முயலுகின்றார் என்பது வேதனையான உண்மை. தமிழீழ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விடுதலைப் புலிகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் தேர்தல் காலத்தில் நியாப்படுத்திய சந்திரிகா, தனது முன்னைய நிலைப்பாட்டிற்கு முற்றிலும் முரணான நிலைப்பாட்டை வரித்துக்கொண்டு, பழைய ஆட்சியாளர்களின் பழைய பஞ்சாங்கத்தையே புரட்டுகிறார். "புலிகளுக்கு இராணுவத் தீர்வு, மக்களுக்கு அரசியல் தீர்வு" எனக் கூறிய டிங்கிரி பண்டா விஜயதுங்காவுக்கும் "யுத்தத்தின் மூலம் சமாதானம்" என்று கூறும் சந்திரிகா குமாரதுங்காவிற்கும் எதுவித வித்தியாசத்தையும் காணமுடியவில்லை. அதே இராணுவக் கொள்கை, அதே மனித உரிமை மீறல்கள், அதே 'கோயபல்ஸ்' பாணி பிரச்சாரம், பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை தலைமை தாங்கும் அதே தீவிர முனைப்பு இத்தனையும் செய்துகொண்டு இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படுவதாகவும் சொல்லிக்கொள்கின்றார்.

ஆயிரத்து தொளாயிரத்தி எண் பத்தியேழுக்கு மறுபடியும் சென்றுவிட்டது ஆட்சி. சுற்றிச்சுற்றி ஒரே வட்டத்திலேயே சிங்கள ஆளும் வர்க்கம் பயணத்தை மேற்கொள்ளுகின்றது. பௌத்த சிங்கள மேலாதிக்க மனப்பான்மையுடன், இராணுவ மேல்நிலையை நாடியபடி, தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வுகாண முடியும்?

சிங்கள மக்கள் மத்தியில் தெளிவை விதைக்கின்ற முனைப்போ, உண்மையான வரலாற்றை தெளிவுபடுத்தும் ஆர்வமோ, இனப்பிரச்சினையை உண்மையில் தீர்த்துவைக்கவேண்டும் என்ற துடிப்போ ஆளும் சிங்களத் தலைவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. தந்தையின் இடத்தில் மகள். பிரச்சினைக்கான தீர்வு மீண்டும் தொடக்கத்தில். ஆனால், விடுதலைப் போராட்டம் தொடக்கப் புள்ளியில் இல்லை. அது வெற்றியின் எல்லைகளை உரசி நிற்கின்றது. செல்வநாயகத்தின் இடத்தில் பிரபாகரன் இல்லை. அவர் இன்னொரு தளத்தில், இன்னொரு யுகத்தில் நிற்கின்றார். போராட்டத்தின் இன்னொரு பரிமாணத்தைப் படைத்துநிற்கின்றார்.

— சுப்பு

www.tamilarangam.net

# சந்திரிகாவின் தீர்வுத் திட்டம்



ஜேர்மனி தோல்வியை ஏற்றுக்கொண்டதுடன் முதலாம் உலகப் போர் முடிவை எட்டியது. ஆனாலும், போரில் வென்ற நாடுகள், ஜேர்மனியைச் சும்மா விட்டுவிடத் தயாராக இருக்கவில்லை. தோற்ற பின்னரும் ஜேர்மனிக்குப் பாடம் புகட்டவே அவை விரும்பின. பிரான்சின் 'வேர்சேல்' நகரில், வென்ற நாடுகளின் பிரதிநிதிகள் கூடினர். போருக்கெனத் தமது நாடுகள் செலவிட்ட பணத்தை ஜேர்மனிதான் தவணை முறையில் செலுத்த வேண்டும் எனத் தீர்மானம் எடுத்தன. வருடாவருடம் 'பல்லாயிரம் கோடி' மார்க்குகளை (ஜேர்மனிய நாணயம்) போரில் தன்னை வென்ற நாடுகளுக்குத் நஸ்டஈடாகக் கட்டும்படி ஜேர்மனி கேட்கப்பட்டது. அது மட்டுமல்ல, இவ்வளவு ஆயுதங்களை - இவ்வளவு ஆட்களை மட்டும்தான் படையில் வைத்திருக்கலாம் என்று ஜேர்மனிக்குச் சட்டம் போடப்பட்டது; வாயை மூடிக்கொண்டு ஜேர்மனியும் இவற்றிற்கு உடன்பட்டது. இந்த உடன்படிக்கை 'வேர்சேல் ஒப்பந்தம்' என்று அழைக்கப்படுகின்றது.

இது அரசியல் ஒப்பந்தமல்ல, மாறாக ஒரு அடிமைச் சாசனம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுவர். போரில் தோற்கடித்து விட்டு அல்லது பலத்தைக் காட்டிப் பயமுறுத்தி, தீர்வுகளை அல்லது நிபந்தனைகளைத் திணிக்க முயலும் அரசியல் ஒப்பந்தங்கள் இந்த வகையைச் சார்ந்தவை.

சந்திரிகா அம்மையாரும் 'வேர்சேல் ஒப்பந்தம்' போன்ற ஒன்றை தமிழினத்துடன் செய்துகொள்ள விரும்புகின்றார் என்பது, தெளிவாகத் தெரிகின்றது. வலிகாமம் நிலத்தை ஆக்கிரமித்து விட்டு - அதை ஒரு பணயப் பொருளைப் போல பாவித்துக் கெண்டு - தமிழரின் தேசியத் தனித்துவத்திற்கு விலங்கிட முனையும் ஒரு சூழ்ச்சிகரத் திட்டத்தை, அரசியற் தீர்வுத்திட்டம் என்ற பெயருடன் நடைமுறைப்படுத்த விரும்புகின்றார்.

இந்த அரசியற் தீர்வுத்திட்டத்தை புலிகள் ஏற்றாலும் சரி ஏற்காது விட்டாலும் சரி, எல்லாம் ஒன்றுதான் என்ற அகங்கார உணர்வுடன் சந்திரிகா அம்மையார் உள்ளார். ஏற்றால், தமிழீழ தேசியம் தூக்குக்கயிற்றில் தொங்கும்; ஏற்காதுவிட்டால், புலிகளுக்கு அரசியற் தீர்வில் நாட்டமில்லை என்று உலகிற்குக் காட்டிவிட்டு, 'சமாதானத்திற்கான இரண்டாவது போர்' என்று பெயரிட்டு, மீண்டும் தமிழின அழிப்பைத் தொடரலாம் என்று அரசு எண்ணுகின்றது.

நீண்டகாலமாக நிலவிவரும் அரசியல் பிணக்குகளிற்கான தீர்வுகள் ஏறுவரிசைப்படி - ஒரு வளர்ச்சியை நோக்கிச் செல்வதே உலக வழமை.

ஒவ்வொரு ஒப்பந்தத்திலும் உரிமைகள் அதிகரிக்கப்பட்டு அல்லது அரசியல் அமைப்பால் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு, தீர்வுத்திட்டங்கள் பரிணாம வளர்ச்சி அடைவதே வரலாற்று இயல்பாகும்.

ஆனால், சந்திரிகா அரசு இப்போது வெளியிட்டுள்ள தீர்வுத்திட்டம் வரலாற்று நியதிக்கு முரணாக - வரலாற்றைப் பழிப்பதாக இருக்கின்றது. புலிகளுக்கு எதிராகப் போரிட்ட இந்தியப் படைத் தளபதி லெப். ஜெனரல் கல்கட் அவர்கள், சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தில் உள்ள அம்சங்களைக் கண்டன விமர்சனத்திற்குள்ளாகியுள்ளார். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் உள்ளதைவிடக் குறைந்தளவு உரிமைகளே இந்தத் தீர்வுத்திட்டத்தில் உள்ளன என, அவர் சந்திரிகா அம்மையாரைக் குறைகூறியுள்ளார். அத்துடன், இதைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொள்ளாது; அப்படி ஏற்றுக்கொண்டால் புலிகளை தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் என்றும், அரசியல் தீர்க்க தரிசனம் கூறியுள்ளார்.

வலிகாமச் சமரில் சிங்களப் படைகள் பெற்ற வெற்றியால், சந்திரிகா அம்மையாரின் ஆழ்மனதில் புரையோடிப் போய்க் கிடந்த பேரினவாத வெறி, அரசியற் தீர்வுத் திட்டம் என்ற வடிவுடன் வெளிவந்துள்ளது என்பதே சரியான மதிப்பீடாக இருக்கும். இந்தத் தீர்வுத்திட்டத்தை, தனது குப்பைத் தொட்டிக்குள்தான் வரலாறு உள்வாங்கிக் கொள்ளும். அத்துடன், 'வேர்சேல் உடன்படிக்கை'யை ஒத்த இந்த அடிமைச் சாசனத்தை ஏற்று தமிழினத்திற்கு வரலாற்றுத் துரோகமிழைக்க, புலிகள் இயக்கமும் விரும்பமாட்டாது!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# தமிழீழம்:

தமிழீழ மக்கள் குடும்பக் கட்ட மைவுகளினால் வரிந்தெடுக்கப்பட்ட வாழ்வியல் முறைமையைக் கொண் டவர்கள். தாய், தந்தை, பிள்ளைகள், சுற்றம், உறவு எனப் பற்றிப் படர்ந்து நிற்கும் இந்தக் குடும்ப முறைமை கள் யாவும் 'பாசம்' என்ற வலிய கட்புலனாகாத சங்கிலியினால் இணைவுபடுத்தப்பட்டுள்ளன. ஆனால், தற்போதோ யாவருமே திடுக்கிட்டுத் திகைக்கக்கூடியவாறு, ஈழத்தமிழினத்தின் பாச வேலிகளி லும் நெருப்புமூட்டும் பாதகமான செயலை ஈவிரக்கமின்றி புரிந்து வருகிறது சிறீலங்கா அரசு. மனித குலத்தின் இருப்பிற்கும், அதை பூமி யில் இன்றுவரை வாழவைத்துக் கொண்டிருக்கும் மானிட உணர்வுக ளுக்கும் பெரும் சவால் விடக்கூடிய அராஜகத்தை இவர்கள் அந்திம காலத்திலிருக்கும் வயோதிபர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார் கள்.

கண்டிக்கப்படவேண்டிய இப் பேடிமைச் செயல் தமிழீழத்தில் இரா ணுவம் புகுந்துள்ள பிரதேசத்தில், உலகின் கண்களை மூடிப்போட் டுள்ள இரும்புத் திரைகளுக்குப் பின் னால், சிறைப்பிடிக்கப்பட்டுள்ள வயோதிபர்கள் மீது ஈவிரக்கமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டு வரு கிறது. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலி காமம் பிரதேசத்தில் உள்ள உடுவில் தெற்கில் மட்டும் ஆறுக்கும் மேற் பட்ட வயோதிபர்களைப் படையி னர் எந்தவித காரண காரியங்களு மின்றி மனம்போனபடி சுட்டுக் கொன்றுள்ளனர். வாழ்வில் மட்டு மல்ல சாவோடு சங்கமமாகும் போதும் தம்பிள்ளைகளினால் செய் யப்படும் அந்திமக்காரியங்களைப் பெறமுடியாத நிலையில் இவர்கள் அனாதைப் பிணங்களாகவே எரியூட் டப்பட்டிருக்கின்றனர். பெப்ரவரி முதலாம் திகதியன்று நடைபெற்ற இவ் அநியாயம் ஒரு மாத காலத் தின் பின்பே வெளிவந்திருக்கின்றது.

'ஆராரோ ஆரிவரோ ஆரடித்து நீயழுதாயென...' தாலாட்டில் ஆரம் பித்த உறவு, அந்திமகாலத்தில் அரி சியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு, வரிசையிட்டுப் பார்த்து மகி ழாமல் போனேனேயென அழுது, முகம் மேல் முகம் வைத்து முத்தா டிய வாய்க்கு அள்ளியிடுவனோ அரிசியெனக் கலங்கும் உறவின் மேலும் தீமூட்டியிருக்கிறது அரச படை. ஐயிரண்டு திங்களால் அங்க மெல்லாம் நொந்து பெற்று, உதிரக் கொடி உறவின் உச்சம் சுடலை வரை தொடருவது நமது மக்களின் வாழ்வு. இந்த உறவின் தொடர்புக் காக ஏங்கி, அந்திம சோகத்தோடு நிற்கும் வயோதிபர்களின் மீது சிங்க ளப்படை நடாத்தும் இப்படுகொலை நடவடிக்கைகள் இதயமுள்ள அனை வரையுமே அதிர்ச்சிக்குள்ளாக்கியி ருக்கிறது.

அடையாள அட்டை, பங்கீட்டு அட்டவணை, குடும்ப அட்டை, தமி ழீழத்திற்கு வெளியானால், பொலிஸ் பதிவுப் பத்திரம், தெரிந்தவர்களின் உறுதிப்படுத்தல் பத்திரம் இவைய னைத்தும் உயிர் போல பாதுகாத் துக்கொள்ள வேண்டியவையாகி விட்டன. 'இடிமுழக்கம்' என்ற குறி யீட்டுப் பெயருடன் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கையா லும் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதி யில் இடம்பெயர்ந்த மக்கள் இந்த ஆவண இழப்பு அவலங்களால் பெரும் பாதிப்படைந்திருக்கின்றனர். இடிமுழக்கத்தால் அடையாள அட்டை போன்ற அதி முக்கிய ஆவ ணங்களை இழந்துள்ள நிலையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வயோதிபர்களின் அந்திமகால சோகம்

உயிர்ப்பாதுகாப்பிற்கான அற்ப சொற்ப நம்பிக்கைகளையும் இழந்து என்ன செய்வது; எங்கு போவது என்ற வழிதுறை தெரியாது கலக்கமடைந்துள்ளனர். “கரணம் தப்பினால் மரணம்” என்ற நிலையில் தமது ஆவணங்களைத் தேடிச்சென்ற வயோதிபர்கள் மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள். கைதுசெய்யப்பட்டவர்கள் பலர், காயப்படுத்தப்பட்டவர்கள் பலர், அதிஸ்டவசமாக உயிர்தப்பியோர் சிலரே; அவர்களில் ஒருவர் ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த சோழ. இராசலிங்கம் என்பவராவர்.

வலிகாமம் கிழக்கில் இடிமுழக்க இராணுவ நடவடிக்கையின் பின் “இராணுவம் அங்கிருந்து வெளியேறிவிட்டது” என்ற வதந்தியை நம்பியபடி தமது ஆவணங்களைத் தேடிச் சென்ற பதின்மரில் இவரும் ஒருவராவார். ஆக்கிரமிக்கப்பட்ட தமது வாழ்விடங்களுக்குள் பிரவேசித்தது முதல் தப்பி வந்தது வரை தனது மயிர்க்கூச்செறியும் அனுபவங்களை ஏக்கமும் கவலையும் சேர விபரித்திருந்தார்.

இராணுவம் வெறிகொண்டு பிரவேசித்த இடங்களிலெல்லாம் வேதாளம் சேர, வெள்ளெருக்குப் பூக்க, பாதாள மூலி படர்ந்தது போல மயான வடிவம் பெற்றுக் கிடப்பது தெரிகிறது. இராணுவத்தால் கொல்லப்பட்ட வயோதிபர்களின் சடலங்கள் புதைக்கவோ, எரியூட்டவோ உரியவரின்றி காகங்களாலும், பறவைகளாலும் சல்லடை போடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வடியும் துர்நீர், பிரேதம் வெடித்த நாற்றம் யாவும் இணைந்து அப்பகுதியை மயானத்தை விட மோசமான நிலைக்குத் தள்ளியுள்ளது.

தமது வீடுகளிலுள்ள பொருட்களை எடுக்கச் சென்றபோது, அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. அங்குள்ளவற்றையெல்லாம் கூட்டித் துடைத்து களவாடிச் சென்று விட்டிருக்கிறது இராணுவம். வீடுகளில் இருந்த நீர் இறைக்கும் இயந்திரங்கள் கூட கழற்றிச் செல்லப்பட்டிருந்தன. கிட்கிந்தாபுரிக் குரங்குகள் புகுந்து கூத்தாடியது போல உடுதுணிகள் பொருட்களையெல்லாம் முறையற்ற வகையில் வீசியெறியப்பட்டிருந்தன. வீடுகளில் கதவுகளைப் பெயர்த்து, வீதிகளில் வீசியுள்ளனர். கடைகளை உடைத்துப் பொருட்களைச் சூறையாடியதோடு, தேவையற்ற பொருட்களை வீதியெங்கும் வீசியெறிந்திருந்தனர். ஆனால் படையினர் யாழ்ப்பாணத்தில் ஒரு மாங்காய்களைக் கூட திருடவில்லை என்ற சிவசிதம்பரத்தின் அப்பட்டமான பொய் தான் ஆத்திரத்தை கிளப்புகிறது. இதற்கிடையில் தமிழ் மக்களின் மனங்களை வெல்வது எப்படி என்ற ஆய்வுகள் வேறு நடந்து கொண்டிருக்கின்றனவாம். அதற்கு இராணுவம் மிக மிக ஒழுக்கம் வாய்ந்த கட்டுப்பாடு மீறாத தன்மைகள் மிகுந்த ஒரு இராணுவமாக நடக்க வேண்டும். இவை எல்லாம் கண்கெட்ட பிறகான சூரிய நமஸ்காரச் செயற்பாடுகளே.

இந்த இராணுவ ஆக்கிரமிப்பில் தப்பமுடியாது அகப்பட்டுக்கொண்ட கால்கள் ஊனமடைந்த புத்தூரைச் சேர்ந்த சின்னக்குட்டி முத்தன் (70 வயது) என்பவர் மீது கடுமையான உளவியல் ரீதியான சித்திரவதைகளை மேற்கொண்டது சிறீலங்கா இராணுவம். நடக்க முடியாத நிலையில் இருந்த அவரை சுடப்போவதாக மிரட்டியது. பின் அந்த வயோதிபத் தந்தையை வெளியில் தூக்கி வீசி விட்டு அவரின் குடிசையைத் தீ மூட்டியுள்ளனர். அன்று மட்டும் சாம்பலான குடிசைகளின் எண்ணிக்கை நானூறுக்கும் மேல். தற்போது தமது உறவினருடன் மந்துவிலில் வசித்துவரும் இவர் தன் கண் முன்னைலேயே தனது குடியிருந்த வீடு எரிக்கப்பட்ட காட்சியைப் பார்த்த வேதனையும், சூடும் தன்னிடம் இன்றும் தணியவில்லையென்று கூறினார்.

சிங்காரத்தம்பி இராசையா (85 வயது), மாணிக்கம் இரத்தினம் (60 வயது) ஆகியோரின் மரணத்திற்கான நினைவு பருத்தித்துறை ஓடக்கரைப் பகுதியில் உள்ள கல்லூரி வீதி இல்லமொன்றில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 18-02-96 அன்று 75 வயது வயோதிபரான சின்னத்துரை சுந்தரலிங்கம் என்பவர் மரண





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மடைந்தார். இவருக்கு வைத்தியம் செய்த வைத்தியரான மயில்வாகனம் மாரடைப்பால் இறந்திருக்கிறார். அன்றைய தினம் மொத்தம் மூன்று வயோதிபர்கள் மரணமடைந்திருக்கிறார்கள். இந்தத் தொடர் மரணங்களினால் ஏக்கமடைந்த கந்தையா என்ற வயோதிபரும் சில தினங்களின் பின் மரணமடைந்துள்ளார். இவர்களுடன் வசித்து வந்த வயோதிபர் ஒருவர் வவுனியாவில் வசித்து வரும் தனது உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் இத் தகவல்களைத் தெரிவித்துள்ளார். சம்பவம் நடைபெற்ற 20 நாட்களின் பின்னரே இச்செய்தி கிடைத்திருக்கிறது. எந்தவிதக் குற்றங்களுமற்ற இவ் அப்பாவிகள் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ அழுத்தங்கள் அவர்கள் உயிர்களைக் கொள்ளைநோய் போலக் காவுகொண்டு செல்வதைக் காணமுடிகிறது.

தாம் பிறந்த மண்ணிலேயே வாழ்ந்து, வாழ்வை அணுவணுவாக அனுபவித்து, மண்ணோடு சேர்த்து தம்மையும் விலங்கிட்டுக்கொண்ட இவ் வயோதிபர்கள் முன்னெப்போதும் அடைந்திராத அவலங்களை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைகளின்போது, தமது மண்ணைவிட்டு வெளியேறிய சோகத்தால் நிறைந்து கலங்கும் இவர்கள் தமது வாழ்விடங்களைத் தேடிப்போவதும் அவ்வப்போது நிகழும் நிகழ்வுகளாக உள்ளன. கடந்த சனவரி 7-ம் திகதி புத்தூரில் உள்ள குருநாதர் கோயிலடியில் அமைந்துள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற சபாபதி நடராசா (72 வயது), மாணிக்கம் தெய்வானை (54 வயது), சோமு செல்லப்பா (50 வயது) ஆகிய மூவரும் இராணுவத்தால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். இவர்கள் 11-03-96 அன்று சூட்டுக்காயங்களுடன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

www.tamilarangam.net

இளைஞர்கள், யுவதிகள் தொடர்பாகச் சிறீலங்கா கடைப்பிடித்து வரும் படுகொலை வெறியாட்டம் இப்போது வயோதிபர்கள் மீதும் மிக மூர்க்கமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்றைய தமிழீழப் போருக்கான உந்து சக்தியாக நின்று வயோதிபர்கள் காட்டும் தன்மான உணர்வும், துணைப்படை வீரர்களாகி, சுடுகலன் ஏந்தி வலம்வரும் வீரமும் சிங்கள அரசுக்கு வயோதிபர்கள் மீது எத்தகைய ஆத்திரத்தை உருவாக்கி வைத்திருக்கிறது என்பதை சிறீலங்கா இராணுவத்தின் மனிதத்தன்மை இல்லாத தாக்குதல்களிலிருந்து புரிய முடிகிறது. நோயுற்று; பிள்ளைகளை இழந்து; தள்ளாடிய தேகமும், பஞ்சடைந்த விழிகளுமாக சிறை இருக்கும் நிராயுதபாணிகளான இவ்வயோதிபரை அழிக்கும் மனம் குழம்பிய இராணுவமாக சிங்கள இராணுவம் செயற்படுகிறது.

தம் தேசத்தில் நிகழும் இளைய மரணங்களையும், வீரம்செறிந்த போராட்ட நிகழ்வுகளையும் கண்டு வயோதிபர் கூட தமிழீழ மண்ணில் தளர்வு நீங்கி நின்றதும்; செயற்பட்டதும் உண்மையான நிகழ்வுகளே. இராணுவம் பெரும் படையணிகளுடன் வந்தாலும் கலங்காது தம் வீடுகளிலேயே துணிச்சலுடன் அவர்களை எதிர்கொண்ட வயோதிபர்களும் உண்டு. ஒரு குறுங்காலத்தில் தமிழீழ விடுதலைப் போரில் ஓர் உன்னதமான பக்கமாக தம்மை அடையாளப்படுத்திக் கொண்டவர்கள் தமிழீழத்தின் முதியவர்கள். இவர்களின் இழப்பும், அந்த இழப்புகளோடு கலந்துள்ள சோகமும் உயிர்ப்பின் மையத்தையே ஊடுருவிப் பாய்கிறது. இந்த வயோதிபர்களின் அந்திம சோகத்தால் தமிழீழ வானமே சிவந்துபோய் கிடக்கிறது.



இவர்கள் இழந்து போயுள்ள வாழிடங்கள் பற்றிய துயரங்கள் ஒரு புறமாகவும்; அகதி வாழ்வின் சோகங்கள் மறுபுறமாகவும் இருக்க; இழப்பும், பிரிவும், ஏக்கமும் இடிமுழக்கத்தை விட பேரொசையாக அவர்கள் மனங்களில் அதிர்கிறது.

தாம் பெற்று, வளர்த்து, சீராட்டி வளர்த்த பிள்ளைச் செல்வங்கள் தங்கள் வாழ்வின் இறுதிக் கணத்திலும் தம் அருகில் நிற்காத வேதனையும் கொழுந்து விட்டு அவர்களை எரிக்கிறது.

**— கி. செ. துரை**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகா அரசின் தீர்வுத்திட்டமும் புலம்பெயர் தமிழீழ மக்களும்

## - ஒரு பார்வை -

"ஸ்ரீலங்கா அரசின் தீர்வுத் திட்டம் பல நல்ல அம்சங்களைக் கொண்டுள்ளது. அதை ஏன் நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது?" இப்படியொரு கேள்வி சமீபகாலமாக பல மேலைத்தேசப் பத்திரிகையாளர்களால் எழுப்பப்பட்டு வருகிறது. இந்தக் கேள்வியானது இவர்களது தொடர்புச் சாதனங்கள் மூலமாக புலம்பெயர் தமிழ் மக்களிடையே பலமாகவும் முன்வைக்கப்படுகிறது. இத்தீர்வுத்திட்டத்தை ஏற்கவேண்டும் என்பதில் எவ்வளவு அக்கறைகாட்டுகிறார்களோ அதேபோல, புலம்பெயர் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து அந்தத் தீர்வுத் திட்டம் ஒரு வாசகத்தையாவது கொண்டிருக்கவில்லையே என்ற உண்மையை ஐரோப்பிய மக்களிடையே எடுத்துச் சொல்வதில் இவர்கள் அதேயளவு அக்கறை காட்டத் தவறிவிட்டார்கள்.

ஐரோப்பாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் கடந்த பத்தாண்டுகளாக ஐரோப்பியச் சமூக (EC) வாழ்க்கை அமைப்புடனேயே இணைந்து வாழ்ந்து வருகிறார்கள். பெரியவர்களைவிட சிறப்பாக தமிழ்க் குழந்தைகள் ஐரோப்பிய ஒன்றியம் சார்ந்த வாழ்க்கை முறைமைக்கே பெருமளவு இசைவாக்கம் அடைந்திருக்கிறார்கள். இதுபற்றி சிறீலங்கா அரசின் தீர்வுத்திட்டம் எத்தகைய அக்கறையும் காட்டிக்கொள்ளாவிட்டாலும் அந்தத் தீர்வுத்திட்டமானது இவர்களைப் பற்றி ஏதாவது சிந்தித்துள்ளதா என்ற கேள்வியை எழுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பு ஐரோப்பிய பத்திரிகையாளருக்கும், சமூக அமைப்புக்களுக்கும் இருக்கிறது. இந்தக் கேள்விக்கு ஏற்ற விடை காணாமல் அகதிகளைத் திருப்பியனுப்பல் தொடர்பாக வாதிடும் கடைசிப் பணிக்குள் முதலிலேயே பிரவேசித்து விடுவது பொருத்தமானதுதானா என்பது இங்கு முக்கிய கேள்வியாகும்.

தமிழீழ தேசத்தை அமைப்பதானால் அதற்கு போதிய மூலவளங்கள் இல்லை. எனவே சிறீலங்கா அரசுடன் இணைந்து போகும் தீர்வொன்றை ஏற்பதே சிறந்தது என்ற கருத்தும் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய உலகில் வளங்கள் என்பது மூலப்பொருட்கள் சார்ந்தது அல்ல; மனித அறிவும் உழைக்கும் திறனுமே என்பதை அறிந்துகொண்ட மக்கள் குழுவாகவே புலம்பெயர் தமிழ் மக்கள் தம்மை உருவாக்கிக்கொண்டுள்ளார்கள். தமது தேசத்தை புதிதாக கட்டியமைப்பதற்குரிய பயிற்சிக் களமாகவே புலம்பெயர் மக்களின் வெளிநாட்டு வாழ்க்கை அமைவு பெற்றிருக்கிறது. எனவேதான் புலம்பெயர் மக்கள் பற்றி எந்த வாசகத்தையும் கொண்டிராத தீர்வுத்திட்டமானது இதுவரை கடந்துவந்த புலம்பெயர் வாழ்வியல், தொழில்துறை சார் அனுபவங்களையே நாசமாக்கிவிடும் என்ற அச்சத்தில் உள்ள நியாயத்தன்மையை இவர்கள் தமது செய்திகளில் சேர்ப்பதாகத் தெரியவில்லை.

> **புதிய உலகில் வளங்கள் என்பது மூலப்பொருட்கள் சார்ந்தது அல்ல; மனித அறிவும் உழைக்கும் திறனுமே என்பதை அறிந்துகொண்ட மக்கள் குழுவாகவே புலம்பெயர் தமிழ் மக்கள் தம்மை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். தமது தேசத்தை புதிதாக கட்டியமைப்பதற்குரிய பயிற்சிக் களமாகவே புலம்பெயர் மக்களின் வெளிநாட்டு வாழ்க்கை அமைவு பெற்றிருக்கிறது.**

மேலும் அரசியல் தீர்வுகளைப் போலவே நாம் பொருளாதாரத் தீர்வுகள் பற்றியும் நிறையச் சிந்திக்க வேண்டியுள்ளது. ஏனெனில் சிறீலங்காப் பொருளாதாரம் என்னும் புகைவண்டி இப்பொழுது முற்று முழுதாகப் பாதாளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. மக்களின் சகஜ வாழ்வு அங்கு முற்றாகச் சீர்குலைக்கப்பட்டுள்ளது. போர்ச்சூழ்நிலை மாற்றமடைந்துவிட்டால் மக்களின் அன்றாட வாழ்வுக்குப் பதில் சொல்லக்கூடிய நிலையில் அந்நாட்டின் பொருளாதாரம் இல்லை. இந்நிலையில் பணவீக்கத்திலும், நாட்டின் செல்வங்களையெல்லாம் அடகு வைத்த நிலையிலும் இருக்கும் சிறீலங்கா அரசின் பொருளாதாரத்துடன் தாமும் இணைந்துகொண்டால் அது தம்மையும் அதல பாதாளத்திற்கே அழைத்துச் செல்லும் என்ற உண்மையை யாருமே சிந்தித்துக் கொள்ளமுடியும்.

அன்றியும் இதுவரை சிறீலங்கா அரசு நிகழ்த்திய தவறுகளுக்கான பொறுப்பை அரசோடு சேர்ந்து தாமும் பகிர்ந்துகொள்வதான ஒரு தீர்வை தமிழீழக் குடிமக்களோ அல்லது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களோ நிச்சயமாக ஏற்கத் தயங்குவார்கள். இதுவரை கடந்து வந்த புலம்பெயர் வாழ்வும், அதன் அனுபவங்களும் சிறீலங்கா அரசின் வரலாற்றுத் தவறுகளை பொறுப்பேற்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுவிடக்கூடாதென்ற எச்சரிக்கை ஒவ்வொரு தமிழரிடமும் ஏக்கமாகவே உள்ளது.

சிறீலங்கா அரசின் அதிகார எல்லைக்குட்பட்ட தீர்வை ஏற்பதும், இதுவரை நடாத்திய அடாவடித்தனங்களை ஏற்பதும் வேறுவேறான சங்கதிகளல்ல என்ற உண்மையை இரு உலக யுத்தங்களை சந்தித்த ஐரோப்பியச் சூழலில் நின்று மிக இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும். எனவேதான் தீர்வுத்திட்டமானது தமிழரின் சுயநிர்ணய உரிமையை உள்ளடக்கியிருக்க வேண்டுமென்ற எண்ணம் புலம்பெயர் மக்களிடையே உறுதியாக நிலைத்துள்ளது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலும் மனித உரிமையைப் பேணுதலும்

"சிறீலங்காவின் வடக்கு கிழக்கு என அழைக்கப்படும், தமிழீழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தம் தங்கள் கவனத்தில் இடம்பெற்றுள்ளமை நாமறிந்த நிச்சயமான ஒன்று. நாடுகளுக்கு இடையிலும் நாட்டினங்களுக்கு இடையிலும் மனித உரிமைகளையும் அமைதியையும் வலுப்படுத்த உழைத்துவரும் உலகின் அதிமுக்கிய நிறுவனமாகிய தங்கள் நிறுவனம் சிறீலங்காவிலும் நாட்டினங்களுக்கு இடையில் அமைதியையும் பாதுகாப்பையும் மீளவும் ஏற்படுத்த தங்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்க விரும்பும்" என்று உறுதியாக நம்புகிறோம். பல நாடுகளும், பல சர்வதேச நிறுவனங்களும் எடுத்த - எடுத்துவரும் முயற்சிகளாலும், ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர், 500000 தமிழர்கள் தமது சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகளை வழங்கும்படி விடுத்த சர்வதேச அழைப்பாலும் தமிழீழத்தில் மக்களுடைய துன்பங்கள் குறைந்துள்ளன. ஆனால், சிறீலங்கா அரசாங்கம் வடக்கு கிழக்கு பிரதேசத்தின் உண்மையான யதார்த்தத்தினை ஏற்க மனவிருப்பமின்றி மலட்டுத்தன்மையான முயற்சியில் இறங்கி தமிழ் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிப்பதற்கு முயற்சி எடுக்கின்றது. இதன் விளைவாக தீவு முழுவதும் வாழும் தமிழ் மக்கள் சொல்லொணா மனித உரிமை வன்முறைகளையும் கடுந் துன்பங்களையும் அனுபவிக்கின்றனர்.

## விடுதலைப் புலிகள் தமிழ்ப் பிரதேசத்தில் இறைமையும் அரசுநோக்கிய அரசும் உள்ளவர்கள்

தீவு பற்றிய தந்திரோபாய மதிப்பீடு (Strategic survey) 1994-95 குறித்து தங்கள் கவனத்தை திருப்பும்படி கேட்கின்றோம். அதில் தமிழர்களுடைய தாயகத்தில் அவர்களுக்கு உள்ள அரசு நோக்கிய அரசு (De facto) குறித்து தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர். "தமிழ்ப் பிரதேசங்களில் செயலளவு இறைமையை ஏற்கனவே கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் மிகச் சொற்பமானவைகளையே கொடுக்க முனைகிறது. விடுதலைப் புலிகள் வரிகளை அறவிடுகின்றனர். உள்ளூர் அரசாங்கத்தை (local governement) கொண்டு நடாத்துகின்றனர். அவர்களுக்கு இல்லாதது சர்வதேச அங்கீகாரம் ஒன்று மட்டுமே. கொழும்பினால் அதனை அனுமதிக்க முடியாமல் உள்ளதினால் அது அரசுக்களின் கூட்டமைப்பு முறைமை ஒன்றை ஏற்படுத்துமா?" என்கிறது சர்வதேச தந்திரோபாய மதிப்பீடு அறிக்கை.

## சிறீலங்கா - தமிழீழ உளவியல் ஒப்பந்தம் முறிவு

இந்தப் பின்னணியில்தான் சிறீலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் ஈடுபட்டு பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார்கள். பேச்சுவார்த்தைகளின் பொழுது என்ன நடந்தது என்பதையும் அரசாங்கம் எவ்வளவு அக்கறையுடன் பேச்சுவார்த்தையை நடாத்தியது என்பதையும் தெரிந்துகொண்டாலே ஏன் விடுதலைப் புலிகள் அதனைக் கைவிட்டனர் எனபதனையும் விளங்கிக்கொள்ளலாம். முதலாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட முடிவுகள் கூட அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசாங்கம் தமிழ்ப் பிரதேசங்கள் மீது விதித்திருந்த பொருளாதாரத் தடைகளை பெரும்பாலும் அகற்றிவிட்டதாக உலகுக்குத் தம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டம் அடித்துக்கொண்டது. ஆனால், உண்மை என்னவெனில் அரசாங்கம் இந்த அறிவித்தலை விடுத்து ஒரு கிழமைக்குப் பின்னரும் கூட வவுனியாவில் சோதனை முகாம்களில் இருந்த இராணுவத்தினர் தமக்கு அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை என்று கூறி மக்களைத் தடைநீக்கம் செய்யப்பட்டதாக கூறப்பட்ட பொருட்கள் எவற்றையும் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. ஆனால், இந்த இராணுவத்தினர் மோதல் தவிர்ப்பு முறிவடைந்த ஒரு மணி நேரத்துக்குள் பொருளாதாரத் தடைகளை இறுக்குவதில் உடனடியாக ஈடுபட்டமையை அவதானிக்கவேண்டும். இந்த இராணுவ நடவடிக்கைகள் அரசாங்கத்தின் வழமையான நடவடிக்கைகளின் போது அரசாங்கம் எடுக்கும் முடிவுகள் எவ்வாறு நடைமுறையாகின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாக உள்ளது. அத்துடன் விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பு முறைவடைவதற்கு *(19-04-1995)* சரியாக ஒரு மாதத்திற்கு முன்பாகவே பேச்சுவார்த்தைகளின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் அமுல்படுத்தப்படாமல் இருப்பதையும், மோதல் தவிர்ப்பு முறிவடைவதற்கான சூழ்நிலை உருவாகி வருவதற்கான நியாயமான காரணங்களையும் அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தனர். ஆயினும் இந்த எச்சரிக்கைகள் எதையும் கவனத்தில் கொள்ளாது அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளையோ அல்லது எடுக்கப்பட்ட முடிவுகளை அமுலாக்குவதையோ நடைமுறைப்படுத்தாது, தங்கள் அரசியல், இராணுவ நலன்களை எய்துவதை நோக்காக் கொண்டு நான்கு மாத காலத்தை வீணே இழுத்தடித்தது சிறீலங்கா அரசாங்கம். சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களுடைய துன்பங்களைக் குறைப்பதற்கு நாளாந்த வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாக உள்ளவற்றை கூட அனுமதிப்பதற்கு எதுவித உடனடி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இதன்மூலம் சிறீலங்காவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் உளவியல் ஒப்பந்தம் (Psychological contract) முறிவடைந்துள்ளமை தெளிவாக நிரூபணமாகிறது.

**'தமிழீழ மக்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே மனித உரிமையைப் பேணலாம்'**

**'மக்களின் இயக்கத்தினை அங்கீகரிப்பதும் துன்பப்படும் மக்களுக்கு உதவும் வழியாகும்'**

*– ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் 52-வது அமர்வில் சர்வதேச கல்வி அபிவிருத்தி அமைப்பு விளக்கம்:*

## தீவின் மனித உரிமை மீறல் பிரச்சினையின் மூலகாரணம்

*26-06-1995*-ல் அமெரிக்க மாவட்ட நீதிபதி மதிப்புக்குரிய டிக்கின்சன் டெபோவைஸ் (Hon. Judge Dickinson Debevoice) வழங்கிய தீர்ப்பொன்றில் "சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களை அவர்களுடைய இனத்துவம் (ethnicity) அரசியல் கருத்து என்பவற்றுக்காக இனத்துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி வருகிறது" எனக் கூறியுள்ளார். மேலும் அவர் தமது தீர்ப்பில் சிறீலங்காவின் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் *1948* முதல் இன்றுவரை தொடர்கிறது எனக் குறிப்பிட்டுள்ளார். அவரது முடிவின் படி தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் இன்று நிகழும் ஆயுதப் போராட்டத்தின் விளைவு அல்ல. மாறாக தமிழர்களுக்கு எதிரான இனத் துன்புறுத்தல்களின் தொடர்ச்சியே. இவ் இனத்துன்புறுத்தல், நீதி முறைமையற்ற தடுப்புக்கள், மரணங்கள், காணாமல் போகின்றமை போன்றவற்றை அரசாங்கத்தின் முகவர்கள் அல்லது ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் அரசாங்கத்தினால் தண்டிக்கப்படாத நிலையில் செய்வதை உள்ளடக்குகின்றது. அத்துடன் அவர் தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தை, "தமிழ் மக்களை அவர்களுடைய சொந்த மண்ணிலேயே நாடற்றவர்களாகவோ அல்லது இரண்டாந்தர பிரஜைகளாகவோ மாற்றுவதற்கு சிங்கள பெரும்பான்மையினர் பல தசாப்தங்களாக எடுத்துவரும் முயற்சியின் விளைவாக" காண்கின்றார். இதனை சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் *30-12-1995*-ம் திகதிய வீரகேசரிப் பேட்டி தெளிவுபடுத்துகின்றது. சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர், "பிரபாகரன் அவர்கள் இல்லையென்றால் தமிழர்கள் சிறீலங்காவில் மானத்துடனும் மரியாதையுடனும் வாழ்ந்திருக்கமுடியாது" எனப் பகிரங்கமாக அறிவித்ததுடன், "பிரபாகரன் *1983*-ம் ஆண்டிலிருந்து நீதியான யுத்தத்தை நடாத்துகிறார்" எனவும் உறுதியாகக் கூறுகின்றார். இதனை விட சிறீலங்காவின் பயங்கரவாதக் கட்டுக்கதைகளை இனங்காண்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை. அவ்வாறே மற்றொரு சிறீலங்கா அமைச்சாரான அல்ஹாஜ் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா மாசி *1996*ல் மட்டக்களப்பு வின்சன்ட் கல்லூரியில் நிகழ்த்திய உரையில், "தமிழ் மக்களால் நடாத்தப்படும் யுத்தம் நீதியானதும் ஏற்புடையதுமானதொன்று. அதனை ஜனநாயக வழிக்கு இட்டு வருவதற்கான பேச்சுவார்த்தை முயற்சிகள் தேவை" எனக் கூறியுள்ளார். அதுமட்டுமல்ல, சிறீலங்காவின் ஜனாதிபதி பலமுறைகளில் பகிரங்கமாகவே தமிழர்களுக்கு குறைபாடுகள் உண்டெனவும் விடுதலைப் புலிகள் தீவின் மூன்றில் இரண்டு பங்கு கடல் பரப்பையும் மூன்றில் ஒன்று நிலப்பரப்பையும் தமது அரசு நோக்கிய அரசில் (De facto) வைத்திருக்கிறார்கள் எனவும் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆயினும் சிங்களவர்களின், தமிழர்களை இரண்டாந்தர பிரஜைகளாகவோ, நாடற்றவர்களாகவோ மாற்றவேண்டும் என்னும் முயற்சிகளே தீவில் யுத்தநிலையைத் தொடரச்செய்கிறது. இதுவே எல்லா மனித உரிமை வன்முறைகளினதும் மீறல்களினதும் அடிப்படையான மூலகாரணமாக உள்ளது.

## சுயநிர்ணய உரிமைப் பிரகடனமே தமிழ் மக்களின் உயிர்வாழ்தலுக்கு ஒரே வழி

கடந்த புரட்டாசி - ஐப்பசி - கார்த்திகை *(1995)* மாதங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட 'முன்னோக்கிப் பாய்தல்', 'கைகுலுக்கல்',

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

'மின்னலும் இடியும்' என்ற குறியீட்டுப் பெயர்களை உடைய இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக பெருமளவிலான உயிர் இழப்புக்களும், உடமைகள், குடியிருப்புக்கள், தொழில் நிறுவனங்களின் நாசமாக்கலும் ஏற்பட்டன. அகதிகளாக புகலிடங்கள் தேடிய இந்து, கிறிஸ்தவ கோவில்கள், அரசாங்கப் பாடசாலைகள் கூட குண்டுவீச்சுக்களுக்கும் எறிகணைத் தாக்குதல்களுக்கும் இலக்குகளாக்கப்பட்டன. நவாலி சென். பீற்றர் தேவாலய வளவுக்குள் புகலிடம் தேடிய 120 அகதிகளை ஆறு குண்டுகளை வீசிப் படுகொலை செய்தமையும், பள்ளிச் சீருடையில் நாகர் கோவிலில் படித்துக்கொண்டிருந்த 26 மாணவர்களை விமானக்குண்டு வீச்சினால் படுகொலை செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்க இரு உதாரணங்களாக உள்ளன. இத்தகைய இராணுவ பலாத்காரச் செயல்களினால் யாழ்ப்பாண நகர் நோக்கி அலை அலையாக மக்கள் இடம் பெயரத் தொடங்கினர். தொடர்ந்தும் இடம்பெற்ற "சூரியக்கதிர்" இராணுவ ஆக்கிரமிப்பு 500000 மக்களை இராணுவ முற்றுகைக்கு தப்பி புலிகளின் அரசு நோக்கிய அரசு (De facto) பிரதேசத்துள் பாதுகாப்புத் தேட வைத்தது. குடிசன அடர்த்தி கூடிய தமிழர் தாயகத்தின் முக்கிய பகுதியான யாழ்ப்பாணத்தை இராணுவச் சுற்றிவளைப்புக்கு உள்ளாக்கி விட்டு உலகிற்கு யாழ்ப்பாண மக்களை விடுவித்து விட்டோம் எனப் பறைசாற்றுவது எனும் இராணுவத் தந்திரோபாயத்துடன் சிறீலங்கா இந்த மக்கள் மீதான முற்றுகையைத் தொடங்கியது. ஆயினும் இராணுவ சுற்றிவளைப்புக்கு முன்பே மக்கள் யாழ்ப்பாண நகரையும் வலிகாமம் பகுதிகளையும் விட்டு பாரிய இடப்பெயர்வு செய்தமை சந்திரிகா அரசாங்கத்தின் நோக்கைச் சிதறடித்தது. அத்துடன் இந்தப் பாரிய இடப்பெயர்வு ஆனது தமிழ் மக்கள் இனியும் சிறீலங்கா அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு தாம் ஆளாவதை வெளிப்படையாக மறுக்கிறார்கள் என்பதையும் உலகுக்கு நன்கு விளக்கமாகத் தெளிவுபடுத்தியுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், தமிழீழ மக்கள் தாம் சுயமரியாதையுடன் வாழ்வதற்கு உறுதிபூண்டு, ஆக்கிரமிப்பாளர்களின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டு வாழ்வதை விட சுதந்திரமாக வாழ்வதற்காக எத்தகைய துன்பதுரிதங்களையும் ஏற்க ஆயத்தமாக உள்ளனர் என்ற உண்மையை இந்தப் பாரிய மக்கள் இடப்பெயர்வானது உலகுக்குப் பிரகடனப்படுத்தியுள்ளது. உண்மையில் இந்த மக்களின் போராட்டமானது முழுமையான சுயநிர்ணய உரிமைப் போராட்டமே. அத்துடன் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை பல அவதானிகள் எடுத்த எடுப்பிலேயே நிராகரிப்பது போல நிராகரிக்கக் கூடாது. அப்படித்தான் சர்வதேச சமூகம் இதற்கான எல்லா எதிர்கால கோரிக்கைகளையும் நிராகரிக்க விருப்புக்கொண்டாலும் கூட சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபடுபவர்களை அது தடுத்து நிறுத்தமாட்டாது. மாறாக, இதற்கான கோரிக்கை மேலும் வன்மையான முறையில் எழுப்பப்படும். 'டைம்ஸ்' சர்வதேச பத்திரிகையின் செய்தியாளரான தோமஸ் கிறிஸ்தோப்பர் பின்வருமாறு அபிப்பிராயப்படுகிறார். "(இராணுவத் தலையீட்டால்), யாழ்ப்பாணத்தில் சிக்கலான நிலை தோன்றியுள்ளது. இரு சமுதாயங்கள் (தமிழ் - சிங்கள) மேலும் பிரிவுக்குள்ளாகியுள்ளது. (ஏற்கனவே ஒரு நாளுக்கு 650000 டாலர்களாக உள்ள) யுத்தச் செலவுகள் மேலும் அதிகரித்துள்ளன. யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டமை மிகுதியாக உள்ள சிறீலங்கா முழுவதிலும் பாதுகாப்பற்ற நிலையைத் தோற்றுவித்தது. பாதுகாப்பு பலப்படுத்த வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்துக்கு வெளியிலும் கிழக்கு மாகாணத்திலும் வடக்கின் பிரதான நிலப்பரப்புக்களின் பகுதிகளிலும் நிலைகொண்டுள்ளனர். இதுவரை தங்கள் தாயகத்தை பாதுகாப்பதில் மரபுவழி இராணுவமாகச் செயற்பட்டு வந்த அவர்களை இச் செயலானது முழுநேர கெரில்லா வீரர்களாக இயங்க நிர்ப்பந்தித்துள்ளது. அரசாங்கம் தமிழ் மக்களை விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்து விடுவிக்கப்போவதாக என்னதான் உறுதிமொழிகளை கூறினாலும் கூட அண்மைக்கால வரலாறுகள் ஏற்படுத்திய அச்சுறுத்தல்களிலிருந்து தமிழ் மக்கள் விடுபட ஆயத்தமாக இல்லை. குறிப்பாக 1983 இனப்படுகொலைகளின் பின் தமிழ் மக்கள் நன்கு இனங்காணக்கூடிய அச்சத்துக்கு ஆளாகிவிட்ட சூழ்நிலையில், சிறீலங்கா ஜனாதிபதியின் உறுதிமொழிகள் அவர்களின் அச்சத்தை ஒருநாளும் போக்கமுடியாது". இந்நிலையில் தமிழ் மக்கள் தங்களுடைய சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தங்களுடைய அரசியல் எதிர்காலத்தை தாங்களாகவே நிர்ணயிப்பது ஒன்றே அவர்களது உயிர்வாழ்தலுக்கான ஒரே வழியாக உள்ளது. சுயநிர்ணய உரிமையானது இரு பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அதன் உள்ளகப் பரிமாணமானது ஆள்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலான உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கும், வெளியக பரிமாணமானது சமுதாயம் எனக் குறிக்கப்படும் மக்களுக்கும் வெளியுலக மக்களுக்கும் இடை உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏற்புடையதாகிறது. உள்ளக இறைமையானது குடிமக்கள் என்னும் தன்மையை தோற்றுவித்து அரசின் சட்ட ஆட்சிக்கு தேவையான ஜனநாயக வடிவிலான அரசாங்கத்தை உருவாக்குகின்றது. இந்த வகையில் சுயநிர்ணய உரிமையானது மக்கள் இறைமைக்கு (popular sovereignty)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒத்ததாக உள்ளது. வெளியக இறைமையானது சமூகத்தை தனியான அரசியல் உரிமையுள்ளவர்களாக்கி, மற்றைய அரசியல் உரிமையுள்ள சமூகங்கள், அரசுக்கள், சர்வதேச நிறுவனங்களுடன் அதற்குள்ள தொடர்புகளை வடிவமைக்கின்றது. சிறீலங்காவில் தமிழ் மக்களின் உள்ளக பரிமாணமானது முற்றுமுழுதாக சிறீலங்கா அரசாங்கத்தால் மறுக்கப்பட்டும் நிராகரிக்கப்பட்டும் வருகிறது. இதனால் தமிழ் மக்கள் தங்களுக்குள்ள வெளியகப் பரிமாணத்தைப் பயன்படுத்தி ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் உப ஆணைக்குழு தனது தலையீட்டின் மூலம் தங்களுடைய தாயகத்தில் தாங்கள் உயிர்வாழ்தலுக்கான சூழ்நிலையை உறுதிப்படுத்துமாறு உரிமையுடன் கேட்கின்றனர்.

### மனிதாபிமான நிவாரண உதவி வழங்கலுக்கான சூழ்நிலையை உருவாக்குக

சிறீலங்கா திட்டமிட்டு தமிழர்களின் பொருளாதார முயற்சிகளை, தொழில் முயற்சிகளைத் தடுத்து வருகின்றது. உணவு ஆயுதமாக சிறீலங்காவால் பயன்படுத்தப்படுகின்றது. மருத்துவ வசதிகளும் மருந்தும் சிறீலங்காவால் தடுக்கப்படுகின்றது. தமிழ் மக்களை சக்தியற்றவர்களாக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு சிறீலங்காவால் தமிழ்ப் பிரதேசங்களில் தடுக்கப்பட்டு வருகின்றது. அக்டோபர் 8-ம் திகதி பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழும்பில் உள்ள தமிழர்களின் நடவடிக்கைக் குழு சமர்ப்பித்த அறிக்கையில், “அரசாங்கம் விடுதலைப் புலிகளை ஆகாயத்தில் இருந்து விழுந்தவர்களாகவா கருதுகிறது. இந்தப் போராளிகள் வேறு கிரகங்களைச் சேர்ந்த அந்நியப் படைப்புக்களா? உண்மையில் விடுதலைப் புலிகள் தமிழ்த் தாய்மாரின் தந்தையரின் அன்புச் செல்வங்கள். தமிழ் மக்கள் ஒவ்வொருவரதும் அன்புச் சகோதரர்கள், சகோதரிகள். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தமிழீழ தேச மக்களுக்கு எதிரான யுத்தமே” என்று குறிப்பிட்டுள்ளது.

ஆனால், உணவு, மருந்து, குடியிருப்பினை அமைக்கத் தேவையான பொருட்கள் ஆகியவை தமிழீழ மக்களுக்கு சர்வதேச உதவி நிறுவனங்கள் மூலம் நேரடியாகக் கிடைப்

www.tamilarangam.net

# கொழும்பில் புலிகள்

தமிழீழ விடுதலைப் போராட்டமானது சிறீலங்காவின் தலைநகர் கொழும்பின் தரை, கடற்பகுதிகளுக்கும் பரந்து விட்டது என்பதை கொழும்பு துறைமுகத்தினுள் கடற் கரும்புலிகள் நடத்திய துறைமுகத் தாக்குதல்கள் நிரூபிப்பவையாக உள்ளன. கடல் அடியில் நீரின் ஊடாகவும், கடல் மேற்பரப்பினூடாகவும் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலானது சிறீலங்காவின் தலைநகரான கொழும்பின் பாதுகாப்பு மீதும் அதன் பொருளாதாரம் மீதும் பல கேள்விகளை எழுப்புவது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில் கொழும்பு நகரினதும் கேந்திர நிலையங்களினதும் பெரியபட்ச பாதுகாப்பு இருந்த போதும் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதனால் இத்தாக்குதல் ஆனது சிறீலங்கா ஆயுதப்படையினரின் எவ்வகையான பாதுகாப்பு வலையத்தையும் உடைத்துக்கொண்டு விடுதலைப் புலிகளினால் இலங்கையில் எப்பகுதியிலும் தாக்குதல் நடத்த வல்லவர்கள் என இது நிரூபித்தது எனலாம். விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலானது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருப்பினும் கூட அரசியல் இராணுவ வட்டாரங்களில் ஆச்சரியப்படத்தக்க தொன்றாக இருப்பது நிச்சயமாகும். கொழும்புத் துறைமுகப் பாதுகாப்பானது என்றுமே இல்லாதவாறு உச்ச நிலைப்பாதுகாப்பில் இருந்தமையானதே இதற்கு காரணம் ஆகும். கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் தற்போது ஏற்பட்டதல்ல. ஆங்கிலேயரின் காலனியாக இருந்தபோதே அதிமுக்கியத்துவம் பெறத் தொடங்கியது எனலாம். குறிப்பாகக் கூறுவதானால் இலங்கை பொருளாதாரம் சுயதேவைப் பொருளாதாரத்தில் இருந்து வர்த்தகப் பொருளாதாரம் மாறிவர மாறிவர கொழும்புத் துறைமுகம் வளர்ச்சிகண்டது. இவ்வளர்ச்சியானது திறந்த பொருளாதாரக் கொள்கையை சிறீலங்கா கடைப்பிடிக்கத் தொடங்கியதோடு அதன் வளர்ச்சியும் முக்கியத்துவமும் மேலும் மேலும் அதிகரித்தது. இவ்வாறாக ஒரு புறம் கொழும்புத் துறைமுகம் வளர்ச்சிகண்டு செல்வதை ஒத்தாற்போல் அதன் பாதுகாப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

அதுவும் அண்மைக்காலத்தில் கொழும்பில் பொருளாதார இலக்குகள் மீது குண்டுத்தாக்குதல் நடாத்தப்படுவதைத் தொடர்ந்து என்றுமில்லாதவாறு இவற்றிற்கு பாதுகாப்பு ஏற்பட்டது. சுருக்கமாகக் கூறுவதானால் சிறீலங்காவில் உள்ள அதி உயர் பாதுகாப்பான இடங்களில் ஒன்றாக கொழும்புத் துறைமுகம் இருந்தது எனலாம். ஏற்கனவே கொலன்னாவை, சபுகஸ்கரத்த எரிபொருள் களஞ்சியங்கள் மீதும், மத்திய வங்கி மீதும் நடத்தப்பட்ட தாக்குதலானது சிறீலங்காப் பொருளாதாரத்தைக் கணிசமான அளவு பாதிப்பதாக இருந்தது. அதிலிருந்து விலகுமுன்னரே துறைமுகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையானது சிறீலங்காவின் கேந்திர நிலையங்களை அதன் ஆயுதப் படையினரால் பாதுகாக்க முடியுமா? என்ற கேள்வி தர்க்கபூர்வமாகவே எழுப்பப் போதுமானதாகும். இதே சமயம் இத்தாக்குதலானது கொழும்பில் முன்னர் நடந்த குண்டுவெடிப்புக்கள் தாக்குதல்கள் என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்பைவிட நிச்சயம் கூடுதலான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றும் முக்கியமானதும் என்றும் கூறலாம். அதாவது கொழும்பு துறைமுகம் எவ்வேளையிலும் தாக்குதலுக்குள்ளாகலாம் எனும் அச்சமானது கப்பல்களின் வருகையை கணிசமாக குறைக்க வழிவகுக்கும் என்பதோடு, கப்பல்களின் கூலிகள், காப்புறுதி அதிகரிப்பு என்பவற்றிற்கும் வழிவகுப்பதை தவிர்க்க முடியாதாகும். இந்த நிலையானது சிறீலங்காவின் வருவாயில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்துவதோடு செலவீட்டையும் அதிகரிக்கும். இதே சமயம் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் தமது பொருட்களை தற்பாதுகாப்பற்ற துறைமுகத்தினுள் ஏற்றுமதி, இறக்குமதி செய்து தமது முதலீட்டை பரிசோதனைக்கு உட்படுத்த துணியமாட்டார்கள். இந்த நிலையில் கடற்புலிகளின் தாக்குதலானது சிறீலங்கா பாதுகாப்பு செயற்பாடுகளுக்கு ஏற்பட்ட சவால் மட்டுமல்ல, சிறீலங்காப் பொருளாதாரத்தின் மீது போடப்பட்ட பலமான அடியுமாகும். இவ் அடியினை தற்பொழுது துறைமுகத்தினுள் நடந்த தாக்குதலை மறைத்தது போல் நிச்சயமாக சந்திரிகா அரசினால் மறைத்துவிட முடியாது. ஏனெனில் இதன் பாதிப்பு படிப்படியாக சிறீலங்காவின் பொருளாதாரத்திற்கு தாக்கத்தை விளைவிக்கும்போது, இப் பாதிப்புகள் வெளியே தெரிந்தே ஆகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பதை சிறீலங்கா அரசாங்கம் தடை செய்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், "அதீத மனிதாபிமான உதவி" (Extreme humanitarian need) க்கு உரியவர்களாக உள்ளனர். 1992 மார் கழியில் நிறைவேறிய பாதுகாப்புச் சபைத் தீர்மானம் இலக்கம் 794 அமெரிக்காவுக்கு "மனிதாபிமான உதவிக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும்படி" அனுமதித்தது.

### மக்களின் இயக்கத்தை அங்கீகரித்தலும் துன்பப்படும் மக்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய உதவியே ஆகும்

தமிழ் மக்கள் சர்வதேச மனிதாபிமான உதவிகளை நாடிநிற்கும் சூழ்நிலையில் உள்ளனர். வேர்ண்னன் மார்ஸ்டன் ஹிவிட் என்னும் சர்வதேச அரசியல் விஞ்ஞானி "சிறீலங்காவில் உள்ள துக்ககரமான நிலை, 1971-ல் கிழக்கு பாகிஸ்தானில் காணப்பட்டமை போன்று சிறீலங்காவின் சட்டத்துக்குள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதைக் காட்டுகிறது" எனக் கூறுகிறார். ஆகவே உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் இயக்கத்தை அங்கீகரிப்பதும் துன்புறும் மக்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடிய உதவியை வழங்கலுக்கான தலையீடாகும். எனவே சர்வதேச சமூகத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனும் நேரடியான தொடர்புகளை மேற்கொள்வதன் மூலம் தமிழர் தாயகத்தில் மனிதாபிமான உதவிகளுக்கான பாதுகாப்பான சூழ்நிலை உருவாக அதிகளவில் உதவலாம் என நாம் நம்புகின்றோம். தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சிறீலங்கா கடந்த ஆறு மாதங்களாக உள்ளூர் வெளியூர் பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்துள் பிரவேசிக்காது தடுத்து வருவதுடன் கடுமையான பத்திரிகைத் தணிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இதனால் தமிழீழ மக்கள் மேல் நடாத்தப்படும் யுத்தத்தின் உண்மை வடிவினை வெளியார் யாரும் அறிய வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாமல் உள்ளது. ஆகவே, சர்வதேச சமூகத்தவர்கள் அங்கு விஜயங்களை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலை வரும்வரை சிறீலங்கா அரசாங்கம் கோரும் புனர்நிர்மாண, புனர்வாழ்வு நிதி உதவிகளை வழங்கவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

தோமஸ் ஹைலண்ட் எரிக்சன் (ஒஸ்லோ பல்கலைக்கழகம்) தமிழர்கள் அரசற்ற நாட்டினத்தவர் எனவும் பழமை மிகு நாட்டினத்தவர் எனவும் அவர்கள் எல்லைகளுடன் எப்பொழுதுமே வாழ்ந்துவருகின்றனர் எனவும் கூறுகின்றார். மேலும் அவர்கள் சமுதாய அமைப்பு, கல்விச் சாதனைகள் என்பவற்றில் மற்றவர்களிலிருந்து வேறுபட்ட தனியான பெருங்கூட்டத்தவர்களாக உள்ளனர் எனவும் கூறுகின்றார். எனவே சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே தீவில் அமைதியும் மனித உரிமைகளும் பேணப்பட முடியுமென நாங்கள் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

தமது சொந்தத் தாயகத்திலேயே தம்மேல் மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகளினால் வாழ்வுக்காக போராட வேண்டியவர்களாக உள்ள தமிழர்களின் வாழ்வுக்கான உரிமையை உறுதிசெய்ய வேண்டிய கடமை சர்வதேச சமூகத்துக்கு உண்டு. ஏனெனில், சிறீலங்கா அமைச்சர் அமரசிறீ தொடங்கொட, "இஸ்ரேலிய நிபுணர்கள் சிறீலங்கா அரசாங்கத்துக்கு 13 வயதுக்கு மேற்பட்ட தமிழ்ச் சிறார்களையெல்லாம் கொல்லும்படி ஆலோசனை அளித்ததாகக் கூறுகிறார். இது உண்மையானால், தமிழர்களுக்கு எவ்வளவு தூரம் சர்வதேச உதவி தேவையாக உள்ளது என்பது புலனாகும். அத்துடன் இந்தியாவின் பிராந்திய வல்லாண்மைத் தன்மையினால் தமிழ் மக்களும் அவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் கடும் பாதிப்புக்களை அடைந்து வருகிறது. இதனால் மூன்றாவது நாடு ஒன்றின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசாங்கமும், பேச்சுவார்த்தை நடாத்துவது ஒன்றே நீண்டகால தேசிய இனமுரண்பாட்டிலிருந்து விடுபட்டு தீவில் அமைதியும் பாதுகாப்பும் தோன்ற ஒரே வழியாகும் என நம்புகின்றோம்!

*தமிழில் - பற்றிமாகரன்*

## சபதம் செய்வோம்

இயற்கை
ஒரு கணம்
இயங்க
மறுத்தது.
குமுதினியில்
தொடங்கிய
குருதி வெள்ளி
இப்போ
நாகர் கோயில், குமரபுரம், நாச்சிக்குடா
என தொடர்கின்றது.

கருவழிக்கப்பட்ட
இரத்தச் சகதியில்
தெரிந்த
முகங்களின்
கோரம்
சிங்களத்தின்
வாரிசை
சரியாய்
நிரூபித்தது.
மரணித்த
தமிழர்களின்
வெற்றுடல்கள்
வித்துடல்களாய்
இருந்திருந்தால்
எதிரியின்
உயிர்க்
கூடுகளங்கே
எண்ணிக்
கணக்கெடுக்கப் பட்டிருக்கும்.

இனி
அழுதலும்
புலம்புதலும்
அவர் தம்
நினைவில்
வாடுவதும்
பயனன்று
வேற்றுமை
களைவோம்
கால விரையம்
செய்யோம்
களத்தினிலிருக்கும்
வீரர்களுடன்
இணைந்து
கொள்வோமென்றோர்
சபதம்
செய்வோம்.

தொடர்ந்து
எங்களின்
துப்பாக்கிகளிசைக்கும்
பூபாளத்தில்
நாளை
தமிழீழம்
பிறக்கும்
சிங்களமங்கு
முகாரி பாடும்.

ஈ. மங்களேஸ்வரன் (பிராண்ஸ்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய போருபாயம்

சிங்களப் படைகள் தமது பலத்தை வடக்கில் குவித்துவைத்திருக்க, புலிகள் தமது இராணுவச் செயற்பாடுகளைக் கிழக்கில் அதிகரித்துள்ளனர்.

வடக்கில், வலிகாம நிலம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட; கிழக்கில், படுவான்கரையின் பெரும்பகுதி நிலம் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டதுடன் - எஞ்சிய இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியின் சிவில் நிருவாகமும் சீர்குலைக்கப்பட்டுள்ளது. அத்துடன், கோடிக்கணக்கான ரூபா பெறுமதி உள்ள அரச உடமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. இவற்றின் காரணமாக, அரச பொருளாதாரத்திலும் சிங்களப் படைகளின் செயற்பாட்டிலும் கணிசமான தாக்கம் ஏற்பட்டுள்ளது.

அரசின் சிவில் நிருவாகம் கிழக்கு மாகாணத்தில் முறையாக நடப்பதாக வெளிநாடுகளுக்கு காட்ட, சிங்கள அரசு முயல்கின்றது; அதன் மூலம், போரால் பாதிக்கப்பட்ட கிழக்கின் அபிவிருத்திக்கு என்ற போர்வையில் பலநூறு கோடி ரூபாய்களை வெளிநாடுகளிடமிருந்து உதவியாகப் பெற்று, அதை இராணுவ தேவைக்கும்- சிங்களக் குடியேற்றங்களின் அபிவிருத்திக்கும் அரசு செலவிடுகின்றது.

கிழக்கில் சிவில் நிருவாகம் நடைபெறுகின்றது என்று அரசு கூறிக் கொண்டாலும் உண்மையில், அங்கே இராணுவ நிருவாகமே நடைபெறுகின்றது. மக்களின் தேவைக்காக அல்லாது இராணுவத் தேவைகளைக் கருத்திற் கொண்டே நிருவாகம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மீன்பிடியாக இருந்தாலும்- விவசாயச் செய்கையாக இருந்தாலும்- வர்த்தகமாக இருந்தாலும் அதை இராணுவமே தீர்மானிக்கின்றது. எங்கே மீன் பிடிப்பது? எந்த நேரம் மீன் பிடிப்பது? விவசாயி தனது வயலிற்குச் செல்லலாமா செல்லக்கூடாதா? பிடித்த மீனை விளைவித்த நெல்லைச் சந்தைப்படுத்தலாமா? அப்படியாயின் யாருக்கு என்பதையெல்லாம் இராணுவம் தீர்மானிக்கின்றது.



சுருக்கமாகச் சொன்னால், போராட்டத்தை ஒடுக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இராணுவ நிருவாகம் நடைபெறுகின்றது. இந்த இராணுவ நிருவாகத்திற்கு மின்சாரம் பக்கபலமாக இருந்து துணை புரிகின்றது. இந்த இராணுவ நிருவாகத்திற்கு மின்சாரம் பக்கபலமாக இருந்து துணைபுரிகின்றது. சிவிலியன்களுக்கான தொலை தொடர்புச் சேவையும் புகையிரதச் சேவையும் இராணுவத் தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மூன்றுடனும் மக்கள் சம்பந்தப்பட்டிருந்தாலும்- இவற்றால் மக்கள் ஓரளவு பயன்களைப் பெற்று வந்தாலும்- பெரும்பாலும் இராணுவத் தேவையையே இம்மூன்றும் நிறைவேற்றி வருகின்றன.

எனவே தான், மின்சாரமும் தொலை தொடர்பு நிலையங்களும் புகையிரத நிலையங்களும் புகையிரத மார்க்கமும் போராட்டத்தின் இராணுவ இலக்குகளாகின.

இதுவரை 300-ற்கும் மேற்பட்ட மின்மாற்றிகளும்- சில தொலை தொடர்பு நிலைகளும் அழிக்கப்பட்டுள்ளன: இதனால், படையினரின் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைக்கு, இரவு துணை செய்யாது விடுகிறது. அத்துடன், எதிரிக்குத் தகவல் கொடுப்போரது செயற்பாடுகளும்- எதிரிப் படைகளின் செய்திப் பரிவர்த்தனையும் சிரமத்திற்கு உள்ளாகின்றன. புகையிரத் சேவையும் சீர்குலைக்கப்பட்டுள்ளது; இதனால் அரசின் இராணுவ நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன அல்லது வேகம் பெற முடியாது முடக்கமடைகின்றன. ஆனால் மறுபுறத்தில், புலிகளின் இராணுவச் செயற்பாடுகள் சுலபமடைவதுடன் - வேகமும் பெறுகின்றன.

கிழக்கு மாகாணத்தின் "சிவில்" நிருவாகம் சீர்குலைக்கப்பட்டால், வெளிநாடுகளிடமிருந்து பண உதவிகளை அரசால் பெற முடியாது போகும். இது அரசின் போருக்கான பொருளாதாரத்தில் சில நெருக்கடிகளைக் கொண்டு வரும்: அத்துடன், சிங்களக் குடியேற்றங்கள் இருளில் மூழ்கும்; இது குடியேறிகளினதும் - குடியேற வருவோரினதும் உற்சாகத்தைக் குன்றச்செய்யும். இதனால், அரச மேற்கொள்ளும் நில அகபரிப்பை நாம் ஓரளவாவது தடுக்க முடியும்.

சேதமாக்கப்பட்ட அல்லது முற்றாக அழிக்கப்பட்ட மின்மாற்றிகள் - தொலை தொடர்பு நிலைகள், புகையிரத வண்டிகள் என்பவற்றின் பெறுமதி 400 கோடி ரூபாய்களைத் தாண்டும் என்று இயந்திரவியலாளர்கள் கூறுகின்றனர். இந்த முதலீட்டை வைத்துக்கொண்டு அரசு பெற்ற வருமானம் ஆண்டுக்கு சில நூறு கோடி ரூபாவாக இருக்கும் எனவே, இந்த அரச உடமைகள் அழிக்கப்பட்டதால் அரசுக்குப் பெரியதொரு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் நிராகரிக்க முடியாது.

கொலான்னவ எண்ணெய்க் குதங்கள் தீயில் அழிந்து போனதால் அரசுக்கு ஏற்பட்ட பொருளாதார இழப்பு சாதாரணமனதல்ல.

அரச உடமைகளின் அழிப்புக்களும் - சிவில் நிருவாகச் சீர்குலைப்புக்களும் அரசிற்குப் பொருளாதார அழுத்தங்களை உண்டு பண்ணும்; இது அரசின் போர் முயற்சிகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, விடுதலைப் போராட்டத்திற்கு - இந்த வகைத் தாக்குதல்கள் பெரிதும் உதவுகின்றன. அரச உடமைகளை அழித்து - அரசின் நிருவாகத்தைச் சீர்குலைப்பது, விடுதலைப்போரின் ஒரு தந்திரோபயமாகும். எமது நிலத்தில் எதிரிக்கு எந்த வேலையும் இல்லை; உடனடியாக வெளியேறு என்பது தான், இந்த வகைத் தாக்குதல்கள் வழங்கும் அரசியல் செய்தியாகும். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சன் சூஹும் - மாவோவும்

சிறீலங்கா விமானப்படையில் ஒய்வுபெற்ற விங் கொமாண்டரான மார்க் செனிவிரத்னா, ஒரு வித்தியாசமான அரசியல் - இராணுவக் கட்டுரையாளர். நீண்டகாலமாகவே அவர், விடுதலைப்புலிகள் பற்றிய இராணுவ அரசியல் ஆய்வுகளை, சிங்கள அரசியல் -இராணுவத் தலைமைக்கு அறிவுரை, ஆலோசனை கூறும் வகையில் எழுதிவருபவர். இதற்காக அவர் மாவோ, சே போன்றோரின் ஆக்கங்களை - அனுபவங்களை ஆதாரமாக வைத்து விடுதலைப் போராட்டம், போராளிகள் கரந்துறை போர் போன்றவை பற்றி சற்று ஆழமாகவே, அதேவேளை சிங்கள மேலாதிக்கத்தைக் காப்பாற்றும் வகையில் - கட்டுரை வரைவார். இந்த அடிப்படையிலே அமைந்த அவரது நீண்ட கட்டுரையொன்று அண்மையில் 'ஐலண்ட்' செய்தியேட்டில், 'அது ஒரு புகழ்மிக்க வெற்றி தான்; ஆனால் இப்போது?' என்கிற தலைப்பில் வெளியாகி வந்தது. என்ன சொல்ல வருகின்றார் அவர் என்பது எம்மால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகின்றது. யாழ்ப்பாணக் கைப்பற்றுதலின் பின்னர் சிங்கள தரப்பு இனி என்ன செய்ய வேண்டும்? அதன் முன்னாலுள்ள தெரிவுகள் எவை என்பவற்றைத் தொகுத்து, தமிழ்த்தேசியச் சிக்கல் என்றொன்று இல்லாமல் போக என்ன செய்யப்பட வேண்டும் என, விசித்திரமான தனது எண்ணமொன்றையும் வெளிக்காட்டி வைக்கின்றார் மார்க் செனிவிரத்னா

இதுவரை மாவோ, சேயை மேற்கோள்காட்டியவர் இம்முறை, கி.மு. 5-ம் நூற்றாண்டைச் சேர்ந்த சீனப் போரியல் வல்லுனரான சன் சூவின் (Sun-TZU) தொன்மையும் புகழும் மிக்க 'போர்க்கலை' எனும் போரியல் நூலிலிருந்து மேற்கோள் ஒன்றைத் தனது கட்டுரைக்கு ஆதாரமாகக் கொள்கின்றார். யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டமை தொடர்பான கொண்டாட்டங்களிலே மறைமுகமான இனவாதம் புதைந்து இருப்பதாகக் கூறும் அவர், 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவ நடவடிக்கையின் கொடுமைகள், பாவங்கள் வெளிவராமல் போவதற்காகவே தணிக்கை முறை கொண்டுவரப்பட்டது என்பதையும் ஒத்துக்கொள்கின்றார். இதன் பின்னே முக்கிய விடயத்திற்கு வருகின்றார். யாழ்ப்பாணத்தில் இப்போது மட்டும் கொடியேற்றங்கள் நடக்கவில்லை. பாண்டியர், விசயநகரத்தார், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் எல்லோரும் தான் கொடியேற்றினார்கள். எனவே, அடுத்தது என்ன? இனி என்ன என்பதே இவரது வினாவாகும்; அதற்கான பதிலையும் அவரே தருகின்றார்.

யாழ்ப்பாண வெற்றி தந்த மிதப்பில் சிங்கள இராணுவம், சம்பிரதாய போர்முறையைப் பயன்படுத்தி வன்னியில் பாரிய இராணுவ நடவடிக்கைகட்கு முயலக்கூடும். அதே வேளை, தமது இயல்பான திறமைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப தமது போர் நடவடிக்கைகளை புலிகளும் மேற்கொள்வர் என்று கூறும் அவர், இத்தகைய போர் நடவடிக்கையை சிங்கள இராணுவம் தொடர்ந்து மேற்கொள்வதை தான் ஆதரிக்காமைக்குப் பல காரணங்களைக் காட்டியிருக்கின்றார். இத்தகைய நீளும் போர்களின் மிக மோசமான - பாரதூரமான விளைவுகளை முழு நாடுமே எதிர்கொள்ள நேரிடும் என, கடுமையாக எச்சரிக்கின்றார். அவரின் வார்த்தையில் கூறுவதானால், "இத்தகைய போரானது நீண்டகாலத்திற்கு தொடரப்போவதால், இதனுடைய பொருண்மியச் செலவை சிங்களத்தால் ஒரு போதும் தாங்க முடியாது; மிகப் பெருமளவில் உயிர், பொருள் இழப்புக்கள் ஏற்படும்; மோசமான இயற்கை, சூழல் அழிவுகள் ஏற்படும்; மிக அவலமான - துன்பகரமான - பெருமளவிலான மக்கள் இடம்பெயர்வுகளும் குடும்பப் பிரிவுகளும் ஏற்படும் எல்லாவற்றிற்கும் மேலாக, இதுவரை இந்நாடு சந்தித்திருக்காத மிக ஆழமான - தாக்கமான உளவியல் உணர்வலைகளை நாடு முழுவதுமே ஏற்படுத்தி விடும்." (`and to possibly create a hitherto unknown emotional psyche among the people all over the island')

எனவே, இத்தகைய இராணுவ நடவடிக்கைத் தெரிவினை விடுத்து, இன்னொரு தெரிவினையே அரசு கடைப்பிடிக்க வேண்டும்; கடைப்பிடிக்கும் என அவர் நம்பிக்கை தெரிவிக்கின்றார். அதாவது புலிகள் மக்களில் தங்கியிருக்கின்றார்கள்; மக்கள் புலிகளை நம்பியிருக்கின்றார்கள் இதுவே உண்மை யதார்த்தம். எனவே, இதனையே முறியடிக்க வேண்டும் எனக் கூறும் மார்க், இங்கே தான், சன் சூவின் மேற்கோள் ஒன்றை இரவல் வாங்குகின்றார். புலிகளை வெல்வதானால், சன்சூ சொன்னார், "முதலில் எதிரியின் மூலோபாயத்தை தாக்கியழி (அதாவது புலிகளின் மக்கள் ஆதரவை இல்லாதொழி) அடுத்து எதிரியினது நேசச்சக்திகளை, ஆதரவுத் தளங்களை சீர்குலை (அதாவது புலி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# - மார்க் செனிவிரத்னாவும்

களின் வெளிநாட்டு ஆதரவு) என்று அரசுக்கு ஆலோசனை கூறும் அவர், முதலாவது செய்ய வேண்டியது அரசியல் ரீதியான ஒடுக்குமுறைகளை நீக்கல், வலிகாம மறு சீரமைப்பு என்று தற்போது சிங்கள அரசு கடைப்பிடிக்கும் அதே உத்தியைத் தான் சுட்டிக் காட்டுகின்றார். அதாவது, புலிகளுக்கும் மக்களுக்குமிடையே முரண்பாட்டினை உருவாக்கி, புலிகளைத் தனிமைப்படுத்தி இறுதியில் ஒழித்து விடலாம் என்பதே, இதன் இலக்காகும். சிங்களத்திற்கும் தமிழீழத்திற்கும் இடையே இனச்சிக்கல் என்னும் எந்த முதன்மையான - கூர்மையடைந்த முரண்பாடு காரணமாக வரலாற்றின் இயங்கியல் நியதிப்படி விடுதலைப் புலிகள் எனும் பெரு விடுதலை விருட்சம் தோன்றியதோ, அதே முரண்பாட்டினைப் பயன்படுத்தி, வெற்று அரசியல் சுலோகங்களாலும் அரைகுறை அபாயகர அரசியல் தீர்வுப் பொதிகளாலும் புனருத்தாரண மாயைகளாலும் விடுதலை விருட்சத்தை வெட்டி வீழ்த்தலாம் என்கிற அதி விசித்திர ஆபத்தான அறிவுரை இது. வரலாற்றின் வளர்ச்சிப் போக்கிற்கு, மனிதகுல விடுதலைக்கு, மேன்மைக்கு அடிப்படையாக அமையும் முரணிய கோட்பாட்டை செவ்வனே விளக்கியவரும், அதனைச் செம்மையாகக் கையாண்டு மாபெரும் புரட்சியொன்றையே நடத்திக் காட்டியவருமான மாவோ இதையறிந்தால் - உயிரோடு இருந்தால் வெட்கத்தால் தலை குனிந்திருப்பார். வரலாற்றின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல இயற்கையின் அனைத்துக் கூறுகளிலும் - எங்கும் பரந்து நிரம்பி, அதன் வளர்ச்சிக்கும் காரணமாகும். முரண்பாட்டு கோட்பாட்டினை, வரலாற்றினைப் பின்தள்ள - தமிழனை அடிமைத்தனத்திற்கும் அவலத்திற்கும் அழிவுக்கும் தள்ள சிங்களம் பயன்படுத்த நினைக்கும் முட்டாள் தனத்திற்கு முடிவேது?

இதேவேளை, இந்தத் தெரிவினையும் தகுந்த முறையில் செயற்படுத்த முடியாத நிலையில், வடக்கு - கிழக்கு தமிழரை தெற்கிலும், தெற்குச் சிங்களவரை வடக்கிலும் கிழக்கிலும் கட்டாயமாகக் குடியேற்றி, தமிழர் தாயகக் கோட்பாட்டையே தாரைவார்க்கச் செய்ய வேண்டும் என்கிற ஆற்றாமையோடு கூடிய இன்னொரு தெரிவையும் முன்வைக்கும் மார்க் செனிவிரத்னாவின் அபத்தமான கருத்தை விட்டு, இப்போது எமது பக்கம் திரும்பலாம். இங்கே தான் எம் மக்கள் மனங்கொள்ள வேண்டிய மிக முக்கிய வரலாற்றுண்மை, புலிகளின் புரட்சிக் குரலாக ஒலிக்கின்றது. யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்ட பின்னரும் முன்னைவிட உறுதியோடு எவ்வாறு புலிகள் செயற்படுகின்றார்கள்? கனவிலும் கண்டிருக்க முடியாத பாரிய இடப்பெயர்வின் பின் - 5 லட்சம் மக்கள் அனைத்தையும் இழந்த பின் எவ்வாறு அடுத்தநாளை நம்பிக்கையோடு எதிர்கொள்கின்றார்கள்?" யாழ்ப்பாணச் சமர் என்பது எமக்கு ஏற்பட்ட பின்னடைவு தான். இதைவிடப் பெரிய பின்னடைவுகளை முன்னர் நாம் சந்தித்து இருக்கின்றோம். எனவே, "இன்றைய பின்னடைவே நாளைய வெற்றி" என தலைவர் அவர்களால் எவ்வாறு உறுதியாகக் கூறமுடிந்தது? இத்தகைய வினாக்களுக்கு எல்லாம் விடை மிகத் தெளிவானது.

மாவோவின் சொந்த வார்த்தைகளிலையே இதற்கான விடையைக் கூறமுடியும். மாவோ கூறுகின்றார்; "வரலாறு என்பது சமூக மாற்றத்தை நிகழ்த்திச் செல்லும் சக்தி. இதன் இயக்கத்திற்கு அடிப்படையான இயங்கு விதியே முரண்படாகும். இம் முரண்பாடு பலவகைப்படும். எனினும், நதிகள் கடலில் சங்கமிப்பது போல, அனைத்து முரண்பாடுகளும் முதன்மை முரண்பாட்டினைச் சந்திக்கின்றன; அதற்குத் துணையாகின்றன. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் முரண்பாடு, பல முரண்பட்ட எதிர்நிலைகளில் இயங்கும் பல்வேறு எதிர்வுச் சக்திகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து முரண்பட்டு இயங்கி வரலாற்றினை முன்தள்ளும்." மாவோவின் இவ்விதியே இன்று எமது தேசியச் சிக்கல் என்கிற பிரதான முரண்பாட்டையே தீர்க்கவேண்டிய நிலைக்கு தமிழீழம் தள்ளப்பட்டு விட்டது. எம் மக்கள், எமது வாழ்வின் ஏற்ற இறக்கங்கள் இயல்பானவை என இப்போது உணரத் தலைப்படுகின்றனர். இதையே மாவோ, 'ஒரு வெடிகுண்டானது வெடிப்பதற்கு முன், குறிப்பிட்ட நிலைமைகளில், எதிரானவை யாவும் அதனுள்ளே ஒன்றாக இருக்கின்றன.



ஒரு புதிய நிலைமை ஏற்பட்டவுடன் (தீப்பற்றியபின்) அது வெடிக்கின்றது. அதாவது தனது பழைய முரண்பாட்டினைத் தீர்த்து புதிய வடிவம் எடுக்கின்றது' என்கிறார். எமது விடுதலைப் போரிலும் பல்வேறு முரண்பாடுகளை - கருத்து நிலைகளை (இதற்கும் மக்களின் உள் முரண்பாடுகளே காரணம்) கொண்டிருந்த எம் மக்கள், முழு அளவிலான போர் என்கிற புதிய நிலைமை ஏற்பட்டபோது, வெடிகுண்டு வெடிப்பது போன்ற இடப்பெயர்வின் மூலம் ஒரு புதிய நிலைமையை உருவாக்கினர். எனவே தான் இப்போது, மக்களும் இயக்கமுமாக ஒரு புதிய போக்கிற்கு - ஒரு புத்தாக்கத்திற்கு தம்மை உட்படுத்தத் தொடங்குகின்றனர்.

மேலும் எம் மக்கள் தெளிவாக இருக்க வேண்டுமென்பதற்காக

**வே. பாலகுமாரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாவோ தொடர்ந்து சொல்கின்றார். "போரும் சமாதானமும் தாமாகவே ஒன்றையொன்று மாற்றிக் கொள்கின்றன. முரண்பட்டவை அனைத்தும் ஒன்றையொன்று மாற்றிக்கொள்கின்றன. முரண்பட்டவை அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவை. ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒன்றாக சக வாழ்வு நடத்துபவை, வேறு ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒன்று மற்றொன்றாக மாற்றிக் கொள்கின்றன." இதனையே எமது தலைவரும் எளிமையான வார்த்தைகளால், இன்றைய பின்னடைவு நாளைய வெற்றி என்கிறார்.

இதேவேளை, போரியல் அறிஞர் சன் சூ என்ன சொல்கின்றார்? 'தாக்குதல்களுக்கான தந்திரங்கள்' என்கிற தனது அத்தியாயத்திலே, "பகைவனை அறிந்து கொள் - உன்னையும் அறிந்து கொள். தோல்வி பற்றிய கவலையே இல்லாமல் நூறு போர்களை நடத்த முடியும்" என்கிறார். நீரானது தான் பாய்ந்து செல்லும் நிலத்தின் தன்மைக்கேற்ப தனது பாதையை அமைத்துக்கொள்கிறது. தான் எதிர்கொள்ளும் எதிரிக்கேற்ப தனது வெற்றியை படைவீரன் தீர்மானிக்கின்றான். இது புலிகளுக்கு கைவந்த கலையென்பது முழு உலகிற்குமே தெரிந்த உண்மையல்லவா? இப்போது இன்னொரு உண்மையையும் நெற்றிப்பொட்டில் அடித்தாற்போல் எம்மக்கள் முழு உலகிற்குமே முரசறைந்து விட்டனர். கொழும்பு ஆங்கிலச் செய்தி விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டது போல், எமது மக்கள் தாம் யார் பக்கம் என்பதைக் கைகளால் புள்ளடி போட்டுக் காட்டவில்லை; தமது கால்களாலல்லவா வாக்குப் போட்டுக் காண்பித்து விட்டார்கள்!

இறுதியாக ஒரு வரி. சிங்கள அரசானது முரண்பாடுகளை மூடத்தனமாகக் கையாண்டு, சிங்கள மக்கள் மேல் பாரிய பொருண்மியச் சுமையைச் சுமத்துவதால், தமக்கும் சிங்கள அரசுக்கும் இடையிலான பொருண்மிய முரண்பாட்டினைத் தீர்க்க வேண்டிய முறை இப்போது சிங்களவர்க்கு ஏற்படுகின்றது. எனவே, சிங்கள அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை எவ்விதம் தீர்க்கலாம் என்பது பற்றி இனி மார்க் செனிவிரத்னா, சந்திரிகா அம்மையாருக்கு அறிவுரை கூறுவதே நல்லதல்லவா? ★

www.tamilarangam.net

# காசி ஆனந்தனின் கவிதை நறுக்குகள்

## விடுதலை

என்னை
உன் ஆயுதம்
ஆக்குவதற்காக
நீ
எனக்கு
ஆயுதம்
தந்தாய்

நான்
உன்னையே
சுட்டேன்

தெரிந்துகொள்
எனக்கு
ஆயுதம் தேவைப்பட்டது.

நான்
இன்னொருவனின்
ஆயுதமாக
இருக்கக்கூடாது
என்பதற்காக



## உணர்வு

தங்க வளையலை
கழற்றி
போராளியின்
கையில்
கொடுத்தாள்.

உங்களில் பலருக்கு
கைகளே
இல்லை

எனக்கு
எதுக்கு
வளையல்?



## தாயகம்

என்னை
என்மண்ணில்
புதைத்தாய்


பகைவனே
என்மண்ணை
எங்கே புதைத்தாய்?

## ஊர்

ஊரில்
உங்கள்
சுடுகாடு

சுடுகாட்டில்
எங்கள்
ஊர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

# - நூல் அறிமுகம் -

திரு. பழ. நெடுமாறன் அவர்களால் எழுதப்பட்டு, அண்மையில் வெளிவந்திருக்கும் ஓர் சிறப்பான சிறப்பாய்வு நூல் "தமிழன் இழந்த மண்" என்பதாகும். காலகாலமாக தமிழன் இழந்துகொண்டேயிருக்கிறான். முன்னொரு காலத்தில் தனியரசு அமைத்து கடல் கடந்த நாடுகளிலும் அதிகாரத்தை நிறுவி பேராட்சி நடத்திய தமிழன்... இன்று மண் இழந்து, மொழியிழந்து, தனித்துவம் இழந்து, தன் முகவரியைத் தொலைத்து வாழ்கிறான். ஒரு தேசிய இனத்தின் தனித்துவ அடையாளமாக விளங்குவது அவர்களுடைய பூர்வீக மண்ணாகும். ஒரு இனம் தனது மண்ணைப் பறிகொடுப்பது தன்னை அழித்துக்கொள்வதற்குச் சமனாகும்.

தமிழ் மக்களுடைய தாயக பூமியான "அகண்ட தமிழகம்" அயல் மாநிலத்தவர்களால் சிறுகச் சிறுகப் பறித்தெடுக்கப்பட்டு தமிழக பூமி சுருங்கிக்கொண்ட அவலத்தை வரலாற்று ஆதாரங்களோடு தெளிவுற விளக்கி நிற்கும் ஓர் உன்னதமான வரலாற்றுப் பதிவு "தமிழன் இழந்த மண்" ஆகும். சுமார் 40 நூல்கள், பத்திரிகைகளையும் ஆதாரமாகக் கொண்டு இந்நூலைப் படைத்திருக்கும் ஆசிரியர், உறங்கிக் கிடக்கும் தமிழனின் உணர்வுகளை தட்டி எழுப்ப முயன்றிருக்கிறார். தமிழீழத்திலும் காலாகாலமாக சிங்களப் பேரினவாத அரசுகளால் தமிழ் மக்கள் பல பேரிழப்புக்களுக்கும் உள்ளானவர்கள்...

தமிழீழ மக்களின் தேசிய அடையாளத்தை சிதைப்பதில் மும்மரமாக ஈடுபட்ட சிங்களப் பேரினவாதம் முதலில் மேற்கொண்ட நடவடிக்கை தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை படிப்படியாக பறித்துக்கொண்டதாகும். சிறீலங்காவின் முதலாவது பிரதமராக வந்தவரான டி. எஸ். சேனநாயக்காவே குடியேற்றம் என்ற போர்வையில் தமிழர்களின் நிலத்தை கபளீகரம் செய்துகொள்வதைத் தொடங்கிவைத்தார். தொடர்ந்து வந்த அனைத்து சிங்கள அரசுகளும் தமிழர்களின் சுய அடையளத்தை இல்லாதொழிப்பதிலேயே தீவிரம் காட்டின. தமிழர்களின் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களும் தங்களுக்குள் ஒற்றுமையின்றி, நாற்காலிக் கனவுகளுடன் மாறிமாறி வந்த சிங்கள அரசுகளின் கால்களையே இறுகப் பற்றிக்கொண்டார்கள். தமிழீழ மக்களின் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட, அனைத்தையும் இழந்த நிலையில், இனி இழப்பிற்கு ஏதுமில்லை என்ற நிலையில் தமிழீழ ஆயுதப் போராட்டம் உருப்பெற்று, அங்கு ஒரு புதிய வரலாறு எழுதப்பட்டுக்கொண்டிருக்கிறது.

6 கோடி தமிழ் மக்களுக்கு மேல் வாழுகின்ற தமிழகம், சுமார் 4 வருடங்களுக்கு முன்னரேயே தன்னை வேற்று மாநிலத்தவர்களிடம் பறிகொடுத்து உருக்குலைந்த சோகம் நடைபெற்றுள்ளது. ம.பொ.சி. போன்ற தமிழ் பற்றாளர்கள், தமிழகத்தைக் காக்கப் போராடிய போதிலும் தமிழர்களின் சாபக்கேடான ஒற்றுமை இன்மையே தமிழகத்தையும் நலியச் செய்தது. தமிழகத்தின் அயல் மாநிலங்களை கேரளம், கர்நாடகம், தெலுங்கு போன்ற மாநிலங்கள் தமிழக நிலப்பகுதிகளை சுவீகரித்து தம்மைப் பெற்றுக்கொண்டன. அத்துடன் தமிழகத்தின் பெரும்பகுதிகளிலும் வேற்று மாநிலத்தவர்களின் ஆதிக்கமுமே பல துறைகளிலும் கொடிகட்டிப் பறக்கிறது என்ற அபாயச் செய்தியையும் ஆசிரியர் இந்நூலில் மட்டுமன்றி தமிழகத்திற்குச் சொந்தமான கச்சதீவு சிறீலங்கா அரசுக்குள் தாரைவார்க்கப் பட்டது பற்றியும், அந்தமான தீவுகளில் தமிழர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு அவர்கள் அங்கு வங்காளிகளாலும் ஏனைய மாநிலத்தவர்களாலும் திட்டமிட்ட முறையில் சொந்த நிலங்களிலிருந்து துரத்தியடிக்கப்படுவது போன்ற பல்வேறு செய்திகளையும் இப்புத்தகம் தாங்கியுள்ளது.

1983-ம் ஆண்டிலிருந்து 94 யூன் வரையிலும் தமிழக மீன்பிடிப் படகுகள் மீது 355 முறை இலங்கை இராணுவம் தாக்குதல் நடாத்தியுள்ளது. அத்துடன் 59 படகுகள் எரிக்கப்பட்டு 98 பேர்களின் உயிர்களும் பறிக்கப்பட்டுள்ளது.

இச் செய்திக்குறிப்பும் இப்புத்தகத்தில் இருந்து தமிழக மக்களுக்கு கிடைக்கும் அதிர்ச்சித் தகவலாகவே உள்ளது.

தமிழகத்தில் தமிழ் மக்களுடைய தமிழின உணர்வு மழுங்கடிக்கப் பட்டமைக்கான காரணிகள் கண்டறியப்பட்டு முதலில், அவை அழித்தொழிக்கப்படவேண்டும். தமிழீழத்தில் இன்று கொழுந்துவிட்டெரியும் விடுதலைத் தீ தமிழகத்தில் என்றோ எரிந்திருக்கவேண்டும். எரியவில்லை! ஏன்? "தமிழன் இழந்த மண்" புத்தகத்தை வாசித்து முடிக்கும்போது எமக்குள் இயல்பாக எழும் கேள்வி இதுவாகும். ஒவ்வொரு தமிழகக் குடிமகனும் அறிந்துகொள்ள வேண்டிய ஏராளமான விடயங்கள் இவ் அரிய ஆராய்ச்சி நூல் தாங்கியுள்ளது. 'இழந்ததை மீட்போம்; இருப்பதைக் காப்போம்' என்ற இலட்சிய முழக்கம் தமிழன் மண்ணை இழந்த வரலாற்றை வாசிக்கின்ற ஒவ்வொருவர் மனதிலும் முழக்கமிடுமானால் அதுவே இப்புத்தகத்தின் வெற்றி எனலாம்.

— நிலவன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

தமிழர் மீதான ஒடுக்குமுறை ஆரம்ப மாகி விட்டது. இதற்கெதிரான பாராளுமன்ற, அகிம்சை வழிப் போராட்டங்கள் முழுமையான அர்ப்பணிப்புடனும், தியாக மனப் பான்மையுடனும், தீவிரத்துடனும் நடத்தப்பட்டதா என்பது கேள்விக் குறியாகின்றது. தம்மையும், தமது நலன்களையும் பாதுகாத்துக்கொண்டு, நடத்தப்பட்ட மனுச் செய்யும் செயற் பாடுகளாகவே கருதலாமே தவிர உண்மையான போராட்டங்களாகக் கருத முடியாது. அதேவேளை, இரா ணுவ அடக்குமுறை கூர்மை பெற்று வந்த வேளை, இத்தகு போலித் தனத்தை, பொய்மையை உடைத்துக் கொண்டுதான் ஆயுதப்போராட்டம் தோற்றம் கொண்டது. அது காலத் தின் தேவையாகவும், சரியானதொரு னர், உறுதியான, நேர்மையான, விடுதலை என்ற இலட்சியத்தில் விட்டுக்கொடுப்பற்ற தலைமையைக் கொண்டதாய், கட்டுப்பாடும், ஒழுங்கமைவும் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 1976ல் தமிழீழத்தில் பிறப்பெடுத்தது. பிரபா கரனின் வேகமும், அதற்கீடில்லாத ஏனையோரின் வேகக் குறைவும் இன்றுவரை பிரச்சனையாகவே உள் ளது.

கெரில்லாப் போராட்ட ஆரம்ப காலத்தில் எதிரியின் சிறி சிறு இலக் குகள், துராகிகள் மீதான தாக்குதல் கள் இடம்பெறுகின்றன. நிதித் தேவையின் பொருட்டு அரச வங்கி கள் மீதான தாக்குதல்கள் நடைபெறு கின்றன. போராட்டத்தை வேகப் படுத்தவேண்டிய அவசியம் எழு

# தமிழீழ விடுதலைப் போராட்டமும் இரு தசாப்த கால வளர்ச்சியும்

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு, தமிழீழ விடுத லைப் போராட்டம், தேசியத் தலை வர் பிரபாகரன் ஆகிய மூன்றினதும் வரலாறு ஒன்றிலிருந்து பிரிக்க முடி யாதவாறு பின்னிப் பிணைந்துள் ளதை அவதானிக்கலாம். 1976ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி தமி ழீழ விடுதலைப் புலைகள் அமைப்பு தோற்றம் கொண்டதென்பது வர லாற்றுண்மை. இக்காலத்தை அடிப் படையாக வைத்தே தமிழீழ விடுத லைப் போராட்டத்தையும் ஆராய உள்ளோம். 20 ஆண்டு கால திருப் புமுனைகளை, முன்னேற்றங்களை, பின்னடைவுகளை, முக்கிய நிகழ் வுகளை இவற்றூடான வளர்ச்சியை உற்றுப்பார்க்க உள்ளோம்.

மிக விரிவான ஆராய்வுக்கு இக் கட்டுரையில் களம் அமைக்க முடி யாது என்ற காரணத்தினால் ஒரு சில பாரதூரமான விடயங்களை மட்டும் சுட்டிக்காட்டலாம். அதே வேளை, இக்காலத்துக்கு முன்னும் அண்மைக்கால தமிழீழ வரலாறு இருப்பதை மறந்து விடமுடியாது. இலங்கைத் தீவு, பிரித்தானிய குடி யேற்றவாத ஆட்சியிலிருந்து சுதந் திரம் பெற்ற காலத்தில் இருந்தே



விடுதலைச் செயல்பாடாகவும் அமைந்தது. இச்செயல்பாடுகளில், தலைவர் பிரபாகரனின் ஆரம்ப கால பங்குபற்றல்களைக் காணுகி றோம். அவதானியாகவும், இளம் செயற்பாட்டாளனாகவும், தூரத்தே காணப்படும் இலட்சிய இலக்கை நோக்கி விரைவாகச் செல்ல முயல் பவனாகவும் விளங்குகிறார். அதே வேளை, மற்றவர்களின் வேகம் காணாமல் இருப்பதையும், அவர்க ளின் புலன்கள் பல்வேறு நாட்டங் களில் பரவுவதையும், செயல்பாடற்ற விவாதங்களில் வீணே கழிவதையும் உற்று நோக்குகின்றார். இம் முரண் பாடுகளின் விளைவுகளில் ஒன்றா கவே 'புதிய தமிழ் புலிகள்' 72-ம் ஆண்டில் தோற்றம் கண்டது. பின் கின்றது. திருநெல்வேலியில் இரா ணுவ அணி மீதான தாக்குதல் நடக் கிறது. இத்தாக்குதல் இனவாத ஒடுக்குமுறையின் விஸ்பரூப தரிச னத்தையும் உலகம் காண வழி வகுக்கின்றது. அரச அடக்குமுறை, இனக்கலவரம் என்ற ரீதியில் இன் னொரு முறை தமிழ் மக்கள் மீது 1983 யூலை 23-ல் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இனக்கலவரம் தமிழ் மக்களின் ஆயுதப்போராட் டம் எழுச்சிபெற வழி வகுக்கின்றது. அதேவேளை ஏராளமான ஆயுதக் குழுக்கள் தமிழ் மக்களிடையே தோன்றவும் இந்நிகழ்வு சந்தர்ப்பத்தை அளிக்கிறது.

புலிசார் அரசியலில், தனது தேசிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

ரித்து. கெரில்லா இராணுவம், எண்ணிக்கையிலும், ஆயுத பலத்திலும் அதிகரித்து மரபுரீதியான அம்சங்களைக் கொண்டதாக வளரத் தொடங்கியது. கடற்படையை கொண்டதான உலகின் முதலாவது கெரில்லா இராணுவம் என்ற புகழையும் பெற்றது. கரும்புலிகள் போராட்டத்திற்கு இன்னொரு பரிமாணத்தை வழங்கினர். ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டு, விமானங்கள் வீழத் தொடங்கின. உதவிப் படைகள் மாத்திரமல்ல கடலிலும், தரையிலுமான விஷேட படைப் பிரிவுகளும், விமான எதிர்ப்பு அணிகளும் உருவாகின. நிலப்பகுதிகள் விடுவிக்கப்பட்டு, விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டினுள் வரத்தொடங்கின. அப்பகுதிகளில், சிவில் நிர்வாகக் கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டன. பொலிஸ், நீதி, வங்கி நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பொருளாதார முன்னேற்றத்திற்கான அடித்தளங்கள் இடப்பட்டன. அகதிகள், சிறுவர், விதவைப் பெண்கள் ஆகியோருக்கான பராமரிப்பு நிலையங்கள் பரவலாக அமைக்கப்பட்டன. சமூக மாற்றங்கள் நிலைநாட்டப்பட்டன. சாதிக் கொடுமைகள் ஒழிக்கப்பட்டது. சீதனத்திற்கு எதிரான சட்டம் கொண்டுவரப் பட்டது. பெண்கள் விடுதலை வலியுறுத்தப்பட்டது. ஏற்றத்தாழ்வகன்ற சமூகத்துக்கான அடித்தளங்கள் இடப்பட்டன. சூழல், சுகாதாரம் என்பன பாதுகாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மறுமலர்ச்சியும், விடுதலையும் சுபீட்சமும் நிறைந்த மக்கள் வாழ்வுக்கான சகல முயற்சிகளும் முடுக்கி விடப்பட்டன. தமிழீழ மக்களின் பாதுகாப்பு, தமிழ் மக்களின் சொத்து, உயிர்ப் பாதுகாப்பு, அவர்களது பண்பாடு, மொழி அடையாளங்களின் பாதுகாப்பு என்ற நலன்களைக் கருத்திற்கொண்டு, பிராந்தியச் செல்வாக்கை விஸ்தரிக்கத் தருணம் பார்த்திருந்த இந்தியா இத்தருணத்தில் தன்னையும் இலங்கைப் பிரச்சினையோடு இணைத்துக்கொண்டது. மேற்குலக ஊடுருவலை தனது பிராந்தியத்தில் தடுப்பதும், தனக்குச் சாதகமான தீர்வு ஒன்றை இலங்கையில் தனது பலத்தின் மூலம் திணிப்பதும் அதன் குறிக்கோளாக இருந்தது. தமிழீழ மக்களின் நியாயமான விடுதலைப் போருக்கு ஆதரவளிகாது, பல்வேறு குழுக்களை வளர்த்து, தனது மாநிலங்களுக்குச் சமனான தீர்வொன்றைத் திணித்தல் என்ற இந்தியக் கொள்கை முதலில் விடுதலைப் புலிகளுக்கும், ஏனைய தமிழ்க் குழுக்களுக்கும் இடையில் ஆயுத முரண்பாட்டை வளர்த்தது. தனது கைக்கூலிக் குழுக்களை விடுதலைப் புலிகள் மீது ஏவிவிட இந்தியா முனைந்தது. இதனால், இந்திய நலன்களை முதன்மைப்படுத்தி, அதன் அடிவருடிகளாய் செயல்பட்ட குழுக்கள் செயலிழக்க வைக்கப்பட்டன. இதனால் இந்தியா, நேரடியாகத் தலையிடத் தீர்மானித்தது. தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத தீர்வொன்றின் திணிப்பு - இந்திய - விடுதலைப் புலிகள் யுத்தத்திற்கு வழி வகுத்தது. தமிழர் மீது சிங்கள மேலாதிக்கத்தை அங்கீகரிப்பதான இந்திய அரசின் தவறான கொள்கை, இந்திய அரசிற்கும், தமிழீழ மக்களுக்கும் இடையில் பகையை வளர்க்கவே உதவியது. இந்திய நலன்களுக்கு எதிரான பௌத்த சிங்கள அடிப்படைவாதப் போக்குகள் சிங்கள தேசத்தில் வளரவே இது வழிவகுத்தது. இது இறுதியில்



ராஜிவின் கொலைக்கும், இந்திய அந்நியப்படுதலுக்கும் காரணமாகியது.

தொடர்ச்சியான போராட்டங்களினூடு விடுதலைச் செயல்பாடுகள் வளர்ச்சியும், விஸ்தரிப்பும் கண்டன. பொதுமக்களின் பங்களிப்பு அதிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



ரீதியில், நிரந்த சமாதானத்துக்கான காப்பாக விடுதலைப் புலிகள் இயக்கம் வளர்ந்து வந்தது. உலகின் தலை சிறந்த கெரில்லா இராணுவம், அதன் சிறப்பார்ந்த தலைவர் பிரபாகரன் என்ற பெயரும் நிலைபெறத் தொடங்கியது.

சிங்கள இனவாதப் பூதம் நெருக்கப்பட்டு வந்தது. அதன் கொடூர முகம் சிதைக்கப்பட்டது. கொடிய தலைவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். இத்தகு நிலையில்தான் சமாதான முகமூடியுடன் புதிதாக சந்திரிகா வந்தார். உலகம் கொடூரமான இனவாத முகத்தை இன்னும் காணவில்லை என்பது போல் நடித்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, இந்திய மத்திய அரசின் கொள்கையில் மாற்றமெதுவும் இது வரை இல்லை. புதிய தேர்தலின் பின்னர், மாற்றங்கள் வரலாம். உலகின் பெரும் வல்லரசுகள், தமது வர்த்தக நலனையே முன்னிலைப் படுத்துகின்றன. அம்முன்னிலைப் படுத்தலில், இந்தியாவுக்கு அனுசரணையாக செயல்படும் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றன. மேலும், முற்போக்கான எமது இவ்விடுதலைப் போராட்டம் நசுக்கப்பட்டால், ஒடுக்கப்பட்ட மக்களின் ஏனைய விடுதலைப் போராட்டங்களையும் நசித்துவிடலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

www.tamilarangam.net

எமது விடுதலைப் போராட்டம், இந்திய நலன்களுக்கு எதிரானது என்ற கருதுகோள் வலுவாகத் திணிக்கப்பட்டுள்ளது. அதுபோல், ஜனநாயக விரோத, பொருளாதார ஸ்திர நிலைக்கு எதிரான என்ற கருதுகோளும் எதிரிகளால் நன்கு பரப்பப்பட்டு வருகின்றது. இக் கருத்துக்கள் தகவல் பரப்பலால் நிலைநாட்டப்படுகின்றன. எனவே, தற்போதைய எமது வளர்ச்சியை எடுத்துக்கொண்டால், போராட்டம் வெற்றிப்



பாதையை நெருங்கிக்கொண்டிருப்பதை அவதானிக்கலாம். அதே வேளை, உலகின் பல்வேறு சக்திகள், தவறான கொள்கை, நோக்கு காரணமாக எமது போராட்டத்தை அழித்தொழிக்க முற்படுவதையும் காண்கிறோம். அச்செயற்பாட்டில்



சந்திரிகா அரசுக்கு உதவுவதையும் பார்க்கிறோம். இது பெரும் நெருக்கடியாகவும், விடுதலைக்கு அண்மையாகப் போடப்பட்ட பெரும் தடையாகவும் காண்கிறோம். எமது போராட்டத்தை எமது மக்கள் சக்தி மூலம் வலுப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். போராட்டம் தாயகத்தில் தீவிரமாக முன்னெடுக்கப்படவேண்டும். அதற்குத் துணையாக சர்வதேச சூழ்நிலையும் உருவாக்கப்படவேண்டும். ஓர் அரசியல் அறிஞர் கூறினார், "இலங்கையில் தமிழ் மக்களின் போராட்டம், சர்வதேச அரசியல் நெருக்கடிகளின் இடைவெளிகளில் வளர்கின்றது." சிக்கல்கள் நிறைந்த அவ்விடைகளிடாக போராட்டத்தை விரைவாக விடுதலை இலக்கை நோக்கி தமிழீழ விடுதலைப் புலிகளும், அவர்களின் பின்னாலுள்ள மக்களும் நகர்த்திச் செல்வார்கள். அது நிச்சயம்.

**- வளவன்**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசத்தின் வருடல்



யோ. எழிலீ

## காட்சி 1

*(தூரத்தில் கடலலைகளின் ஓசை கேட்டுக் கொண்டிருக்கிறது. கடற்கரைக்குச் சற்றுத் தள்ளி அமைந்திருந்த ஒரு குடியிருப்பின் குடிசை முற்றம்)*

பொன்னம்மா: (வானத்தைப் பார்த்துவிட்டு, தனக்குள்) மாலை வெள்ளியும் மறைஞ்சு போச்சுது.... (குளிருக்கு உடம்பை ஒரு முறை சுருக்கி) ஆ... இப்படிக் குளிர் ஊசி மாதிரிக் குத்துது... ம்.... இதிலை நிக்கிற எனக்கே இப்பிடியெண்டால் கடற்கரையிலை காவலுக்கு நிக்கிற பிள்ளையளைக் குளிர் என்ன பாடுபடுத்தும்.... முந்தியெண்டால்....

இந்தப்பனியும் நிலவும் வாற இரவுகள் மனதுக்கு எவ்வளவு குளிர்ச்சியாய் இருக்கும்... கடலுக்காலை நிலவு பறுவத்திலண்டைக்கு மெள்ள மெள்ளத் தலைநீட்டிறதைப் பார்க்க அதே ஒரு தனிச் சந்தோசம்... இப்ப.... ம் (பெருமூச்சு)

நான் எங்கடை செத்துப்போன சந்தோஷங்களைப் பற்றி யோசிச்சுக்கொண்டிருக்கிறன். காவலிலை நிற்கிற பிள்ளையள் சாப்பிட்டிட்டுதுகளோ தெரியேல்லை....

(முன் ஒழுங்கையால் சைக்கிள் ஒன்று வருகிறது)

ஓ.... சாப்பாடு கொண்டு வாற பெட்டை போல கிடக்குது.... (நன்றாகப் பார்த்து) ஓ.... அவள் தான்.... பிள்ளை ஆரடி.... ராதாவே.....

ராதா: ஓமணை.... (சைக்கிளை நிறுத்துகிறாள்)

பொன்: சாப்பாடு எடுத்துக் கொண்டு போறியே?

ராதா: ஓமணை... இண்டைக்குக் கொஞ்சம் பிந்திப் போச்சுது....

பொன்: என்னடி மேனை கறி....?

ராதா: கத்தரிக்காய்... கோவா.... அப்புளிம்...

பொன்: எலும்பு வளருற வயதல்லே.... உதுகளைத் திண்டு என்னத்தை?....

ராதா: ஒவ்வொருநாளுமே... இருந்திருந்திட்டு இப்படியும் சாப்பிடத் தானே வேணும்....

பொன்: ம்.... (பெருமூச்சுடன்) கடலுக்கை போனால் சுட்டுத் தள்ளுறான்... வன்னியாலை ஆடுமாடு கொண்டு வர ஏலாமல் வழியிலை குந்தியிட்டான் யமன் மாதிரி..... ஆன கறிபுளிக்கு என்னத்தைத் தான் செய்யிறது....

ராதா: நீ முன்னுக்கு போடி பிள்ளை....புளிமாங்காய் போட்டுக் கொஞ்சம் சூடை தீய்ச்சனான்.. கொண்டு ஓடி வாறன்.... (ராதா புறப்படச் சற்று உரத்து) நான்தான் வருவன்.... பிறகு துவக்கை நீட்டிப் பிடிச்சுக்கொண்டு 'ஆரது' எண்டு வெருட்டாதையுங்கோ....

ராதா: (போய்க்கொண்டே...) உதுக்கெல்லாம் வெருளுற கட்டையே நீங்கள் போட்டுவாறன்...

## காட்சி 2

*சற்றுக் கிட்டவாக, இடையிடையே மட்டும் அலையோசை கேட்டுக்கொண்டிருக்கிறது. பெரிய சவுக்கு மரங்கள் சிலவற்றிற்குக் கீழுளுள்ள ஒரு காவல் அரண்.*

*(ராதா கொண்டு வந்து சைக்கிளை விட்டு விட்டு சாப்பாட்டைக் கையிலெடுக்க அது சரிந்துவிழுகிறது)*

தேவி: சைக்கிளை மணலுக்கை சைற் ஸ்ராண்டிலை விட்டால் விழும்தானே.... மக்கு எடுத்து மரத் தோடை சாத்து.... என்ன சாப்பாடு?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராதா: புட்டுத்தான்....

மதி: புட்டோ.... சரிதான் புட்டைத் திண்டிட்டு சென்றியிலையிருக்க நித்திரை கண்ணைச் சுழட்டிக்கொண்டு வரப்போகுது.... சரி.... சரி.... நான் பார்க்கிறேன்.... நீங்கள் இரண்டு பேரும் முதல்ல சாப்பிடுங்கோ....

தேவி: இரா முழுக்கத் தண்ணி தண்ணியாய் விடாய்க்கப் போகுது... ம்.... எடு சாப்பிடுவம்....

ராதா: பொறடியப்பா.... பொன்னம்மா ஆச்சி மீன் கறி கொண்டு வாறனெண்டவ...

மதி: உனக்கு நாக்கு நல்லாய்த் தேடுதுதான்..... பாவம் தன்ரை சாப்பாட்டுக்கே கஷ்டப்படுற கிழவி....

ராதா: நான் கேட்கயில்லையக்கா.... அவவாய்த்தான்...

பொன்: (வந்து கொண்டே) என்ர கஷ்டத்தைப் பற்றிக் கவலைப்படுறியளடியாத்தை... உங்கடை கஷ்டத்தைப் பற்றி நான் கவலைப்படக் கூடாதே....?

மதி: இது என்னணை கஷ்டம்....? கடமையைச் செய்யிறம்.... விடுதலையின்ரை பெருமையை உணராட்டில்தான் கடமை ஒரு கஷ்டம்.... எங்களுக்கு கடமை ஒரு பெருமை...

பொன்: கடமை... ம்... (பெருமூச்சு விட்டு) பிள்ளை... என்ரை குடிலிலை நான் தலைவைச்சுப் படுக்கறதெண்டால்... நாளைக்கு நான் செத்த பிறகு என்ரை மையம் கிடந்து நாறிப் போகாமல், நாயிழுத்துப் பிய்க்காமல் என்ரை சுடலையிலை (அழுத்தமாக) என்ரை சுடலையிலை கட்டை வேகுமெண்டால்... அது உங்களாலை.... உங்கடை கஷ்டங்களாலை....

மதி: உங்கடை கட்டை மட்டுமில்லை எங்கடை கட்டையும் இந்த மண்ணிலைதான் வேகுமணை...

பொன்: பிள்ளை வாய் தடுமாறிக்கூடி அப்படிச் சொல்லாதையடா... நீங்கள் வாழுறதாலைதான் நாடு வாழுது... நாங்களும் வாழுறம், எங்கடை சனங்கள் வாழுது...

மதி: ஆச்சி! (சிரித்து) பயப்பிடாதையணை.... நான் செத்தாலும் நாங்கள் வாழுவம். ஓ நாங்கள் வாழுவம்....

பொன்: சரி... சரி முதல் நீங்கள் சாப்பிடுங்கோ.... மதி.... நீயும் வா பிள்ளை...

மதி: முதல் இவை சாப்பிடட்டும்... நான் காவல் பார்க்கிறன்...

பொன்: (கனிவுடன்) மேனை.... நீ போய் புட்டைத் திண்டிட்டுக் கொஞ்சநேரம் கண்ணயரடா.... காவலை நான் பார்க்கிறன்.... போ.... போடா....

மதி: (உணர்ச்சி வசப்பட்டுக் கண்கலங்கி) ஆச்சி.... (பொன்னம்மா மதியின் தலையை வருட) ஆச்சி... நீங்கள் வாஞ்சையோடை என்ரை தலையைத் தடவயுக்கை தேசமே ஆசையோட என் தலையை வருடுற மாதிரிக் கிடக்குது.... ஆச்சி உங்கட கையள் என்ரை சொக்கைத் தடவயுக்கை தமிழினமே என்னைப் பாசத் தோடை கட்டியணைக்கிற மாதிரிக் கிடக்குது....

பொன்: என்னடி பிள்ளை நீ சொல்லுறாய்...?

மதி: ஆச்சி... நீங்களும், உங்களைப் போலை ஆக்களும் தாற ஆதரவு தான் எங்களை நிமிர்ந்து நிற்க வைக்குது... கொடிய எதிரிக்கு முன்னாலை குமுறி எழுகிற ஆற்றலைத் தருகுது.

நாங்கள் தேச விடுதலைக்காக ஒரு தாயையும், தகப்பனையும் பிரிஞ்சம்.... எங்களுக்குத் தேசம் முழுவதுமே தாய்மார், தந்தைமார், சகோதரங்கள், இருக்கினம் எண்டு நினைக்கையுக்கை நெஞ்சு உணர்ச்சியாலை நிரம்பி வழியுது.

பொன்: பிள்ளை! கண்ணைத் துடையடா... நான் எப்பவும்... உங்கடை தாய்தான்... (உணர்வை மாற்றி) ம்.... ம்... நீங்கள் சாப்பிடுங்கோ... (பொன்னம்மா வெளியே எழுந்து வந்து மணலில் அமர்கிறாள்)

தேவி: ஆச்சி.... என்ன இருந்தாப் போலை வெளியிலை போய் இருக்கிறா....

மதி: கொஞ்சநேரம் பார்.... நான் ஆச்சியை என்னண்டு கேட்டுக் கொண்டு வாறன்....

ஆச்சி.... நாங்கள் ஏதாவது உங்கடை மனம் நோகிற மாதிரிச் சொல்லிப் போட்டமே...?

பொன்: நான் ஒருதாய் தான்... உங்களுக்கு மட்டுமில்லை ஒரு மகனுக்கும் தாயாயிருந்தன்.... எனக்கு உங்கடை வயதிலை ஒரு மகன் இருந்தான்...

ராதா: ஆச்சி... உங்களுக்கு ஒரு மகன் இருக்கிறாரே....?

பொன்: இருந்தான்.... (பெருமூச்சுடன்) ஓம்... இருந்தான்... ஆனால் நெடுக அவனாலை இருக்க முடியாமல் போச்சுது....

மதி: ஏனணை..... என்ன நடந்தது....?

பொன்: அவனும் இந்த மண்ணிலை.... இந்த நிலவிலை... இந்தப் பனியிலை ஓடித்திரிஞ்சவன்தான்.... இந்தக் கையாலை சோறு வேண்டித் திண்டவன் தான்.... அவன்ரை தலையையும் ஆசையோட தடவினனான்தான்... ஆனால்...

மதி: ஆனால்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொன்: அங்கை பார் அந்தக் கோறைப் பூவரசுக்கு அதுக்குப் பக்கத்திலை இருக்கிற கரை நிலம்.... இதிலை தான் எங்கடை பூட்டன், பேரன், மாமன் நாங்கள் எண்டு பரம்பரையாய் வள்ளம் கட்டினம்... வலை காயப்போட்டம்.... மீன் நோண்டி உப்புப் போட்டம்.... ஒருநாள் அதிலை நிண்டு தான் கைகாட்டி... (விம்மி அழுகிறாள்)

மதி: (பதட்டத்துடன்)

பொன்: (அழுகையுடன்) கையைக்காட்டிக் கடலுக்கு அனுப்பி வைச்சன்....

## கட்சி 3

*(பல வள்ளங்கள் கடலுக்குச் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன. ஒரிரு வள்ளங்கள் செல்கின்றன.)*

*(வேலுப்பிள்ளை, மகன் செல்வம், உதவியாள் இராசையா ஆகியோர் வலைகள் முதலியனவற்றை ஏற்றிக் கொண்டிருக்கின்றனர்.)*

பொன்: மேனை கடல் எண்டைக்கும் ஒரு நாளைப் போல இராது.... கவனமடா.... இஞ்சாருங்கோ....

வேலு: நீ கவனம்.... கவனமெண்டு அவனைத் தொழில் பழக விட்டிடாதை.... நீ.... வாமோனை வள்ளத்தைத் தள்ளு.

(மூவரும் சேர்ந்து வள்ளத்தைக் தள்ளுகின்றனர். தள்ளும்போது 'ஓ' என்னும் ஒலி)

பொன்: பன்பையுக்கை சர்க்கரைக்கட்டி பிறம்பாய் வைச்சிருக்கிறன்... அரிசிப் புட்டோட தின்னுங்கோ.... தண்ணி ரியூப் எடுத்தனியளே....

வேலு: ஓமோம்... நீ ஏறடா மேனை... நாங்கள் போட்டு வாறம்.... இராசையா.... இஞ்சினை இழு.... சன்னத்தியானே நீ தான் துணை...

செல்: அம்மா... போட்டு வாறம்....

## காட்சி 4

*(வள்ளம் கடலில் போய்க்கொண்டிருக்கின்றது)*

இரா: அண்ணை.... பருத்தித்துறைக்கோரி மறைஞ்சிட்டுது...

வேலு: இஞ்சினைக் குறை... மேனை.... பாகக்குண்டை நீருக்குள் விடுகிறான்) என்ன மண்தட்டுதே...

செல்: இல்லையையா.... நெடுகப் போகுது....

வேலு: பாகமீயாக் கடலுக்கு வந்திட்டம்....

இரா: (திடீரென) அண்ணை.... அண்ணை அங்கார்.... செவ்வல்...

வேலு: ம்.... மேனை கொடியைப் போடு.... கொடியைப் போட்டிட்டு வலையைப் படுத்துவம்....

இரா: அண்ணை.... தம்பி சுக்கானைப் பிடிக்கட்டும்.. நான் வலையைப் படுத்திறன்.... தம்பி இஞ்சை வா....

வேலு: மெல்லக் கிழக்கை வெட்டிப் பிடி... வெட்டச் சொன்னால் ஒரேயடியாய் வெட்டிறதே.... மூளையைப் பாவியுங்கோடா....



இரா: அண்ணை வலை படுத்துவம்...

வேலு: ம்... ம்... மெல்ல.. தொழிலைக் கவனமாய்ச் செய்யுங்கோடாப்பா... ஒவ்வொருநாளும் சொல்லுறதே... தொழிலைத் தெய்வமெண்டு நினையுங்கோடாப்பா...

(வலை படுத்தி முடிகின்றது)

இஞ்சினைக் கிடத்து.... இனிச் சாப்பிட்டிட்டு ஒரு கண் நித்திரை கொள்ளுவம்....

செல்: இராசையாண்ணை... இந்தாருங்கோ.... சர்க்கரை...

வேலு: எனக்கும் ஒரு கட்டி தா.....

(மூவரும் சாப்பிடுகின்றனர்)

செல்: (பதட்டத்துடன்) ஐயா... அங்கை ஏதோ... கறுப்பாய் தெரியுது....

இரா: அண்ணை.... நேவி போலை கிடக்குது....

(வ்வோக்கஸ்லையிற் அடிக்கப்படுகின்றது)

செல்: ஐயா... லையிற் சுத்திக்கொண்டு இஞ்சாலை தான் வருது....

வேலு: இராசையா.... இஞ்சினை ஸ்ராட் பண்ணிப் போட்டு, சுக்கானை வேண்டிப் பிடி.....

இரா: அண்ணை.... லையிற் எங்களுக்கு நேரை வந்தவுடனை அப்பிடியே நிண்டிட்டுது....

வேலு: இனி ஆபத்து.... இஞ்சினை றேயிஸ் பண்ணிப் பிடி வள்ளத்தை முருகைப் பிட்டிப் பக்கம் விடு....

செல்: ஐயா.... கிட்ட வாறன்... (சூட்டுச் சத்தம் கேட்கிறது)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வேலு: சுடத்துவங்கியிட்டான்... (சூடு செல்வத்துக்கு விழுகிறது, ஐயோ.... என்ரை பிள்ளைக்குச் சூடு பட்டிட்டுது... வள்ளத்துக்கை விழுந்துபடுங்கோ.... சன்னதியானே எங்களைக் காப்பாத்து.... ஐயோ.... என்ரை தோள்மூட்டிலை ஈரமாய்.... இரத்தம்..... ஐயோ.... (நேவி வள்ளம் அருகில் வருகிறது. மூவரையும் நேவி வள்ளத்தில் ஏற்றிவிட்டு படகைக் கட்டியிழுத்துச் செல்கிறார்கள்)

www.tamilarangam.net

## காட்சி 5

*(பொன்னம்மா கடற்கரையில் போராளிகளுடன் இருக்கும் காட்சி மீண்டும்)*

பொன்: நடந்த விஷயம் எதுவுமே எனக்குத் தெரியாது... வழக்கம் போலை நான் கிழக்கு வெளிக்கக் கடற்கரைக்குப் போட்டன். வள்ளங்கள் ஒவ்வொண்டாய் வரத்துவங்கிச்சு.... கடலைக் கண்ணாலை அளந்தபடி காத்துக் கிடந்தன்.... ஆனால்.... ஆனால்... எங்கடை வள்ளம் மட்டுமே வரவேயில்லை.....

ஓடியோடி எல்லோரையும் விசாரிச்சன்.... ஒருத்தருமே காணயில்லை எண்டிட்டினம்....

நேரம் பத்து, அப்பிடி இருக்குமோ எண்டு அங்கலாய்ப்புகள்... கடைசியலை பத்துப்பன்னிரண்டு வள்ளங்கள் தேடி வெளிக்கிட்டுது... நேரம் ஆக ஆக நெஞ்சிலை ஒருபயம் உருண்டு, பிரண்டு அடைச்சுக் கொண்டிருந்தது....

காத்துக்கொண்டிந்தவை ஒவ்வொருத்தராய்க் கலையத்துவங்கிச்சினை... ஆனால் நான்.... நான் மட்டும்.... அந்தக் கோறைப் பூவரசுக்குக் கீழை குந்திக்கொண்டிருந்தன்.... ஒவ்வொரு அலையும் எழும்பி விழயுக்கை அடுத்த அலையின்ரை உச்சியலை ஒரு வள்ளம் தெரியாதோ எண்ட ஏக்கம்....

மதி: வள்ளம் வந்ததே ஆச்சி....

பொன்: மைம்மல் பொழுதிலை தேடிப் போன வள்ளங்கள் ஒவ்வொண்டாய்த் திரும்பி வந்திது... ஒருத்தன் மட்டும்....

எங்கடை கொடியையும், வலையையும் மட்டும் கொண்டந்தான்... குழறினன்.... கதறினன்....

மதி: பிறகு அவை வரவேயில்லையே...

பொன்: வந்தார்.... வந்தார்.... ஒரு நாளில்லை... இரண்டு நாளில்லை... நாலு வருஷத்துக்குப் பிறகு....

அண்டைக்கு கந்தசாமி கோயில் எட்டாம் திருவிழா...

அவரும் பிள்ளையும் காணாமல் போனதிலையிருந்து நான் கோயிலுக்குப் போறதையே விட்டிட்டான்....

விடியப்பறம்... வடக்கு வீதியிலை மேளச்சமா நடந்து கொண்டிருந்தது.... எங்கடை வீட்டுக்கு சத்தம் கேட்டுது..... அப்பத்தான் திடீரெண்டு படலை விடுற சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழும்பினன்....

## காட்சி 6

*(பின்னணியில் நாதஸ்வர இசை கேட்டுக்கொண்டிருக்கிறது)*

*(வேலுப்பிள்ளை மெலிந்து, தாடி வளர்த்த கோலத்துடன் படலையைத் திறந்து கொண்டு உள்ளே வந்து, பரிதாபமாக முற்றத்தில் நிற்கிறார்)*

பொன்: (தடுமாறி) ஆர்.... ஆரது. நீங்கள்.... நீங்கள் இப்பிடி.... ஐயோ தாடி வளர்த்து.... இது என்ன கோலம்.... இந்தக் கோலத்திலை காணவே நாலு வரியமாய்க் கண்மூடாமல் காத்துக்கொண்டிருந்தன்... சன்னதியானே உன்ரை கண்ணுக்கு முன்னாலை இந்தக் கொடுமையெல்லாம் நடக்குதே.... ஐயோ.....

வேலு: பொன்னம்மா.... அழாதை.... இந்த நிலையிலெண்டாலும் வந்தன்..... ஆனாப்... என்ரை பிள்ளை...

பொன்: (பதட்டத்துடன்) பிள்ளை..... என்ரை பிள்ளை... பிள்ளை எங்கை... என்ரை பிள்ளை எங்கை....

வேலு: (அழுகையுடன்) பிள்ளையையும்.... இராசையாவையும்....

பொன்: (பயம் கலந்த பதட்டத்துடன்) பிள்ளையையும்.... இராசையாவையும்....?

வேலு: நேவிக்காறர் சுட்டுப் போட்டாங்கள்....

பொன்: ஐயோ.... என்ரை பிள்ளை.... என்ரை ஐயோ... (குமுறி அழுகிறாள்)

வேலு: (அழுதழுது) சுட்டது மட்டுமில்லை.... காயத்தோடை தூக்கித் தங்கடை போட்டிலை போட்டாங்கள்.... ஒரு ஒற்றைத் துணியாலை கூடி ஒரு கட்டுப் போட மாட்டனெண்டிட்டாங்கள்.... இரத்தம் போகப் போக என்ரை பிள்ளை என்ரை கண்ணுக்கு முன்னாலையே, 'தண்ணி, தண்ணி' எண்டு கத்திக் கத்தியே உயிரைவிட்டான்....

பொன்: என்ரை பிள்ளை போட்டான்.... ஐயோ.... என்ரை பிள்ளை...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## காட்சி 7

பொன்: பூசா முகாமின்ரை சித்திரவதையள்.... சொறியும் சிரங்குமாய், மாறாத இருமலாய் - அவரை வெறும் நடைப்பிணம் ஆக்கியிட்டுது... படுத்த படுக்கையிலை நோயின்ரை கொடுமையோட, அவராலை ஒரு வருஷம் தான் உயிரோடை வாழ முடிஞ்சுது....

ஊர் கூடி ஒப்பாரி வைச்சுது.... ஆனால் நான்... அழவேயில்லை...

ஏனெண்டால்... எண்டைக்கெண்டாலும் ஒரு நேவி போட் வெடிசுச் சிதற வேணும்... அதை என்ரை கண்ணாலை பார்க்க வேணும் அதைப் பார்க்க முடியாமல் கண்ணீர் என்ரை கண்களை மறைச்சிடக் கூடாது....

மதி: ஆச்சி.... நம்பிக்கையாய் உங்கடை ஆசை நிறைவேறும் நம்பியிரணை. எணேய் நிலவு உச்சிக்கு வந்திட்டுது.... இனி நீங்கள் போய்ப் படுங்கோ...

பொன்: நித்திரை.... அது எங்கை வாறது... ம்.... அவங்கள் சிதறிச்சாகிறதைப் பார்த்த பிறகு தான் நிம்மதியாய் நான் நித்திரை கொள்ளுறது.... பெரும் வெடிச்சத்தம் ஒன்று கேட்கிறது.

மதி: (சந்தோஷத்தடன்) ஆச்சி.. ஆச்சி... அங்கை கடலுக்கை பாரணை.

பொன்: பெரிய நெருப்பு.... கறுப்புக்கறுப்பாய் புகை.... பிள்ளை என்ன நடந்தது.... நெருப்பு ஆகாசமளவுக்கு எழும்புது....

தேவி: கரும்புலி புகுந்திருக்குது போல கிடக்குது....

பொன்: (கவலையுடன்) அப்படியெண்டால் எங்கடை பிள்ளையளும்...

மதி: ஆச்சி... ஆச்சி... ஏன் அழுகிறியள்...?

பொன்: பெரிய பெரிய வெற்றியளுக்காகப் பிள்ளையள் சாகுதுகள்.... என்ரை பிள்ளை ஒரு பிரயோசனமுமில்லாமல் செத்துப் போனான்.....

மதி: அப்பிடி இல்லயணை..... இப்படியான இழப்புக்கள் தான் எங்களுக்கு உணர்வைத் தந்தது..... இப்படியான இழப்புக்கள்தான் உங்களைப் பிரயோசனமான வாழ்வை வாழ வைக்குது....

(பொன்னம்மா கடலை நோக்கி ஓடுகிறாள்)

ஆச்சி.... எங்கை ஓடுறியள்....

பொன்: (ஓடிப்போய் முழங்காலளவு தண்ணீரில் நின்று) என்ரை பிள்ளையைக் கொண்டவங்கள் சிதறிப்போய் போறாங்கள்.... கொடியவங்கள் பொசுங்கிச் சாகிறாங்கள்... அதை நான் பார்க்கிறன்... அதை நான் பார்க்கிறன்..

(பலமாக) டேய்.... இது எங்கடை கடலடா... எங்கடை பூட்டன், பாட்டனெண்டு பரம்பரையாய் ஆண்ட கடலடா.... இனி சேட்டையள் நடக்காது.... டேய் நாங்கள் இப்ப நிமிர்ந்து நிற்கிறம் எங்கடை தேசம் நிமிர்ந்து நிற்குது....

# பார்

**பரமசிவன் கழுத்தில்**
**பாம்பு கிடந்து கொண்டே**
**அரவமிடுவது பார்! - கருடன்**
**அசையாதிருப்பதும் பார்!**

**எதிரியின் காலை நக்கும்**
**இழிந்த பிறப்பினர்கள்**
**சதிகள் புரிவது பார்! - புரிந்தும்**
**சரிவராதுள்ளதும் பார்!**

**கூலிக்கு மாரடிக்கும்**
**கோணங்கிக் காரர்களின்**
**போலிப் பிரச்சாரம் பார்! - அதற்கே**
**போதும் நிவாரணம் பார்!**

**வீடணன், யூதாஸ், கோட்சே**
**விரும்பியவற்றையெல்லாம்**
**தேடத்துடிப்போரைப் பார்! - உயிராய்ச்**
**செத்துக்கிடப்போரைப் பார்!**

**காட்டிக் கொடுப்பதையே**
**கடமையாகக் கொண்டிருக்கும்**
**போட்டிக் குழுவாரைப் பார்! - வருநாள்**
**போக்கிடம் இல்லாரைப் பார்!**

**வெல்ல முடியா மையால்**
**வேறு வழிகளின்றிக்**
**கொல்லைப் புறத்தினிலே - அமர்ந்தே**
**குடித்தனம் செய்பவர் பார்!**

**வாயினில் உள்ள வீரம்**
**வருமானம் தேடுமென்றால்**
**நோயில் கிடப்பார்களோ? - உயிரை**
**நொடியில் முடிப்பார்களோ?**

**எதையேனும் உண்டுடுத்தே**
**எப்படியேனும் வாழ்ந்தே**
**சதையை வளர்ப்போர்களே - நிதமும்**
**சதியை வளர்ப்பீர்களே!**

*- மானன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கரிக்குருவிகள்

இந்த இரண்டு வார காலத்தில் நான் பழக நேர்ந்த மாணவ, மாண விகளிடத்தும், அவர்களது ஆசிரியர் களிடமிருந்தும் இறுதியாக விடை பெற்றுக்கொண்ட நான், சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் இருந்த எனது மாடிமனையை நோக்கி நடக்கலானேன். என்னை விலத்திக்கொண்டு பிள்ளைகள் கூட் டம் தத்தம் சைக்கிள்களில் பறந்தனர். வெள்ளிக்கிழமை என்பது மாண வர்களின் குதூகலத்தில் மாத்திர மல்ல ஆசிரியர்களின் முகங்களிலி ருந்தும் தெரிந்தது. நடந்து பாட சாலைக்கு வரும் பிள்ளைகளே இல்லையென்று சொல்லிவிடலாம். அத்தனையும் அனேகமாகப் புத்தம் புதிதுபோன்ற வண்ண வண்ண சைக்கிள்கள்! யாவருமே ஆரோக் கியம் ததும்பும் பிள்ளைகள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் என்னால் இந்தப் பிள்ளைகளையும் அவர்களு டைய சுதந்திர தேசத்தையும், எமது தமிழீழத்தையும் அங்குள்ள பிள்ளை கள் வாழ்ந்துகொண்டிருக்கும் போர்க் காலச் சூழலையும், அதனால் அவதி யுறும் மக்களையும், இப்போது மக் கள் அனுபவிக்கும் எல்லையில்லாத் துன்பங்களையும் எண்ணாமல் இருக்கமுடியவில்லை. என்னை அறி யாமலே ஒரு பெருமூச்சு விட்ட வாறே நான் நடையைத் தொடர்ந் தேன்.

அந்த டெனிஷ் பாடசாலையில், 3, 4, 5-ம் வகுப்புப் பிள்ளைகள், அந்த இரு வாரங்களும் சிறீலங்காவைப் பற்றி அறிந்துகொள்ளும் பாடத்திட் டம் மேற்கொள்ளப்பட்டதாலும், அந்த நாட்டைச் சேர்ந்தவன் என்ப தனாலும், எழுபதாம் ஆண்டுகளில் நான் எழுதிய சிறுகதைகள் கொண்ட தொகுதியொன்று டெனிஷ் மொழி யில் வெளியிடப்பட்டு, அது டென் மார்க்கின் நூலகங்களிலும் இடம் பெற்றிருப்பதாலும், பாடசாலை இருக்கும் பாறூம் நகரில் நான் வசிப் பதனாலும் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது.

ஆனால், நான் விரும்பியது போன்று, எனது விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக எதையும் கூறு வற்கு எனக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. சம்பந்தப் பட்ட மாணவர்கள் யாவரும் 11 வயதுக்குட்பட்ட பிள்ளைக ளாக இருந்ததால், சிறீலங்காவில் நடைபெறும் போரைப்பற்றியோ அதன் பாரதூரமான விளைவு கள் பற்றியோ கூறி அவர் களுடைய மனங்களில் அனாவசியமான சிக் கலை உருவாக்கக் கூடாது எனக் கேட் டுக்கொள்ளப்பட்டிருந் தேன். ஆயுத விற்பனையில் முன்னணியில் நிற்கும் அண்டை நாடான சுவீடனில் பிள்ளைக ளின் விளையாட்டுப் பொருட் கள் எதுவும் ஆயுதபாணியில் இருக் கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை யும் நான் அறிந்திருந்ததால் இவ் விஷயம் எனக்கு வியப்பை ஏற்படுத் தவில்லை.

நமது நாட்டில், பிள்ளைகள் சாதா ரணமாகப் பயிலும் நீதிக்கதைகள் போன்றவற்றை எடுத்துக்கூறியும், அவை சம்பந்தமான சித்திரங்களை பிள்ளைகளுடன் சேர்ந்து வரைந்தும், அப்பாடத்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற உதவியதில் எனது மனம் ஓரளவில் திருப்தி கண்டிருந்தது.

அதைவிட, டெனிஷ் பிள்ளைக ளும், மற்றும் மிகக் குறைந்த எண் ணிக்கையில் அங்கு கல்வி பயின்ற துருக்கி, ஈரான், பாலஸ்தீனியப் பிள் ளைகளும் என்னுடன் அன்பாகவும், உரிமையுடனும் பழகிய இந்த இரு வாரங்களும் எனது முன்னைய ஆசி ரிய வாழ்க்கையின் இனிமையையும், நிறைவையும் மீண்டும் அனுபவிக்க வைத்திருந்தன.

இந்த நிறைவானது, இந்த இரண்டு வாரங்களில் எனக்கு ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களை மறக்க உதவியாக இருந்தபடியினால், நான் உற்சாகமானதொரு மனநிலையில் தான் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தேன்.

பாறும் நகரின் ஊடாகச் செல் லும் நெடுஞ்சாலையின் மேலாக அமைந்திருந்த பாலத்தை அடையும் எனது வழி, ஒரு ஏற்றமான பாதை யாக இருந்தது. அந்தப் பாலத்தில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நின்று பார்த்தால், மேற்கே எனது மாடிமனை அமைந்திருந்த 'மிட்ற் புந்' என அழைக்கப்படும் இரும்புக் கட்டிடத் தொகுதிகளும், அவற்றையொட்டி இருந்த பச்சைப் புல்வெளித் துண்டங்களும் அழகாகத் தெரியும். பாலத்தில் நின்றுகொண்டு கீழே நெடுஞ்சாலையைப் பார்த்தால், எதிரும்புதிருமாகக் கணக்கற்ற வாகனங்கள் சீறிக்கொண்டு விரைவதைக் காணலாம். எத்தனை மனிதர்கள்!.... எத்தனை அவசரம்!.... என்ற பிரமிப்பு ஏற்படும்.

இப்போது, எனக்குப் பின்னாக யாரோ வருவது போன்ற உணர்வு ஏற்படவே திரும்பிப் பார்த்தேன். அந்தப் பாடசாலையின் ஆசிரியர் அறையில் நான் அடிக்கடி பார்க்க நேர்ந்த ஆசிரியர் ஒருவர் தனது சைக்கிளை அந்த மேடான பாதையில் சற்றுச் சிரமத்துடன் உருட்டிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்.

அவருடைய பெயர் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. என் கடமை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைவிட மற்றைய ஆசிரியர்கள் எனக்கு அறிமுகம் செய்துவைக்கப்படவுமில்லை. அவர்களில் பெரும்பான்மையோர் என்னைக் 'கண்டுகொண்டதாகக்' காட்டிக்கொள்ளவுமில்லை. எனது 10 ஆண்டுகளுக்கு மேலான அகதி வாழ்க்கையில் ஏற்பட்டிருந்த இவ்வகையான அனுபவங்களினால் எனது தோல் சற்று மரத்துப்போயிருந்தாலுங் கூட, அவர்கள் காட்டிய அலட்சியம் முதலில் என்னைத் தைக்கவே செய்திருந்தது. அதுவும் இப்போது எனக்குப் பின்னாக வந்துகொண்டிருந்த ஆசிரியரும் நானும், ஆசிரியர் அறையில், ஒரே மேசையில் 40 நிமிடங்களுக்கு மேலாக அமர்ந்திருந்த போதும் என்னைக் கண்டுகொள்ளாமல் இருந்த காரணத்தினால் அவருடைய முகமும், அவர் காட்டிய அலட்சியமும் என் மனதில் சற்று ஆழமாகவே பதிந்திருந்தன.

இப்போது அவருடைய முகம் விகசித்திருந்தது. பாடசாலையில் வெள்ளி மதியபோசன விருந்து முடிந்து வருகின்றார் என்பதை அவருடைய பியர் தொந்தியும், முகத்தின் மதுக்களையும் கூறின. அந்தப் போதை காரணமாகவோ என்னவோ, அவர் என்னைப் பார்த்து ஹாய்! என்றார். பதிலுக்கு ஹாய் சொல்லிவிட்டு, பண்பு கருதி அவருடன் சேர்ந்து நடக்க ஆரம்பித்தேன்.

"எனது பெயர் யென்சன்!.... நான் உம்முடைய கதையொன்றை இன்றுதான் வாசிக்க நேர்ந்தது!.... அந்த 'வீடும் இல்லமும்' என்ற கதை நன்றாகத்தான் இருந்தது!.... உண்மைதான்!.... வீடு என்பது வெறும் கட்டிடந்தான்!.... இல்லம் என்பதே வேறுதான்!...." என்று சைக்கிளைத் தள்ளியவாறே கூறினார். மூச்சு இரைத்தது.

..... வயது? ......40க்குச் சற்று அதிகம்.... குடும்ப நிலை?... நிச்சயமாக விவாகம் இரத்தாகி தனிப்பறவையாக வாழும் பல டெனிஷ் குடிமக்களில் இவரும் ஒருவர்!.... அதனால்தானோ இல்லம் பற்றிய ஒரு பட்டறிவு!.... எனது மனம் கணணியாகத் தொழிற்பட்டு தகவல்களைப் பெற்று ஒழுங்குபடுத்திக்கொண்டது.

அந்த, அதிக விசாலமற்ற பாலத்தைக் கடந்து பாலத்தின் மறுமுனைக்கு வந்தபோது அங்கே பாதையோரமாக இருந்த ஒரு மரவாங்கைக் காட்டி, "சற்றுநேரம் இங்கே அமர்வோமா!" என அழைப்பு விடுத்தார். அதற்கு நான் சம்மதம் தெரிவித்ததும், சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு அதிலிருந்த தனது பையை எடுத்தார். போத்தல்கள் கிணுகிணுத்தன.

காற்றோட்டமிக்க இடம்! அன்புக்குரியவள் காத்திருப்பாளே என்ற போத்தலை வைத்துக்கொண்டு, தனது சாவிக்கொத்திலிருந்த திறப்பினால் அதை சட்டென இலாவகமாகத் திறந்து ஒரு மிடறு வாய்க்குள் சரித்துவிட்டு, இருக்கையில் என்னருகில் அமர்ந்துகொண்டார் யென்சன்.

சட்டைப் பையிலிருந்த சிகெரட் பைக்கற்றை எடுத்து ஒரு சிகெரட்டை உருவிப் பற்றவைத்துப் புகையை உறிஞ்சியபடியே என்னைப் பார்த்து "பிரச்சினைகள் காரணமாக அகதிகளாக வந்தவர்களை நான் வெறுப்பதில்லை!..... ஆனால், டென்மார்க்குக்கு வேலை செய்யவென வந்து இங்கு நிரந்தரமாகத் தங்கிவிட்ட துருக்கியரை எனக்குப் பிடிப்பதேயில்லை!" எனச் சொல்லிவிட்டு எமது மாடிமனைத் தொகுதி இருந்த பக்கமாகத் தன் பார்வையைச் செலுத்தினார் யென்சன்.



**"இங்குள்ள கடினமான, அழுக்கான வேலைகளைச் செய்வதற்காக ஆரம்பத்தில் உங்களுடைய அரசுதானே வருந்தி அழைத்தது?.... இப்போ இங்கு அந்த வேலகளுக்குக்கூடத் திண்டாட்டம் ஏற்படவே, அவர்களில் பாய்கின்றீர்களே!...." எனது மனம் கேட்டது.**

ஆர்வமிக்க அவசரத்துடன் போக வேண்டிய தேவையற்ற வீடு!... கதைப்பதற்கு ஒரு கம்பனி தேவை!.... மனம் சட்டெனத் தனது கணிப்பை முடித்துக்கொண்டது.

கையில் ஒரு கரும்பச்சை பியர்

..... இங்குள்ள கடினமான, அழுக்கான வேலைகளைச் செய்வதற்காக ஆரம்பத்தில் உங்களுடைய அரசுதானே வருந்தி அழைத்தது?... இப்போ இங்கு அந்த வேலைகளுக்குக்கூடத் திண்டாட்டம் ஏற்படவே, அவர்களில் பாய்கின்றீர்களே!.... எனது

**அ. பாலமனோகரன்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மனம் கேட்டது. ஆனால் நானோ அப்படி வாய்விட்டுக் கேட்கவில்லை. ஒன்றுமே சொல்லாமல் ஒரு நடுநிலையான முகபாவத்தைக் காட்டிக்கொண்டிருந்தேன். அடிக்கடி இப்படிச் செய்யவேண்டிய நிலைமைகள் கடந்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்டிருந்ததால் அது எனக்குக் கைவந்த கலையாகிவிட்டிருந்தது. இதனையும் ஒரு படி மீறி, அவர் விரும்பக்கூடிய ஒரு பதில் சொல்லக்கூடிய திறமையும் எனக்கு கைவந்திருந்த போதும், இந்த யென்சனுக்கு இதுவே போதும் என என் மனது கணித்துக் குறித்ததால், எதனிலிருந்தும் இலகுவாக நழுவிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை எப்போதுமே அளிக்கக்கூடிய நடுநிலைமை முகமூடியை நான் இப்போது காட்டிக்கொண்டிருந்தேன்.



**கரிக்குருவிகள்!..... நீங்கள் அந்நிய நாட்டவர்கள் யாவருமே எமக்குக் கறுப்பர்கள்தான்!... நாங்கள் வெள்ளையர்கள்!..... நீங்கள் யாவருமே எமக்குக் கரிக்குரிவிகள்தான்!....**

அவரோ, எனது பதிலை எதிர்பார்க்காதவர் போன்று, மாடிமனைத் தொகுதியை அடுத்துக் காணப்பட்ட புல்வெளியை எனக்குச் சுட்டிக் காட்டினார். அங்கே சிறுவர்களுக்கான விளையாட்டிடம் ஒன்றும், அதனருகே பலர் அமரக்கூடியதாக நான்கைந்து பலகையிலான நீண்ட ஆசனங்களும் தென்பட்டன. அந்த இருக்கைகளில் துருக்கிப் பெண்கள் ஏழெட்டுப் பேர் கூட்டமாக அமர்ந்து சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். விளையாட்டிடத்தில், மாலை வெய்யிலில் கருகருவென்ற தலைமயிர் பளபளக்க அவர்களுடைய குழந்தைகள் பலர் குதூகலமாக விளையாடிக்கொண்டிருந்தனர்.

www.tamilarangam.net

நான் அந்தக் காட்சியை கிரக்கிக்கும் வரை காந்திருந்த யென்சன், அந்த மைதானத்தின் ஒருபுறத்தைக் காட்டி, "அதோ!... அங்கே என்னத்தைக் காண்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அவர் சுட்டிக்காட்டிய இடத்திலே, 'ஸ்கேத' என டெனிஷ் மொழியில் பெயர்கொண்ட பறவைகள் ஏழெட்டு, கூட்டமாகக் காணப்பட்டன. இவை எமது ஊரிலே உள்ள ஆண் கரிக்குருவிகள் போன்று கறுப்பும் வெள்ளையும் கொண்ட இறகுகளை உடைய பறவைகள். ஆனால், இவை உருவத்திலும், அளவிலும் எமது செண்பகங்களைப் போன்றிருக்கும். அவற்றையும் நான் நன்றாகக் கண்டுகொண்டேன் என உறுதி செய்துகொண்ட யென்சன் இரண்டு வாய் பியரை அருந்தி, பின் ஒரு வாய் புகையையும் இழுத்து உள்வாங்கிக் கொண்டே "இந்த இரண்டு காட்சிகளுக்குள்ளும் உள்ள பொதுவான அம்சம் என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்!" எனப் புதிர் போட்டார்.

இந்த ஆள் வெகு காலமாக ஆசிரியத் தொழிலில் இருந்திருக்கவேண்டும்!... மனம் உடனே ஒலிபரப்பியது. நான் அவதானித்தவற்றை ஒப்பிட்டுப் பதில் சொல்ல முயன்றேன். மனம் மறுபடியும் ஒரு முக்கியமான விஷயத்தை மின்னலடித்தது. .... கரிக்குருவிகள்!..... நீங்கள் அந்நிய நாட்டவர்கள் யாவருமே எமக்குக் கறுப்பர்கள்தான்!... நாங்கள் வெள்ளையர்கள்!..... நீங்கள் யாவருமே எமக்குக் கரிக்குரிவிகள்தான்!.... நான் மீண்டும் மனதை அடக்கிவிட்டு, "கறுப்பு, வெள்ளை நிறங்கள்தான்!" என இரத்தினச் சுருக்கமாக ஒரு பதிலைக் கூறினேன். ஏனெனில் அங்கே காணப்பட்ட துருக்கிப் பெண்கள் [illegible]

தமிழ்த் தேசியம் ஆவணச் சுவடிகள்

தெரியவிட்டு வெண்ணிறத் துணியினால் தலையை மூடிக் கட்டிக் கொண்டிருந்தார்கள். உடல் முழுவதையும் மறைக்கும் வகையில் கருநிற ஆடைகளை அணிந்திருந்தார்கள். அந்த ஸ்கேத பறவைகளும் அவ்வாறே கறுப்பு, வெள்ளை நிறங்களை மட்டுமே கொண்டிருந்தன.

யென்சன் அலட்சியமாகச் சிரித்தார். "ஆம்! ஒருவகையில் உம்முடைய பதில் சரியானதே!.... ஆனால், இவையிரண்டுக்கும் மிகவும் முக்கியமான பொது அம்சம் என்ன தெரியுமா?" எனக் கேட்டு அக்கேள்வி என்னில் நன்கு சுவறும்வரை சில கணங்கள் காத்திருந்து மறுபடியும் வாய் மலர்ந்தார்.

"இந்த இரண்டு வகைக்குமே 'ஸ்கேத' என்ற பெயர்தான் மிகவும் பொதுவான பொருத்தம்!..." என்றார். உலகம் உருண்டை வடிவானது என்ற விஞ்ஞான உண்மையை ஒத்த ஒரு விஷயத்தை கூறுகின்ற தன்மை அவருடைய கூற்றில் தெரிந்தது.

எனது மனமோ கணணிக் கதியில் ஸ்கேத பறவை சம்பந்தமாக தன்னிடத்தே உள்ள தகவல் வங்கியை ஒவ்வொன்றாக எனது பரிசீலனைக்கு மின்னிக்காட்டியது.... இப்பறவைகளில், எமது ஊர்க் கரிக்குருவிகளில் காண்பது போன்ற ஆண், பெண் வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள முடியாது!.. ஆணும் பெண்ணுமாக அன்னியோன்னிய குடும்ப வாழ்க்கை நடாத்தும் இவை வசந்த காலம் வருவதை உணர்ந்து பெப்ரவரி இறுதியில் கூடுகளை அமைக்க ஆரம்பிக்கும்!.... காக்கைச் சிறகில் மட்டுமல்ல இவற்றின் கருஞ்சிறகுகளிற் கூட பாரதி கண்ட கண்ணனின் நிறம் உண்டு என்பதை வெய்யிலில் ஒளிர்கையில் காணலாம்!.... இவற்றில் நாலைந்து சேர்ந்துகொண்டு ஒருசமயம் ஒரு சிறிய வல்லூறையே மடக்கி வைத்திருந்தன!... எமது மாடிமனைத் தொகுதியில் இவற்றை ஏராளமாகக் காணலாம்!.... ஸ்கேத என்ற சொல்லுக்கு டெனிஷ் மொழியில் இன்னுமோர் அர்த்தமும் உண்டு!... சேதம், காயம் என்பவற்றையும் இச் சொல் குறிக்கும்!....

இப்போது யென்சனின் புதிரில் உள்ள சூக்குமத்தை நன்கு புரிந்து கொண்டேன்.

ஆனால், அவரோ என்னையிட்டு அக்கறைகொள்ளாமல் தொடர்ந்து பேசினார்.

“முன்பு, இந்த இடத்தில் ஸ்கேத பறவைகளே கிடையாது!... சிட்டுக் குருவிகளும், மைனாக்களும், புளினிகளும் இன்னும் பலவகைச் சின்னஞ் சிறு பறவைகளும் நிறைந்திருந்த இந்த இடத்தில் அவையெல்லாம் இப்போ மிக வெகுவாகக் குறைந்துவிட்டன. காரணம், இந்த கொடிய ஸ்கேத பறவைகள், அவற்றின் குஞ்சுகளை கூட்டிலிருக்கையிலேயே கொன்று தின்று விடுவதால்தான்!.... அதுபோலவே எமது பாறூம் நகருக்கு முதலில் ஒன்றிரண்டு குடும்பமாக வந்த துருக்கியர் இன்று பல்கிப் பெருகிவிட்டனர்!.... அவர்களுடைய மதம், குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்பதில்லை.... எனவே அவர்களுடைய தொகை இங்கு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது!.... இந்த ரீதியில் போனால், வெகுவிரைவில் இந்தப் பகுதியே ஒரு சிறிய துருக்கிஸ்தான் ஆகிவிடும்!.... டெனிஷ் மக்கள் தொகை குறைந்துவிடும்!....” யென்சனுடைய முகம் விகாரமாகி, குரல் வெறுப்பை உமிழ்ந்தது.

...இதே பாறூம் நகரில், பாறூம் மக்களினாலேயே உப நகர பிதாவகத் தெரிவுசெய்யப்பட்ட துருக்கியர் ஒருவர், தனக்கும் தனது குடும்பத்தினர்க்கும் அடிக்கடி விடுக்கப்படும் பயமுறுத்தல், எச்சரிக்கை என்பவற்றின் காரணமாக தனது அங்கத்தவர் பதவியையும் கைகழுவிவிட்டு, மரக்கறி, பழவகை மொத்தவியாபாரியாக தொழில் பார்ப்பதையும் நான் அறிந்திருந்தேன்.

யென்சன் என்னை விடவில்லை. மீண்டும் பியரைக் குடித்துவிட்டு என்னை ஆக்கிரமித்தார், “உமக்குத் தெரியுமா!..... அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளிவிபரக் கணக்கின்படி, டென்மார்க்கில் உள்ள வந்தேறு குடிகள், அகதிகள் என்போரின் இளைய தலைமுறையினர், அவர்கள் வயதொத்த டெனிஷ் இளைஞர்களைவிட இரட்டிப்பான வீதத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்று உமக்குத் தெரியுமா?....”

சிகெரட் புகையின் மஞ்சள் கறள் அப்பிக் கிடந்த தனது ஆட்காட்டி விரலினால் எனது நெஞ்சில் இடித்து, இடித்து தனது கருத்தை வலியுறுத்தினார்.

www.tamilarangam.net

.... உமக்குத் தெரியுமா?... அண்மையில் இங்கு ‘பல்க்’ என்ற அமைப்பு வெளியிட்ட விளம்பரப் பிரசுரம் ஒன்றில் நீர் சொல்வது போன்றே நடத்தப்பட்ட ஒரு புள்ளிவிபர ஆய்வின்படி, இங்கு டென்மார்க்கிலே, எட்டு நிமிடங்களுக்கு ஒரு தடவை, வீடொன்றினுள் வேண்டாத விருந்தாளிகள் உடைத்துக்கொண்டு உட்பிரவேசிக்கிறார்கள் என்ற உண்மை உமக்குத் தெரியுமா?... இந்த வேண்டாத விருந்தாளிகள் அத்தனை பேருமே டெனிஷ் மக்கள் அல்லாத பிறநாட்டவரா?... எனது மனம் மறுத்தான் கேள்வி கேட்கத் துடித்தது. எனக்கும் ஒரு வலது கையும், அதில் ஒரு ஆட்காட்டி விரலும் இருக்கத்தான் செய்தன.

நான் ஒன்றும் பேசாமல் மௌனமாக யென்சனைப் பார்த்தேன். எனது இதயத்திலிருந்து பிறந்த அந்தப் பார்வை அவரை ஏதோ ஒரு வகையில் பாதித்திருக்க வேண்டும். தான் அன்று படித்த கதையை எழுதியவன் நான் என்ற எண்ணம் அவருடைய மனதில் மீண்டும் தலை தூக்கியதோ என்னவோ?

சிறிது நேரம் அமைதியாக இருந்து தன்னை நிதானப்படுத்திக்கொண்ட யென்சன் என்னைப் பார்த்து, “ஏன் எதற்குமே பதில் சொல்லாமல் இருக்கின்றீர்?.... நான் சொல்வதை நீர் ஒப்புக்கொள்கின்றீரா இல்லையா?.. நீர் ஒரு எழுத்தாளன் அல்லவா?... நீர் உம்முடைய கருத்தை எனக்குக் கூறியே ஆகவேண்டும்!” என வலியுறுத்தியபோது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

தானே விரும்பித் தேர்ந்தெடுத்துக் கொண்டு தானே ஆடும் ஒரு விளையாட்டின் விதிகளை, வீதியால் என்பாட்டில் சென்றுகொண்டிருந்த நான் அனுசரிக்கவில்லையே எனக் குற்றஞ்சாட்டும் யென்சனையும்,

**‘இந்த வேண்டாத விருந்தாளிகள் அத்தனை பேருமே டெனிஷ் மக்கள் அல்லாத பிறநாட்டவரா?...’ எனது மனம் மறுத்தான் கேள்வி கேட்கத் துடித்தது. எனக்கும் ஒரு வலது கையும், அதில் ஒரு ஆட்காட்டி விரலும் இருக்கத்தான் செய்தன.**



எனது நிலையையும் எண்ணிச் சிரித்தேன்.

பின்னர் சொன்னேன், “அகதியாக வந்த என்னையும், என் குடும்பத்தையும் ஏற்று, ஆதரவளித்து நடத்தும் ஒரு நல்ல நாட்டின் நற்பிரசைகளில் நீரும் ஒருவர்!... நீர் கூறிய விஷயங்கள் முழுவதும் தவறானவை அல்லவே!.... ‘தோளில் அமர்ந்துகொண்டு காதைக் கடிக்கக்கூடாது’ என்று நமது ஊரில் ஒரு முதுமொழி உண்டு!.... எனவேதான் நான் பேசாமல் இருந்தேன்!” என்றேன்.

யென்சனுக்கு எனது பதில் திருப்தி அளிக்கவில்லை. பதில் சொல்லாமல் இருந்ததற்கு “நீர் சொல்வது காரணமாக இருக்கலாம்!.... ஆனால், நான் கேட்டதற்கு எதற்காகச் சிரித்தீர்?... இவன் யென்சன் பைத்தியக்காரன்.... போதையில் உளறுகிறான் என்றா சிரித்தீர்?” என வினாவினார். இப்போது அவருடைய கேள்வியில் நிதானம் இருந்தது. இவன் ஏன் சிரித்தான் என்று அறியும் ஆவல் இருந்தது.

நான் அவருடைய நீல விழிகளுக்குள் என் இதயத்தின் பார்வையைச்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலுத்தி அங்கிருந்து ஒலித்த எனது பதிலைச் சொல்ல ஆரம்பித்தேன்.

"அன்புக்குரிய நண்பரே!.... நீர் ஒரு ஆசிரியர்.... எனது சிரிப்பின் உண்மையான காரணத்தைக் கூறினால் நீர் புரிந்துகொள்வீர், என நான் மன மார நம்புவதானால் சொல்கிறேன்!.. கேளும்!.... என்னுடைய சிரிப்புக்குக் காரணம் வேறொன்றுமில்லை.. நன்றியுணர்வுதான் காரணம்!"

"நீர் ஆசிரியர் அறையில் என்னை அலட்சியப்படுத்தியதை நான் சரியாகவே புரிந்துகொண்டேன்! எனக்கு அப்போது கோபம் வரவில்லை என்றால் அது முற்றிலும் உண்மையில்லைத்தான்! ஆனால் உமது அவமதிப்புக்கு நான் நன்றி சொல்லக் காரணம் உண்டு! அதுவும் ஒன்று, இரண்டு காரணங்கள் அல்ல!.... தற்சமயம் என்னால் இதற்கு ஐந்து காரணங்களைக் கூறமுடியும்!... இதோ சொல்கிறேன்! கவனமாகக் கேட்டுக்கொள்ளும்!"

"முதலாவது, நீர் உமது நடத்தையினால், நான் தமிழன் என்ற இனத் தனித்துவத்தை உணரவைத்தது. என் தனித்தன்மையை வளர்க்கின்றீர்.... இதற்கு எனது முதல் நன்றி! இரண்டாவது, எனக்கென ஒரு சொந்த, சுதந்திர நாடு வேண்டும் என்ற உண்மையை உறைக்கும் வகையில், வெறுப்புணர்வு நிறைந்த பேச்சுக்களினாலும், செய்கைகளினாலும் வலியுறுத்துகின்றீர்!... இதற்கு எனது இரண்டாவது நன்றி.... மூன்றாவதாக, என்னைப்போல் இனவெறுப்புக்கும், இன ஒதுக்கலுக்கும் உள்ளாகும் என் தமிழ் மக்களையும், மற்றைய இன மக்களையும் நான் நேசித்தல் அவசியம் என்பதை நீர் எனக்குத் தெளிவாகத் தெரியவைக்கின்றீர்!.... அதற்கும் எனது நன்றி!... நான்காவதாக, நானும் எனது குடும்பமும் மட்டும் தனித்து நின்று இந்த நாட்டில் தாக்குப் பிடிக்க முடியாது! எம்முடைய மக்களுடன் சேர்ந்து - நாம் என்ற உணர்வுடன் நாங்கள் இயங்கவேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் நீர் ஆணித்தரமாகத் தெரிவிக்கின்றீர்!... அதற்கும் ஆயிரம் நன்றிகள்!.... ஐந்தாவதாக, டென்மார்க்கில், எம்போன்றவரை ஏற்று, ஆதரித்து, அரவணைத்து, வழிகாட்டி நடத்துகின்ற பண்பும், அன்பும் மிக்க பல டெனிஷ் மக்களும், அவர்களால் நடத்தப்படும் அமைப்புகளும், உம் போன்றவர்களை விட மிக மிக அதிகம் என்ற உண்மையையும் எனக்கு உணர வைக்கின்றீர்!"

"எனவே இவ்வளவு நன்மைகளையும் நீர் வஞ்சகம் இன்றி அள்ளி வழங்கும் போது, நான் எப்படித்தான் சிரித்து மகிழாமல் இருக்கமுடியும்?" எனச் சொல்லி நிறுத்தினேன்.

யென்சன் இரண்டொரு நிமிடம் எதுவுமே பேசவில்லை. பின்பு கையிலிருந்த மற்ற பியர் போத்தலை எடுத்துத் திறந்து பெரியதொரு மிடறு குடித்துவிட்டு என்னைப் பார்த்துச் சிரித்தார்.

நான் எனது இல்லத்தை நோக்கி நடந்தேன். ஆங்காங்கே தென்பட்ட டென்மார்க் கரிக்குருவிகள் இப்போது எனக்கு ஒரு புதிய அர்த்தத்தின் குறியீடுகளாகத் தோன்றின. செய்யவேண்டிய வேலைகள் எத்தனையோ உண்டு என்று எண்ணிக்கொண்டே நடந்தேன்.


★★

விரல் மடித்துக் கணக்கெடுக்க முன்னரே
காலம் காற்றாய்ப் பறந்து விடுகிறது.
வலிகாமத்தை வழித்துத் துடைத்த பின்
தொண்ணூறு நாட்கள் தொலைந்து விட்டன.
நிகழ்வு மட்டும் நேற்றுப் போலிருக்கிறது.
30.10.95 ஒக்ரோபர் திங்கட்கிழமை
இந்த நாளிலும்,
இதன்பிறகு வந்த நாட்களிலும்
ஈழத்தமிழன் சுமந்த பாரச் சிலுவைக்கு
எதிர்காலம் என்ன பேரிட்டு அழைக்குமோ?
கூரையற்ற குட்டிச் சுவராய்,
மழை நனைந்தும்,
வெயிலுலர்ந்தும்,
பசிசுமந்தும்
தமிழர்பட்ட துயருக்கு எது உவமையாகும்?
வதையின் கதைகளிலே... இதுவே பெருங்கதை.
வலிகாமம் வெளியேறத் தயாரான போது
ஓரிரவும்,
ஒற்றைப்பாதையுமே இருந்தது.

அடிதலை தெரியாத அனுமான் வாலாக
நீண்ட நெடுந்தொலைவுக்கு மனிதவரிசை.
இருகாலுக்குமிடையே வெளியேற்ற நகர்வு.
முன்னால் விழுந்து வெடித்தன எறிகணைகள்.
பின்னால் துரத்தி வந்தன பிசாசுகள்.
பீடுறவாழ்ந்த பெருங்குலம்
கூடுகலைந்து ஓடியது.
உன்னோடு ஒன்றான வாழ்வினி இல்லையென
தென்னிலங்கைக்குச் சொல்லிவைத்தது போல
வலிகாமம் முழுமையாக வெளியேறியது.
செம்மணி திணறியது.
நரபாரத்தால் நாவற்குழி நசிந்தது
உள்ளே நுழைந்து பார்த்ததும்
சிங்களம் திகைத்துப் போனது.
சூனியத்திற் கொடியேற்றி போன
ரத்வத்தவுக்கு ராஜமரியாதை.
சந்திரிகாவுக்கு இந்திரப் பதவிக்குரிய பவிசு.
இனியென்ன?
வலிகாமத்தைப் புலிகள் பிடிப்பது எப்போது?
பலகாலமாகுமா?
இதுவே எங்கும் எதிரொலிக்கிறது.
பதிலென்ன?
வேரோடிய வாழ்வுக்குரிய ஒரு பரம்பரை
தூக்கி வெளியே வீசப்படும் போது
அந்தரித்துப்போகும் அவலத்தில்
ஆயிரம் கேள்விகள் அஸ்திரங்களாகும்.
கோபத்திற்காயும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சும்மா இருக்கச் சுதந்திரமென்றால்... எனக்கும் அதிலே இரண்டு கிலோ!

அது குற்றமல்ல....
இந்திரவாழ்விழந்த அந்தர நிலையில்
அகப்பட்டதைத் தூக்கிமிதிக்கும் ஆனைபோல்
நெருப்பு மூட்டிய வார்த்தைகளை நெஞ்சிலெறியும்.
ஆத்திரப்படல் ஆகாது.
தாங்கிக் கொள்வதே தாய்மனம்.
"வலிகாமத்தைக் காப்பாற்ற வக்கற்றதுகள்
வன்னிக்கு வரட்டாம்"
ஊரிழந்த கோபத்தின் உச்சம் இது.
சொல்லியிருக்கக் கூடாத சுடுவார்த்தை தான்.
விடுதலையின் பெயரால்
இந்தச் சொற்கள் மட்டும் செவிவிழாதெனக்
காதடைத்துப் போகக் கடவது.
புலிகள் மீது ஏனிந்தக் கோபம்?
எதிரிகள் போல ஏனிந்தப் பார்வை?
ஊரிழந்து போனது எங்களுக்குமட்டுமா வருத்தம்?
வலிகாமம் போன வருத்தத்தில்
தூங்காத வேங்கைகளே அதிகமென அறிக.
அன்று
கண்ணீர் வழிய நடந்தவர் கையில்
காணியுறுதியாவது இருந்தது.
பலர் இயலக்கூடியதை எடுத்து வந்தோம்.
ஆனால்...
துயிலுமில்லத்தைத் தூக்கிவரமுடியவில்லையே என்று
துயரத்தில் துடித்தனர் போராளிகள்.
"தமிழரின் படைபலமே தாயகம் காக்கு" மென
எத்தனை தடவைகள் இடித்துரைத்தும்
எவர்தான் கருத்திலெடுத்தோம்.
போராட்டம் பூப்பறிக்கும் வேலையென்றே
காலாட்டிக் கொண்டிருந்தோம்.
எல்லோரும் சேர்ந்து எடுக்கும் பெரும் சுமையை
ஓரிரண்டு தோள்களில் எப்படிச் சுமத்தலாம்?
என் குடும்பத்தில் எவரும் குறையாது
கொண்டுவா விடுதலையென்பது குற்றமல்லவா?
அடுத்த தலைமுறைக்கான ஆனந்தவாழ்வு சமைத்தல்
இந்தத் தலைமுறைக்குக் கிடைத்த பேறென
எத்தனைபேர் உணர்ந்தோம்?
இத்தனைக்குப் பின்னும்;

## உலைக்களம்

— வியாசன் —

இளையதலைமுறை என்ன செய்து கொண்டிருக்கிறது?
சுரணையற்றுத்தானே தூங்கிக் கிடக்கிறது.
காலையில் அண்ணா பற்பொடியையும்,
மாலையில் அடுத்த வீட்டு வேலியையும்
தின்று கொண்டிருந்தால்..
வந்த பகையைத் துரத்துவது எப்படி?
வலிகாமத்துக்குப் போவது எப்படி?
ஊர்போவது எப்போது என்று
ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கட்டும்.
கேள்விக்குப் பதிலை வெளியில் கேட்பதை விடுத்து
முதலில் வீட்டிலேயே கேட்போம்.
தோளுக்குயர்ந்த சொந்தங்களைக் கேட்போம்;
படுக்கையிற் கிடக்கும் பிள்ளையைத்தட்டி
பதிலை அவர்களிடம் கேட்போம்.
அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்து
அலைகின்ற இளைய தலைமுறையிடம் கேட்போம்.
நரம்பில்லாத நாவினால்
இதற்குள் எத்தனை எடுத்தெறிவுகள்.
காட்டிக் கொடுக்கிறது "கூட்டணி"
எவரும் கண்டிக்கவில்லை
நீலன் திருச்செல்வம் மோசம் செய்கின்றான்;
எல்லோரும் பேசாமற்தானே கிடக்கின்றோம்?
புலிகள் போராடுகின்றனர்.
காய்த்த மரத்துக்குத்தானா கல்லெறி?
தாயகத்தை நெஞ்சிற் சுமந்து
கல்லறைக்குப் போகும் செல்வங்களுக்கா
இந்த வசை?
சும்மா இருக்கச் சுதந்திரமென்றால்
எனக்கும் அதிலே இரண்டு கிலோ!
வெட்கம் கெட்டது இந்த விடுதலையுணர்வு.
நானென்ன,
பிள்ளையென்ன,
நாளைவரும் பேரனென்ன
எல்லோரும் போராடினால் இலக்கு எட்டும்.
விடுதலைப் புலிகள் என்பது தமிழன் வீரத்தின் குறியீடு.
பிரபாகரன் என்பது தமிழர்மானத்தின் அடையாளம்.
பின்னடைவைப் பெருந்தோல்வியென்றால்
கண்டதையும் தான் கதைக்க வேண்டி வரும்.
நம்பிக்கையே வாழ்வு.
இனிவரும் நாட்கள் எமக்காகவே விடியும்.
படைபலமே முழுபலம்.
நம்பி எழுவோம்.
கற்றுத் தெளிந்தோம்.
களம் நோக்கி நடைபயில்வோம்.
வெற்றுக்கதை விடுத்து விடுதலைக்கு விலைகொடுப்போம்
புலிகளே பலம்.
வருவதோ ஜெயம்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜப்பானியரை விஞ்சிய புலிகள்

**1941** ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 7-ம் திகதி, இரண்டாம் உலகப் போரில் அமெரிக்காவிற்கு அதிர்ச்சிதரும் அடி விழுந்த நாளா கும். பசிபிக் கடலைத் தாண்டி எந்த எதிரியும் தன்னைத் தாக்கமுடியாது என அமெரிக்க கடற்படை இறு மாந்திருந்த வேளை அது. பல்லாயி ரக்கணக்கான மைல் தூரம் பறந்து சென்று எதிரியின் இலக்குகளைத் தாக்கும் சூப்பர் ஜெட் விமானங் களோ அல்லது ஏவுகணைகளோ கண்டுபிடிக்கப்படாத காலம். எனவே ஜப்பான் தன்னை தாக்கு வது என்பது ஒரு போதும் நடவாத காரியம் என அமெரிக்கா கருதிக் கொண்டிருந்தது. அமெரிக்காவின் இந்த ஆணவத்தை ஐப்பானியர் அடியோடு தகர்த்த நிகழ்ச்சிதான் பேர்ள் ஹாபர் தாக்கப்பட்ட நிகழ்ச்சி யாகும்.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா நேரடியாக இறங்காமல் பிரிட்டனுக்கும் மற்ற நேசநாடுகளுக் கும் ஆயுத உதவி, மற்றும் பொரு ளாதார ரீதியான உதவிகளைச் செய்து வந்தது. தனது வலிமையைப் பெருக்கிக்கொண்டு வரும் அமெ ரிக்கா நேரடியாகப் போரில் ஈடு படப் போகும் நாள் அதிக தூரத் தில் இல்லை என்பதை ஜப்பான் தெளிவாக உணர்ந்தது. எனவே முந்திக்கொண்டு முதலடி கொடுக்க அது முடிவு செய்தது.

ஹாகித் தீவில் இருந்த அமெரிக் கக் கடற்படைத் தளமான பேர்ள் ஹார்பரைத் தாக்க முடிவு செய்தது. இதற்காக 6 விமானத் தாங்கிக் கப் பல்களும், அதில் 350 கேட்ஸ் விமா னங்களும், மற்றும் நீர்மூழ்கிக் கப் பல்கள், நாசகாரிக் கப்பல்கள் கொண்ட சிறப்புக் கடற்படை ஒன்றை ஜப்பான் தயார் செய்தது. இந்தப் படையின் விமானிகளுக்கு அதிரடித் தாக்குதல் பயிற்சி கொடுக் கப்பட்டது.

அமெரிக்கா சற்றும் எதிர்பார்க் காத நிலையில் ஜப்பானிய கடற் படை பசுபிக் கடலைத் தாண்டி பேர்ள் ஹார்பரை நெருங்கியது. 7.12.1941 பகல் 2 மணிக்கு 350 ஜப்பா னிய போர்விமானங்கள் அணி அணி யாகப் பறந்து வந்து தாக்கிய போது, அமெரிக்கக் கடற்படை வீரர்கள் அதிர்ச்சியினால் உறைந்து போனார் கள். நன்கு பாதுகாக்கப்பட்ட தங்கள் துறைமுகம் ஜப்பானிய விமானங் களால் அழிக்கப்படுவதை அவர்க ளால் நம்ப முடியவில்லை.

அமெரிக்கக் கடற்படையின் வலிமை வாய்ந்த கலிபோர்ணியா, மேரிலாண்ட், போன்ற 9 போர்க் கப்பல்கள் ஜப்பானிய குண்டு வீச் சுக்கு இரையாகி அடியோடு தகர்க் கப்பட்டு மூழ்கின. அமெரிக்கக் கடற் படையைச் சேர்ந்த 2400 வீரர்கள் கொல்லப்பட்டனர். 1178 வீரர்கள் படுகாயமடைந்தனர்.

அமெரிக்கக் கடற்படையை நிர் மூலம் செய்த ஜப்பானியரின் இந்த வெற்றிகரமான தாக்குதல், இரண் டாம் உலகப் போரின் மகத்தான நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கருதப்படு கிறது. இந்தத் தாக்குதலுக்கு தலைமை தாங்கி நடத்திய லெப். கமாண்டர் புச்சிடா தனது தலைமைத் தளபதி யான வைஸ் அட்மிரல் நகுமோ என்பவருக்கு தாக்குதல் வெற்றிபெற்ற செய்தியை பின்வருமாறு தெரிவித் தார்.


``Tora, Tora, Tora" -- Tora என்றால் ஜப்பானிய மொழியில் "புலி" எனப் பொருள்படும்.

தனது இரையின் மீது புலி பாயு மானால் அந்த இரை தப்ப முடி யாது. அதைப் போல இத்தாக்குத லும் வெற்றிகரமாக முடிந்தது என்ப தைக் குறிக்க சங்கேத மொழியாக "புலி - புலி - புலி எனக் குறிப்பிடப் பட்டது.

பேர்ள் ஹாபர் தாக்கப்பட்ட 55 ஆண்டுகளுக்குப் பிறகு அதைவிடச் சிறந்ததொரு சாதனையை விடுத லைப் புலிகள் நிகழ்த்திக் காட்டியுள் ளனர்.

1996-ம் ஆண்டு ஏப்ரல் 12-ம் திகதி யன்று கொழும்புத் துறைமுகத்தில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்கு தல் உலகை வியக்க வைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் போரானது தமிழீழ எல்லையைத் தாண்டி சிங்க ளவர்களின் தலைநகரமான கொழும் பில் தரை, கடல் பகுதிகளுக்குப் பரவிவிட்டது என்பதை இத்தாக்கு தல் மீண்டும் ஒரு முறை புலப்படுத் தியிருக்கிறது. இராணுவம், கடற் படை, விமானப்படை ஆகியவற்றி னால் பலமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் தலைநகரமான கொழும்பே புலியின் தாக்குதலில் இருந்து தப்ப முடியவில்லை என்னும் நிலை இருக்கு மானால் பிற சிங்கள ஊர்கள் நகரங்




கொழும்புத் துறைமுகம்

பழ. நெடுமாறன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் ஆகியவற்றின் கதி என்னவென்ற கேள்வி சிங்கள மக்கள் நடுவில் எழுந்துள்ளது.

சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு விடப்பட்ட பெரும் சவால் இது என நடுநிலை நோக்கர்கள் கணித்துள்ளனர். மயிர்க்கூச்செறிய வைக்கும் இத்தாக்குதலை புலிகள் எவ்வாறு வெற்றிகரமாக நடத்தினார்கள் என உலகம் மூக்கின் மேல் விரலை வைத்து அதிசயிக்கிறது.

ஏப்ரல் 11-ம் திகதி வியாழனன்று இரவு 9.30 மணிக்கு கடற்புலிகள் படையைச் சேர்ந்த, கடற்கரும்புலிகள், சுலோஜன் நீரடி நீச்சல் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த 9 புலிகள் இத்துணிகரமான தாக்குதலை மேற்கொள்ளப் புறப்பட்டனர். இவர்களில் இருவர் வீராங்கனைகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எரிபொருள் கப்பல் ஒன்று, கொள்கல மாற்றுக் கப்பல்கள் இரண்டு, கடற்படைக் கப்பல்கள் மூன்று ஆகிய 6 கப்பல்களையும் வெடி வைத்துத் தகர்த்தனர். அதன் பிறகு தாக்குதல் தளபதி லெப். கேணல் சதீஸ் தலைமையில் 3 கடற்புலிகள் அதிவேகப்படகு ஒன்றின் மூலம் துறைமுகத்திற்குள் புகுந்து தாக்குதல் நடத்தினர். மின்னல் வேகத்தில் இவர்கள் நடத்திய தாக்குதலால் துறைமுகத்தில் பல பகுதிகளில் தகர்ந்தன. கடற்படைக்கலன்கள் பல சேதமடைந்தன. துணிகரத் தீரம் நிறைந்த இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட கீழ்க்காணும் ஒன்பது புலிகள் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

லெப். கேணல் ரதீஸ்
மேஜர் ரதன்
மேஜர் பொய்யாமொழி
மேஜர் ஜனார்த்தனன்
மேஜர் ரவாஸ்
மேஜர் பரன்
கப்டன் சுபாஸ்
கப்டன் மதனி
கேப்டன் விக்கி

பேர்ள் ஹார்பரைத் தாக்குவதற்கு 350 விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், நாசகாரிக் கப்பல்கள் ஆகியவற்றை ஜப்பானிய படை பயன்படுத்தி 8 அமெரிக்க போர்க் கப்பல்களைத் அழித்தது.

ஆனால் 9 விடுதலைப்புலிகள் தங்களைத் தியாகம் செய்து கொழும்புத் துறைமுகத்தில் புகுந்து 6 சிங்களக் கப்பல்களை அழித்தனர் என்பது உலகத்தைத் திகைக்க வைத்துள்ளது. விடுதலைப்புலிகள் உலக வரலாற்றில் புதிய செய்தியினைப் பொறித்துள்ளனர்.

எந்தக் கட்டத்தில் இந்தத் தாக்குதலை புலிகள் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி திறன் 1.04 மில்லியன் டியுக் ஆக இருப்பதை 1.6 மில்லியன் டியுக் ஆக உயர்த்தும் வகையில் அமைக்கப்பட்ட கப்பல் தளத்தை பிரதமர் சிறிமாவோ திறந்து வைத்த சில நாட்களிலேயே இத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

கொழும்புத் துறைமுகம் பாதுகாப்பாக உள்ளது. யாரும் எதுவும் செய்துவிட முடியாது என இலங்கை கப்பல் போக்குவரத்து அமைச்சர் அஸ்ரப் மார்தட்டிக் கூறி சில நாட்களிலேயே இத்தாக்குதலை புலிகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர்.

இலங்கைக் கடற்படைக்கு ஏற்பட்ட சேதத்தை விட பலமடங்கு அதிகமான பொருளாதார சேதம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் ஒரே சர்வதேச துறைமுகமான கொழும்புவிற்கு ஏராளமான வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து போகின்றன. மேற்கே இருந்து கிழக்கேயும், கிழக்கே இருந்து மேற்கேயும் செல்லும் அனைத்துக் கப்பல்களும் இங்கு வந்து செல்கின்றன. இதன் மூலம் ஏராளமான அன்னிய செலவாணி இலங்கை அரசுக்கு கிடைக்கிறது. இனி வெளிநாட்டுக் கப்பல்கள் கொழும்பு வரத் தயங்கும். அந்நியச் செலவாணி கிடைக்காது. இதன் விளைவாக ஆயுதங்கள் வாங்கிக் குவிப்பது தடைப்படும்.

எண்ணெய் கிடங்குகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றை புலிகள் தகர்த்ததன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் சீர்குலைவு ஏற்பட்டு விட்டது. இப்போது துறைமுகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல், ஏற்றுமதி - இறக்குமதியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். கொழும்பில் புலிகள்




நடத்திய வெற்றிகரமான தாக்குதல்கள் சிறிலங்காவில் பொருளாதார பலத்தைத் தகர்க்கும் நோக்கம் கொண்டவை. அந்த நோக்கத்தில் புலிகள் வெற்றிபெற்று விட்டார்கள் என்று தான் கூற வேண்டும்.

## ‘பேர்ள்’ ஹாபர் தாக்கப்பட்ட 55 ஆண்டுகளுக்குப் பிறகு அதைவிடச் சிறந்ததொரு சாதனையை விடுதலைப் புலிகள் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்.

ஜப்பான் போன்ற வல்லரசு தனது கடற்படை, விமானப்படை ஆகியவற்றைப் பயன்படுத்தி அமெரிக்காவில் பேர்ள் ஹார்பரைத் தகர்த்து போர்க்கப்பல்களை அழித்தனர்.

ஆனால் புலிகளோ தற்தியாகம் என்ற வலிமை வாய்ந்த ஆயுதத்தை மட்டுமே பயன்படுத்தி கொழும்புத் துறைமுகத்தில் அழிவையும், சிங்களக் கடற்படைக்கு மரண அடியையும் கொடுத்துள்ளனர்.

இதில் ஜப்பானியரையும் விடுதலைப்புலிகள் மிஞ்சிவிட்டனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவிஸ்: வரலாறு படைக்கும் பேரணி




முன்னைய சிங்களத் தலைவர்களை விட சந்திரிகா ஆபத்தானவர். தந்தை, தாய், மகள் எனத் தொடரும் ஒரு ஆட்சிப் பரம்பரை வெளியுலகில் தேடிவைத்துள்ள செல்வாக்கை தமிழ் மக்களை நலிய வைப்பதற்கு முழுமையாக பயன்படுத்த முனைந்து வருவதோடு, தமிழ் மக்கள் மீது மிகக் கொடுமையான காட்டுமிராண்டித்தனமான ஆக்கிரமிப்பு யுத்தத்தை கட்டவிழ்த்து நிற்கிறது. இதற்குத் துணையாக பல பிற்போக்குச் சக்திகள் துணைநிற்கின்றன.

இன்று சில வெற்றிகளை சந்திரிகா அடைந்திருக்கிறதாக கொண்டாடலாம். எமது இயக்க கனடாப் பிரதிநிதி திரு. சுரேஸ், சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் மற்றும் ஏனைய செயற்பாட்டுத் தோழர்கள் சிலரை சிறையிலிட்டது போன்ற நிகழ்வுகளின் பின் சிறீலங்காவின், சந்திரிகா அரசு நிற்கிறது. இதனால், அந்நாடுகளில் தமிழ் மக்களின் விடுதலைச் செயற்பாடு அச்சத்தின் காரணமாக முடக்கப்பட்டுவிடும் என்று அவர் எண்ணுவாரே ஆயின் அது அவரது அறிவின்மையையே காட்டும்.

தமிழ் மக்களின் வெளிநாட்டு ஆதரவுச் செயற்பாடுகளை துண்டித்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தல், சீர்குலைத்தல் என்ற அடிப்படையில் இயங்கும் அவரது திட்டச் செயற்பாட்டின் அடிப்படையில் இது நிகழ்ந்தது.

இக் கைது அநீதியானது; அதர்ம மானது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தேசிய இயக்கம். அதன் பிரதிநிதிகளாக இயங்கும் உறுப்பினர்களும் அவ்வினத்தின் விடுதலைக்காக, சுதந்திரத்துக்காக அயராது உழைப்பவர்கள். இச் செயற்பாடுகளை பயங்கரவாதச் செயற்பாடுகளாக சித்தரிக்க முனைந்து நிற்கும் சுவிஸ் அரசுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்தும் முகமாக மக்கள் பல கோஷங்களை முன் வைத்து 27.04.96 சனிக்கிழமை மாலை இரண்டு மணியளவில் மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தினார்கள்.

“தமிழீழ விடுதலைப் புலிகளை தேசிய இயக்கமாக அங்கீகரிக்க வேண்டும்.”

“கடும் யுத்த சூழ்நிலையில் அகதிகளைத் சிறிலங்காவிற்கு திருப்பி அனுப்புவதை நிறுத்த வேண்டும்.”

“விடுதலைப் புலிகளின் அமைப்பு ஒரு மக்கள் அமைப்பு. அதை ஒரு குற்றவியல் அமைப்பாக சித்தரித்துக் காட்டுவதை நிறுத்த வேண்டும்.”

“கைதுசெய்யப்பட்டவர்களை உடனே விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.”

“சுவிஸ் அரசாங்கம் இலங்கையில் சமாதானத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும்” என்ற கோரிக்கைகளை முன் வைத்து பேரணி நடைபெற்றது. சுவிஸ் - இலங்கை அரசுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு அரசியல் தஞ்சம் கோரிய மக்களை இலங்கைக்கு திருப்பியனுப்ப சுவிஸ் அரசாங்கம் முற்படுவதைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட எமது பிரதிநிதிகளை உடனே விடுதலை செய்யக் கோரியும் நடைபெற்ற இம் மாபெரும் பேரணியில் 13000-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தார்கள். இந்த மக்கள் படையெடுப்பின் மூலம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு பலத்த அடி விழுந்தது.

பேரணியின் இரு மருங்கிலும் விடுதலைப்புலிகள் சுவிஸ் கிளை உறுப்பினர்கள் கறுப்பு வெள்ளை சீருடையுடன் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பியை அணிந்து சென்று கொண்டிருந்தார்கள். பாராளுமன்ற முன்றலில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரான திரு. லோறன்ஸ் திலகர் அவர்கள் ஏற்றிவைத்துப் பேசுகையில்,

“முரளிதரனையும் ஏனைய செயற்பாட்டு உறுப்பினர்களையும், தடுத்து வைப்பதன் மூலம் எமது இயக்க செயற்பாடுகளையும், கட்டுமானங்களையும் குலைத்துவிட்டதாக சம்பந்தப்பட்டவர்கள் நம்பலாம். முரளியை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




அடைத்து வைக்கலாம்; ஆனால் அவரது சக்தியை அடைத்து வைக்க முடியாது. இதற்கு இங்கு குழுமியிருக்கும் நீங்கள்தான் எடுத்துக்காட்டு. அங்கு சிங்கள இராணுவம் பெரிய படையெடுப்பினை நடத்துகின்ற வேளையில் வெளிநாடுகளில் கனடா, சுவிஸ் போன்ற நாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்கின்றார்கள். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்ட வீரர்களாக, தலைவர்களாக எழுச்சி கொள்வார்கள். சத்தியத்திற்காக தொடர்ந்து போராடுவார்கள்" என்ற கூறினார்.

குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தமையானது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். இப் பேரணியில் கலந்துகொண்ட முன்னாள் சிறீலங்கா ரூபவாஹினி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. வசந்தராஜா, சுவீடன் 'உப்சலா' பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. பீற்றர்சாக், அருட்தந்தை பொட்சி போன்றோர் தமது உரையில், விடுதலைப் புலிகள் அமைப்பு ஒரு மக்கள் அமைப்பு என்பதற்கு இங்கு கூடியிருக்கும் மக்கள் கூட்டமே சாட்சியாக இருக்கிறது. இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

தேசிய பாதுகாப்பு நிதி வழங்கும் நிகழ்வின் போது மக்கள் தாமாகவே முன் வந்து நகைகளையும், பணத்தையும் வழங்கினர்.

அகதிகளுக்கு உதவி வழங்கும் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி பிறிஜிற் தனதுரையில்,

மிகக் குறுகிய காலத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இவ் ஊர்வலத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டிருப்பது தமிழர்களின் ஒற்றுமையையே எடுத்துக்காட்டுகின்றது. சுவிஸ் அரசு தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள தவறான நிலைப்பாடு, நீங்கள் இங்கு அணி திரண்டதன் மூலம் உண்மைக்கு புறம்பானது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் ஓர் மக்கள் அமைப்பு. எனவே அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் எதுவித உண்மையும் இல்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் முயற்சிக்கு சுவிஸ் அரசு துணை போகாது, இலங்கையில் நிரந்தரமான, உண்மையான சமாதானம் ஏற்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையே சுவிஸ் மக்களாகிய நாங்கள் விரும்புகின்றோம். பொய்யான குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திரு. முரளிதரனும் எனையோரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை உறுதியாக நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். அதுவரையும் எந்தவொரு மனச்சோர்விற்கும் இடம் கொடாது உங்களது பங்களிப்பை உங்கள் இயக்கத்திற்கு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன் எனக் கேட்டிருந்தார்.




இப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றிய சட்டத்தரணி திரு. மார்ஸல் பொஸ்ஸோனே அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டு பேசினார்:

"உலகின் எந்தவொரு பகுதியில் வாழும் ஒரு தனிமனிதனுக்கும் தனது சமூக, கலை, கலாச்சார, அரசியலை தீர்மானிக்கும் உரிமை உண்டு. இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக நீங்கள் பல நாடுகளிலும் பரந்து வாழ்கின்றீர்கள். அந்தந்த நாடுகளில் உங்கள் தாயக உரிமைக்காக குரல் கொடுக்க உங்களுக்கு உரிமை உண்டு. அதையே நீங்கள் இங்கும் செய்கின்றீர்கள். இது கிறிமினல் குற்றமல்ல. எனவே தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் மிக விரைவில் விடுதலையடைவார்கள். அவர்களின் வழி நடத்தலில் நீங்கள் உங்கள் பங்கை ஆற்றுங்கள். உங்கள் தமிழீழம் மலரும் காலம் வெகு தொலைவில் இல்லை. அது உங்கள் கையில் தான் உள்ளது."

ஆம். எங்கள் உழைப்பில்தான் எங்களின் விடுதலை தங்கியுள்ளதை என்ற உண்மையை உணர்ந்து கொண்டு உழைப்போமாக.

— நிதர்சன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பும் சிங்கள இளைஞர்களின் ஆர்வமின்மையும்

**"தேசப் பற்றுடையோர் விரைந்து வாருங்கள்! அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!"**

சிங்கள தேசத்தின் பட்டி, தொட்டியெங்கும் இந்த வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களின் முக்கிய சந்திச் சுவர்களில் இந்த வாசகத்தைக் காணும் சிங்கள இளைஞர்கள் மத்தியில் அது இனம்புரியாத ஒரு வெறுப்புணர்வை உருவாக்குவதாக ஒரு புலம்பெயர்ந்த சிங்கள நண்பர் ஒருவர் சொன்னார்:

நிறைய தீனிகளை இட்டு வலைகளை விரித்து வைத்திருக்கிற புறாவேட்டைக்காரனைப் போல அவர்கள் சந்திரிகாவையும், சந்திரிகா அரசையும் நோக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

சந்திரிகா குமாரதுங்க ஆட்சிக்கு வந்த காலத்தின் பின்னர் முப்படைகளுக்கும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் பல தடவை மேற்கொள்ளப்பட்டு வந்த போதும் அரசாங்கம் தனது இலக்கை இன்னமும் பூர்த்தி செய்யவில்லை.

சந்திரிகா அரசு ஆட்சிக்கு வந்த போது இராணுவத்தில் பல வெற்றிடங்கள் இருந்தன.

புலிகளின் தாக்குதலினால் ஒரு தொகைப்படையினர் கொல்லப்பட்டும், ஒரு தொகைப்படையினர் காயமடைந்தும் இருந்ததோடு பல்லாயிரக்கணக்கில் படையினர் இராணுவத்தில் இருந்து தப்பியும் ஓடி இருந்தனர்.

இதனால் சந்திரிகா அரசு ஆட்சேர்ப்புக்கான, கவர்ச்சிகரமான விளம்பரங்கள் அடங்கிய அறிவித்தல்களைச் செய்து வருகிறது.

ஆயினும் அது அவர்கள் எதிர்பார்த்த வெற்றியை அவர்களுக்கு ஈட்டிக் கொடுக்கவில்லை.

இந்நிலை குறித்து அறிவதற்கு இராணுவப் பேச்சாளரான சரத் முனசிங்க அவர்கள் கூறியதை நோக்குவதே நிலைமையை நன்கு விளங்கிக் கொள்ள உதவும். அதாவது, "பங்குனி 28-ம் திகதி நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின்போது அதிகளவு இளைஞர்கள் சமூகமளிக்கவில்லை. இராணுவத்தில் சேர இளைஞர்கள் மத்தியில் ஆர்வம் காணப்படவில்லை" எனத் தெரிவித்தார். சரத்முனசிங்க இவ்வாறான பின்னடைவை ஒப்புக் கொள்ளுதல் சாதாரண விடயமல்ல. இராணுவம் தோற்று ஓடும் போது அது முன்னேறுவதாகக் கூறும் அளவுக்கு சரத்முனசிங்க பொய்கூற வல்லவர். நிலைமை அவர்கள் கையை மீறி விட்டதையே அவரது கூற்று வெளிச்சம் போட்டுக் காட்டுகிறதாக தமிழீழத்திலிருந்து வெளிவரும் ஈழநாதம் பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

விடுதலைப்புலிகளைக் காட்டுக்கு அனுப்பிவைக்கிறோம் எனத் துள்ளியடித்துக் கொண்டு படையில் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் இன்று தயக்கம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால் அது போரின் விளைவே. தமது இயலாத தாய்க்காகவும் அல்லது தங்கையின் வறுமை வாழ்வை ஒழிப்பதற்காகவும், வேறு எந்த வேலை வாய்ப்புமின்றிய நிலையில் படையில் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் பலர் போரில் இறந்து போயிருக்கிறார்கள்.

அந்த இளைஞர்கள் பற்றிய இறந்த செய்திகளைக் கேட்ட அல்லது அவர்களது யுத்தத்தில் சிதைந்த உடல்களைக் பார்த்த பல சிங்கள தாய்மார்களின் கதறல்களை கேட்டு அனுபவித்த சிங்கள இளைஞர்கள் போரில் ஈடுபட ஆர்வமற்றவர்களாகி வருகிறார்கள்.

ஆக்கிரமிப்பு இராணுவம் ஆன்மீக பூமியொன்றில் எழுகின்ற விடுதலை நெருப்பின் முன் சுட்டெரிந்து கொண்டு போகிறது. இந்த உண்மையை, அதாவது அந்த விடுதலை நெருப்பின் முன் தாமும் சுட்டெரிந்து போவோம் என்கிற அச்சம் தான் அவர்களை உலுப்புகிறது. அச்சத்தின் சுமை சிங்கள இனவாதத்தின் வலிமையை இவ்வாறு இழக்க வைக்கிறது.




இராணுவ ஆட்சேர்ப்புக்காக சிறீலங்கா அரசு செய்துவரும் கவர்ச்சிகரமான விளம்பரங்களில் ஒன்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிங்கள இராணுவக் கட்டமைப்புப் பற்றியும் அதன் தன்மை பற்றியும் அவர்களில் ஒருவரது வார்த்தையிலேயே சொல்லுவதாயின் "பல நுட்பங்களையும் தந்திரோபயங்களையும் பயன்படுத்தி சிறிலங்கா கிரிக்கட் அணியினர் வென்றிருக்கின்றனர். ஆனால் இராணுவத்தினர் இது போன்ற நுட்பங்களையும் தந்திரோபாயங்களையும் பயன்படுத்தி 13 வருட யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியாதிருப்பது ஏன்?" எனக் கேட்கிறார். இதில் போராட்டத்தையும், கிரிக்கட் விளையாட்டையும் இணைத்துப் பார்க்கிறதா என்பதை விட்டு விட்டு இந்த வார்த்தையின் ஊடாக சிங்கள இராணுவத்தின் பலவீனத்தை எவ்வாறு அவர் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இந்தளவுக்கு திறமையற்ற, விவேகமற்ற முறையில் இருக்கும் இராணுவக் கட்டமைப்பை நம்பி இறங்கப் புதியவர்கள் தயாராய் இல்லை.


இனவாதத்திற்கு எண்ணெய் ஊற்றும் பௌத்த மதவாதிகள்

ஏற்கனவே இராணுவ உயர் மட்டங்களுக்குள் இருக்கும் இழுபறி நிலையும், சந்திரிகா விருது வழங்கல் நிகழ்வொன்றில் சிலர் மீது காட்டிய தனிப்பட்ட அக்கறைகளும் இராணுவத்தினரிடையே முரண்பாடுகள் தலைதூக்கப் பண்ணியிருக்கிறது.

புதிது புதிதாக பலதடவை இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட போது, 10000 வரையிலான இளைஞர்கள் படையில் சேர்ந்திருந்தார்கள். இவர்களில் அரைவாசிப் பேர் ஓடிவிட்டார்கள். ஏற்கனவே இராணுவத்தில் இருந்து ஓடி தலைமறைவானவர்களைப் போல இவர்களும் குறுகிய நாட் பயிற்சிகளோடு ஓடிவிட்டார்கள். திட்டமிட்டு பயிற்சிகளை பெற்றுக் கொண்டு போய் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து விடுகிறார்களோ என்ற அச்சமும் அரச, இராணுவ வட்டாரங்களுக்குள் எழத் தொடங்கிவிட்டிருக்கிறது.

www.tamilarangam.net

'சூரிய கதிர்' இராணுவ நடவடிக்கைகளின் போது இழந்த யாழ் நகரத்தையும், குடாநாட்டையும் மீட்டெடுப்பதற்கான தாக்குதல்களை விடுதலைப் புலிகள் அதிகரிக்க வேண்டியிருக்கும். அவர்களுக்கு பின்னால் மக்கள் சேனையே அணிவகுத்து நிற்கும் சூழல் உருவாகி வருகிறது. வாழ்வா? சாவா? எனும் நிலையில் நிற்கும் தமிழ் மக்கள் போர் புரிவதைத் தவிர வேறு வழியில்லை.

விடுதலைப் புலிகள் தெற்கில் உள்ள பிரதான நகரங்கள், கொழும்பு மற்றும் இடங்களில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளுவார்கள். பொருளாதார நிலைகளை தாக்கி அழிப்பார்கள். இராணுவ முக்கிய நிலைகள் மீது தாக்கி படையினரின் மனோபலத்தைக் குன்றவைப்பார்கள் என்பது குறித்து பலர் இடித்து உரைத்தும், சிங்கள அரசு தொடர்ந்தும் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டு வருகிறது.

ஆட்சேர்ப்பு நடவடிக்கையை கட்டாய இராணுவச் சேவையாக்க சட்டம் கொண்டு வரலாம் எனவும் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். இத்தாக்குதல் குடாநாட்டில் இனிவரும் நிகழ்வுகளை சூசகமாக எடுத்துக்காட்டுகிறது.

அது ஒருபுறமிருக்க சமீபத்தில் புதிதாக சேர்ந்தவர்கள் உடனடியாக சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள மல்லாகத்தில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் 18 பேர் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி பலியாகியினார்கள். 25 பேருக்கு அதிகமானோர் கால், கைகளை இழந்து படுகாயமுற்றனர். இது இராணுவத்தினரின் மனோநிலையை பாதித்து விட்டதாக சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரி ஒருவர் கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இராணுவத் தீர்விலேயே நாட்டமாய் இருக்கிறார் சந்திரிகா. அவர் புதிய பாதை பற்றி சிந்திப்பதாய் இல்லை. அவ்வாறான சிந்தனைக்கு அவர் எளிதில் வரமுடியாத அளவுக்கு இனவெறி அவரைத் தடுக்கிறது.

விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது. வெல்ல முடியாத இந்தப் போரில் தாம் அநியாயமாக இறக்க நேரும் என்கிற உணர்வு சிங்கள இளைஞர்கள் மத்தியில் பலமாக வேரூன்றத் தொடங்கியிருக்கிறது. இவ்வாறு, ஆட்சேர்ப்பு பல்வேறு அரசியல், சமூக, இராணுவ, போர்க் காரணிகளால் தோல்வியடைந்திருக்கிறது. இந்த நிலையை கல்வித் தகைமைகள், உடல் வலிமை என்பன பெரிதாக பார்க்கப்படாது என்ற விபரங்களும், பல்வேறு சலுகைகளும், கவர்ச்சிகரத் திட்டங்களும் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் அவை யாவும் சிங்கள இளைஞர் மத்தியில் அரசின் மீது வெறுப்புணர்வையே தோற்றுவித்திருக்கிறது. குறுகிய அரசியல் லாபங்களுக்காகத் தாம் பலிக்கடாக்கள் ஆவது என்ற உணர்வு பரவலாக ஏற்பட்டுள்ளது.

சிறிலங்கா ஆயுதப்படை சந்தித்து வரும் இழப்புக்களை மூடி மறைத்து வந்தாலும், உண்மைகள் கசியவே செய்கின்றன.

உலக நாடுகள் எல்லாம் திரிந்து ஓடெடுத்து பிச்சை வாங்கிக் கட்டிய பீரங்கித் தளங்கள் சரியும்; கோட்டைகள் குலுங்க புலிகள் சேனை நடக்கும் என்பது நிச்சயம். சிங்கள தேசத்தின் கிராமங்களின் மூலைவரை தொட்டுக் கொண்டிருக்கும் போரின் பாதிப்பு சிங்கள இளைஞர்களை பின்னிழுத்து நிறுத்துகிறது. இது சிறிலங்கா அரசின் அரசியல் இராணுவப் போக்கில் பல பின்னடைவுகளை கொண்டு வரும். ஆனாலும் குடாநாட்டைப் பிடித்துவிட்டோம், கிளாலியைப் பிடித்து புலிகள் நடமாட்டத்தைத் தடுத்துவிட்டோம்; ஆயிரம் புலிகளைக் கொன்றுவிட்டோம் என்று பத்திரிகைத் தணிக்கை மீது நின்று அரசு பிரச்சாரம் செய்யலாம். சிறீலங்கா இளைஞர்களை இராணுவத்தில் சேருமாறு பறைதட்டி அழைக்கலாம். இப்பிரச்சாரத்தின் நின்று பிடிக்கும் தன்மையை அவர்கள் நம்ப வேண்டுமே!

**- வாசன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## கிளிநொச்சி:

# கொழுந்துவிட்டெரியும் வேதனைத் தீ

கிளிநொச்சி தமிழீழத்தில் பெரு நிலப்பரப்பைக் கொண்ட மாவட்டங்களில் ஒன்று. தேர்தல் அரசியல் ஆரம்பித்த காலத்திலிருந்தே மற்ற எல்லா மாவட்டங்களையும் விட கிளிநொச்சியின் அபிவிருத்திக்கே அதிக நிதி ஒதுக்கவேண்டிய தேவை இருந்து வந்தது. 'சூரியக்கதிர்' இராணுவ ஆக்கிரமிப்பின் பின் கிளிநொச்சி மாவட்டம் ஒரு சில நாட்களில் பல இலட்சம் மக்களால் அடர்ந்து போனது. எப்படி இவ்வளவு பெருந்தொகை மக்கள் ஒரே நாளில் புலம் பெயர்ந்து போனது நம்பமுடியாத உண்மையோ அதே போல நம்பிக்கைகளின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நடைமுறைத் துயரங்களை இப்போது கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள். இம் மக்கள் மீது அரசும், கைக்கூலிகளும் பிரகடனப்படுத்தப்படாத போரொன்றை கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

உணவு, உடை, உறையுள் என்ற மூன்று அடிப்படைத் தேவைகளையும் ஒரே நேரத்தில் இழந்து போயுள்ள இம் மக்களின் வாழ்க்கையானது அழுகை, விரக்தி, கோபம், கவலை என மனிதரில் பிறக்கக்கூடிய எல்லா விதமான உணர்வுகளையும் வெளிப்படுத்தியும் பயன் எதுவுமே கிடைக்கவில்லை. தனது நெறியற்ற செயற்பாடுகளால் மனித உணர்வின் சகல பக்கங்களையும் தறித்து வீழ்த்தியிருக்கிறது. வீழ்த்திக் கொண்டிருக்கிறது சிறிலங்கா அரசு. ஆனால் இந்த அராஜகங்கள் எதையுமே இவர்கள் தற்செயலாகச் செய்யவில்லை. எல்லா நடவடிக்கைகளிலும் முன்னரே பேசிக்கொண்டது போல நிறைந்த ஒற்றுமை தெரிகிறது. ஆனால் வெளிப் பார்வைக்கு தற்செயலானது போன்ற ஒரு தோற்றத்தை கபடத் தனமாகப் பரவ விட்டிருக்கிறார்கள்.

இந்தக் கபட சூத்திரத்தனத்தின் உச்சக்கட்டச் செயற்பாடுகளை கிளிநொச்சி மாவட்டத்தில் சிறப்பாக அடையாளங்காண முடிகிறது. இம் மாவட்டத்தில் கால் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை 145 மில்லியன் ரூபாய்களாகும். ஆனால் இதுவரை வழங்கப்பட்ட தொகையோ வெறும் 20 மில்லியன் ரூபாய்கள் மட்டுமே. சூரியக்கதிர் நடவடிக்கையின் பின்னர் இங்கு மக்கள் தொகை பலமடங்காக அதிகரித்துள்ளது. இதற்கேற்ப அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டிய நிதி இருந்ததை விடப் பன்மடங்காகக் குறைக்கப்பட்டிருக்கிறது. சாதாரண பாவனைப் பொருட்களை வாங்குவதற்கு வேண்டிய பணத்தை மாற்றுவதற்குக் கூட வழியற்ற நிலையில் திரவநிலைப் பணம் கூட அங்கு சரியான புழக்கத்திலில்லை. 1000, 500 ரூபாய்களை மாற்றிப் பொருட்களை வாங்கும் பணச் சுழற்சிமுறையும் ஏறத்தாழ ஸ்தம்பித்த நிலையிலேயே உள்ளது. குழந்தைகள், நோயாளிகள், வயோதிபரென கங்குகரையின்றி நிறைந்து போயுள்ள மக்களின் ஏதிலி நிலையைச் சீரமைப்பதற்கான புனர்வாழ்வு வேலைகளே பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. இதுவரை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்குக் கொடுக்கப்பட்ட மனுக்கள் யாவுமே செவிப்புலன் இழந்தோரது படலையைத் தட்டிய கதையாய் போயுள்ளது.

அவலங்கள் எப்படியிருப்பினும் எதிர்கால சந்ததியின் கல்வி பாதிப்படையக் கூடாது என்பதற்காக விரைவாகப் பாடசாலைகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. மாற்றிக் கட்டவே இன்னொரு உடையில்லாத நிலையில் எத்தனையோ மாணவர்கள். ஆனாலும், "சீருடைகள் என்பது அவசியமில்லை; சாதாரண உடைகளுடனேயே மாணவர்கள் பாடசாலைக்கு வரலாம்!" என உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளார் கல்வியதிகாரி. ஏற்கனவே சேதமாக்கப்பட்டிருக்கும் பாடசாலைக் கட்டிடங்களில் இத்துணை பெருந்தொகையான மாணவர்களை உள்ளடக்குவது சிரமமானது, சாத்தியமற்றது எனினும் இரு நேரப் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தி, இடப்பற்றாக்குறைக்குத் தீர்வுகாண முற்பட்டுள்ளனர். கடந்த ஒன்பது மாதங்களாக ஊக்குவிப்புப் பணம்கூட வழங்கப்படாத நிலையில் ஆசிரியர்கள் கடமைக்குத் தயாராகியிருப்பது வேதனைக்குரிய நிஜமாகும்.

சனத்தொகை மீது ஏற்பட்ட திடீர் வெடிப்பால் பெருந்தொகை மக்களை ஏற்றுக்கொண்டுள்ள இப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பகுதிக்கு வேண்டிய தேங்காயெண்ணெய், துவிச்சக்கர வண்டிகள், டயர், டியூப், மரக்கறி வகைகள், உலர் உணவுப் பொருட்கள் போன்றவற்றை பலமடங்கு அதிகமாகப் பெற்றுக்கொள்ளத் தவறினால் மக்கள் வாழ்வது என்பதைவிட, குறைந்தபட்சம் உயிரைத் தப்பவைத்துக்கொள்வதற்கான வாழ்க்கையைக் கூட வாழமுடியாது போய்விடும். இவ் உண்மையைச் சுட்டிக்காட்டி அரச அதிபரினால் எழுதப்பட்ட கடிதம் பரிசீலனைக்குக்கூட எடுக்கப்படவில்லை. ஏறத்தாழ பொருட்களற்ற வெற்றுக் கட்டிடங்களாகக் காட்சியளிக்கும் கூட்டுறவுச் சங்கங்களை நெருங்கினால், கச்சேரியால் வருடாந்தம் வழங்கப்பட்டு வரும் இருபது மில்லியன் ரூபாய்களில் ஒற்றைச்சதம்கூட இதுவரை வழங்கப்பாடாமல் இருப்பது வேதனைத் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்கிறது.

இத்தனை நிதர்சனமான அவலங்களையும் தெரிந்தும் விழியற்ற குருடர்களாகி, தாண்டிக்குளத்தில் நின்று, கப்பப் பணம் கேட்டு சதுராடிக்கொண்டிருக்கிறது புளொட் குழு. இம் மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் கடுகளவையாவது பூர்த்தி செய்யும் நோக்குடன் உணவுப்பொருட்களை ஏற்றிவந்த லொறிகளை கப்பங்கேட்டு தடுத்து நிறுத்தியுள்ளனர் புளொட் குழுவினர். ஒவ்வொரு லொறிக்கும் தலா 3000 ரூபாவைச் செலுத்தவேண்டுமென வற்புறுத்துகின்றனர். எடுத்துச் சொல்லப்பட்ட மனிதாபமான காரணங்களை எல்லாம் இவர்கள் நிராகரித்து விட்டனர். இவ் உணவுப் பொருட்களை தாண்டிக்குளம் தாண்டி நகர்த்தும் பொருட்டு, உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் ஒப்பந்தகாரரான திருமதி மூவின் என்பவர் அரச அதிபர் மூலம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்புகொண்ட போதும் பலன் பூச்சியமே. "புளொட் குழுவிற்கு பணம் கட்டுவதில் எழுந்துள்ள பிரச்சனையையும் நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள்" என்றே பதில் கிடைத்தது.

புளொட்டின் கப்பம் கேட்கும் பிரச்சினையை அரசு தீர்ப்பதா? போக்குவரத்து ஒப்பந்தக்காரர் தீர்ப்பதா? என்ற விவகாரம் இழுபறிநிலையிலேயே கிடக்க, இடம்பெயந்தவர்கள் தங்குவதற்கான தற்காலிகக் கொட்டகைகளை அமைப்பதற்கான கிடுகுகளையும் புளொட் குழுவினர் வவுனியாவில் தடுத்து வைத்துள்ளனர். இவைகளைத் தந்து உதவும்படி யு.என்.எச்.சி.ஆரின் கிளிநொச்சிச் செயலகம் கேட்டுள்ளது. தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு இலட்சம் கிடுகுகளைக்கூட விடுவிக்க வழியற்ற நிலையில் யு.என்.எச்.சி.ஆர் இருப்பது கவலை தருகிறது. மேலும், 1995-ன் இராணுவ நடவடிக்கைகளினால் இத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட எண்ணற்ற நல்வாழ்வு நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இவற்றுள் யு.என்.எச்.சி.ஆரின் நுண்கருத்திட்டமும் அடங்கும்.

கல்வி, அத்தியாவசியப் பொருட்கள், வாழிடம் எனத் தொடரும் துயரங்கள் வைத்தியசாலைகளைக் கூட விட்டுவைக்கவில்லை. மருந்துப்பொருட்கள் தட்டுப்பாடுபற்றி இனிப்பேசுவதே மனித சக்தியின் வீண் விரயந்தவிர வேறொன்றல்ல என்றாகிவிட்டது. மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் தகவல்படி எம்.எஸ்.எப். என்னும் பிரான்சு மருத்துவக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சகல சத்திர சிகிச்சை நடவடிக்கைகளும் வைத்திய உபகரணம் பற்றாக்குறையால் நின்று போயுள்ளது. இனி சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களை வவுனியா வைத்திய சாலைக்கே எடுத்துச்செல்ல வேண்டுமெனக் கூறியுள்ளனர். சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டிய நோயாளரை தாண்டிக்குளம் தாண்டி வவுனியா எடுத்துச் செல்வதிலுள்ள சிரமங்கள் சத்திரசிகிச்சையைவிட பாரதூரமான அனுபவங்களைக் கொடுத்துவிடுமென்பதைச் சொல்லித் தெரியவேண்டுமென்பதில்லை. இந்நிலையில், "பிரான்சைச் சேர்ந்த இம்மருத்துவக் குழுவினர் தொடர்ந்தும் கிளிநொச்சியில் நிலைகொண்டிருப்பதில் ஏது பயன்?" என்று மாகாண பிரதிச் சுகாதாரப் பணிப்பாளரே கேள்வியெழுப்பியுள்ளார்.

இராணுவ ஆக்கிரமிப்பிற்குப் பலியாகாது, வெளியேறிய மக்களை எவ்விதம் பழிவாங்கலாம்? இராணுவம் முன்னேறிப் பாயமுடியாத இடங்களுக்கு, பாயக்கூடிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன? என்பதை சிறீலங்கா அரசு திட்டவட்டமாக நிரல்படுத்தியே செயற்படுத்துகிறது. இரட்டை நாக்குக் கொண்ட அரசு மக்களை அழிப்பதற்கும் இரட்டைத் தந்திரத்தையே கடைப்பிடிக்கிறது. நேரடியான இன அழிப்பிற்கு இராணுவ நடவடிக்கையையும் மறைமுகமான இன அழிப்பிற்கு அத்தியாவசிய சேவைகளையே சீர்குலைத்து, அதன்மூலம் தனது இன அழிப்பை தொடர்ந்தும் நடாத்திவருகிறது. சிறீலங்கா அரசு இவர்கள் எந்தத் துரோகத்தைச் செய்தாலும் அதற்கெல்லாம் துணைபோகும் தமிழ்த் துரோகக் குழுக்களின் நடவடிக்கைகளும் அவர்கள் உருவாக்கி விட்டிருக்கும் அவலங்களும் மனித வாழ்வையே சுட்டெரித்துக் கொண்டிருக்கிறது. இன்றைய கிளிநொச்சி மாவட்டம் இதற்கு அதிசிறந்த சாட்சியமாகிவிட்டது.

**— கி.செ.துரை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழகம்

www.tamilarangam.net

# தமிழர் சுதேசி மாநாடு




தமிழர் தேசிய இயக்கத்தின் 'தமிழர் சுதேசி மாநாடு' *23-03-96* அன்று மதுரை - வணிகர் சங்கப் பேரவை அரங்கில் நடைபெற்றது.

"தமிழ் மக்களைப் பற்றியும் தமிழீழத்தைப் பற்றியும் என் இறுதி மூச்சு இருக்கும் வரை பாடிக்கொண்டே இருப்பேன்" என்று கண்கள் கலங்கியபடி கூறிக்கொண்டே தேனிசை செல்லப்பா எழுச்சிப் பாடல்களைப் பாடினார். தமிழர் தேசிய இயக்கத்தின் 'தமிழர் சுதேசி மாநாட்டு'க்கு வந்து கலந்துகொண்டிருந்த மக்கள் தமிழிசை வெள்ளத்தில் மூழ்கினர். இம் மாநாட்டில் தமிழர் எழுச்சியை வெளிப்படுத்தும் ஓவியக் கண்காட்சியும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. தமிழீழத்தில் சந்திரிகா அரசு மேற்கொண்டிருந்த இராணுவ நடவடிக்கை மூலம் தமிழீழ மக்கள் அனுபவிக்கின்ற சொல்லொணாத் துயரம், தமிழகத்தில் கொதிநிலையை ஏற்படுத்தியிருக்கிறது. "தமிழன் விழித்தெழுந்து பகைவரை வீழ்த்த வேண்டிய நேரம் இதுவே" என தவத்திரு மதுரை ஆதினகர்த்தா குறிப்பிட்டதோடு இனமான உணர்வு கொண்டோரை வன்முறையாளர்களாக சித்தரிக்கும் ஆட்சியாளர் வஞ்சகமும், சூழ்ச்சியும் இனியும் எடுபடாது என்று சூளுரைத்தார்.

மாநாட்டில் தமிழகப் பிரச்சினைகள் தொடர்பான விரிந்த ஆய்வுரைகள் நிகழ்த்தப்பட்டன. தமிழரல்லாத பிற மாநிலத்தவர்கள், மார்வாடிகள் பல்லாண்டு காலத் தமிழரின் சொத்தாக விளங்கிய உப்புத் தொழிலை விழுங்கி வருவது பற்றியும் - வேற்று மொழிக் கலப்பினால் தமிழ் சீரழிவதைப் பற்றியும் - ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் எள்ளளவும் அக்கறைப்படாத நிலையில் தமிழியக்கங்கள், தமிழ் வழிக் கல்விக்கும், வேலைக்கும் போராடியாக வேண்டும் என்ற கருத்தும் அங்கு பலமாக முன்னெழுந்து நின்றது.

'தமிழே ஆட்சி மொழி', 'வழிபடும் மொழியாக தமிழ்', 'கலைத்துறையில் அந்நிய ஆதிக்கம்', 'தமிழகத்தில் தமிழனுக்கு மட்டுமே சொத்துரிமை', 'தமிழில் கடிதப்போக்குவரத்து', 'பெயர்ப்பலகைகளில் தமிழ்', 'தமிழர் ஆண்டு - மாதம் - கிழமை', 'தமிழ்ச் சித்த மருத்துவம் நவீனமயப்படுதலும் - மக்களிடம் கொண்டு செல்லலும்', 'தமிழன் என்று சொல்', ஆகிய விடயங்கள் குறித்து மாநாட்டில் விரிந்த ஆய்வுரை நிகழ்ந்தமை சிறப்பான செயற்பாட்டுக்கான முன்னேர்வே.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அப்துல் ரவூஃப்பின் நினைவில்



தமிழ் நாட்டில் தமிழ்த் தெருவில் தமிழன் இல்லை என்கிற குறைபாட்டைப் போக்கும் வகையில், தணியாத தமிழ்த் தியாகத்தோடும், தீராத ஈழவிடுதலை வேட்கையோடும் தன்னுயிர் ஈந்தான் அப்துல் ரவூப். அவனது 100-ம் நாள் நினைவேந்தல் கூட்டம் பெரம்பலூரில், உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தினரால் நடத்தப்பட்டது. அப்துல் ரவூப்பின் சொந்த ஊரான இலப்பைக்குடி காட்டிலுள்ள இம் மாவீரனின் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்ட "தியாக தீபத்தை" உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் இளைஞரணியைச் சேர்ந்த 25 பேர் 40 கி.மீ. தொடர் ஓட்டமாக எடுத்து வந்தனர். மேடையில் அப்துல் ரவூப்பின் தந்தையார் அத்தியாக தீபத்தைப் பெற்று மேடையில் அலங்கரிக்கப்பட்ட படத்தில் நிறுத்தினார். ரவூப்பின் படத்தை திரு. பழ. நெடுமாறன் அவர்கள் திறந்து வைத்தார். அதற்கருகில் தியாக தீபம் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

சிறப்புரை நல்கிய திரு. சேவியர் அருள்ராசு அவர்கள் நரசிம்மராவ் அரசு சிங்களப்படைக்கு மறைமுகமாய் உதவுவதும், தமிழினம் துன்புற்று அழிவதும் கண்டு பொறுக்காமல் மனங்குமுறிய அப்துல் ரவூப் படை நடத்த முடியாத காரணத்தால் மரணத்தைத் தெரிந்தெடுத்தான். எனவே அப்துல் ரவூப்பின் சாவுக்குக் காரணம் இந்திய அரசே என்று அவர் குற்றம் சாட்டினார்.

திரு. பழ. நெடுமாறன் தனது உரையில், வாழவேண்டிய வசந்த கால வயதில், தமிழினம் வாழ வேண்டும் என்று முடிவு செய்துள்ள அவரின் தியாகம் மகத்தானது. ஆறு கோடித் தமிழரின் இன உணர்வைக் கொழுந்து விட்டெரியச் செய்த தியாகி. அவரது இன உரிமை வேட்கைக்கு எதிராக இந்திய அரசு தொடர்ந்து செயல்படுமேயானால் அப்துல் ரவூப்பின் பெயரில் தமிழகத்தில் ஒரு படையைக் கட்டித் தமிழீழத்திற்கு அனுப்புவோம் என்றார்.

திலீபன் மன்றப் பொறுப்பாளர் திரு. தியாகு, ஈழத்துப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசியதோடு வீரத்தோடு போராடிச் சாவதற்கான வாய்ப்பு இல்லாத சூழலில், அப்துல் ரவூப் தீக்குளிக்க நேரிட்டது. ஈழம் அமைவதே இத்தியாகிக்கு நமது அஞ்சலியாகும் என்றார்.

திரு. மணியரசன் அவர்கள் குறிப்பிட்டு பேசியது போன்று இவ்வுனதத் தியாகியின் தீக்குளிப்பு தமிழனின் கடைசித் தீக்குளிப்பாய் முடியவேண்டும். பகைவனைச் சுட்டெரிக்கும் நெருப்பே நமக்குத் தேவை.

உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத் தலைவர் திரு. மெல்கியார் அவர்கள் தமிழின எழுச்சியை, நாம் அப்துல் ரவூப்பின் வடிவில் சந்திக்கிறோம். எம்மின விடுதலை முழக்கத்தை எந்த ஆதிக்க சக்தியாலும் சீர்குலைத்து விட முடியாது என்றார்.

'தமிழ் நாடு எங்கே?' எனும் வீதி நாடகமும் நிகழ்த்தப்பட்டது. தமிழின விரோத நடவடிக்கைகளில் இறங்கியுள்ள சிங்கள, இந்திய, தமிழக அரசுகளைக் கண்டித்தும் அப்துல் ரவூப்பின் பெயரில் சாலையமைக்க கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந் நூற்றாண்டில் தமிழினம் விழித்தெழாவிட்டால் இனி அதற்கென்று ஒரு எதிர்காலம் இல்லை என்பது மாநாட்டில் கலந்துகொண்டிருந்த தமிழ் உணர்வாளர்களது கருத்தாக இருந்தது.

"தேசிய இன உரிமைக்காக குரல் எழுப்புவதை பிரிவினைவாதம், பயங்கரவாதம் என்று ஆளும்வர்க்கங்கள் சித்தரிக்கின்றன. தமிழர்களை, தமிழ் மண்ணை, தாய் மொழியை பாதிப்புள்ளாக்கும் சிக்கல்களைப் பற்றி விவாதிப்பதை விட, உப்புச் சப்பில்லாத விடயங்களை இங்குள்ள கட்சிகள் விவாதிப்பது வேதனைக் குரியது. இந்திய, திராவிட மாயைகளிலிருந்து விடுபட்டு தமிழின விடுதலையில் ஒன்றுபட்டு நிற்போம்." என்ற அறைகூவலை அம் மாட்டில் திரு பழ. நெடுமாறன் அவர்கள் முன்வைத்தார்.

தமிழின எழுச்சி யுகத்தில் வாழும் தமிழரைப் பாதுகாக்கும் போர் மறவர்களாய்க் கிளம்புவதற்கு இம் மாநாடு பெரிதும் உதவும் என்று திரு. கா. பரந்தாமன் அவர்கள் வரவேற்புரையின் போது குறிப்பிட்டமையானது மிகையான கூற்றல்ல. அதற்கான புதிய சிந்தனைகள் தமிழக மக்கள் மத்தியில் வேர் கொள்ளத் தொடங்கியிருக்கிறது என்பதை மாநாடு வெளிப்படுத்தி நின்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நோர்வே ஒஸ்லோவில் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தனது நான்காவது ஆண்டு விழாவை கடந்த 17.03.96 ஞாயிறு 4 மணிக்கு வெகு சிறப்பாகக் கொண்டாடியது.

250-க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இக் கலைக்கூடத்தில் பல்வேறு வயதுப்பிரிவினரும் கலந்து சிறப்பித்த பாலர் நிகழ்ச்சி, சிறுவர் அபிநயம், மிருதங்க இசை, நடனம், சிறுவர் நாடகம், நிருகத்திய நாடகம், பேச்சு என்று பத்திற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகள் பார்வையாளர்களைக் பெரிதும் கவர்ந்தன.

விழாவிற்கு யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் அருட்திரு. ஜோசப் சந்திரகாந்தன் பிரதமவிருந்தினராகவும், நோர்வே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் குடிபெயர்ந்தவர் இலக்கா பொறுப்பதிகாரி BARBRO BAKKEN சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு விழாவுக்கென மாணவர்களிடையே நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி சிறப்புரையாற்றியிருந்தார். எண்ணூறுக்கும் அதிகமான பார்வையாளர்கள் திரண்ட ஆண்டு விழா 3 மணியளவில் இனிதே நிறைவுற்றது.



www.tamilarangam.net



இத்தாலி - றெஜியோ எமிலியா என்னும் இடத்தில் 11.04.1996 அன்று 'எமிலியா றோமானியா தமிழ்ச் சங்கத்தின'ரால் அன்னை பூபதி நினைவாக அங்கு வாழ் தமிழ்ச் சிறார்களின் நலன் கருதி திறந்துவைக்கப்பட்ட தமிழ்ப் பாடசாலை திறப்புவிழா நிகழ்வின் போது...



அன்னை பூபதி நினைவாக இத்தாலி - ஜெனோவாவில் 07.04.1996 அன்று நடைபெற்ற கலைவிழா நிகழ்வில்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Vasan Litho Printer (London) - 0181-6404366